www.Padasalai.Net www.CBSEtips.in

இப்பொழுது விற்பனையில்

# கவிமணி
# இன்பத்தமிழ்

கற்றலில் எளிமை! கற்பித்தலில் புதுமை!








- உரைநடை
- கவிதைப்பேழை
- விரிவானம்
- இலக்கணம்
- மொழிப்பயிற்சி

PTA and Public Exam
Question Papers Incorporated

12

2023-24

கல்வி ஆண்டிற்கான
புதிய பதிப்பு

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கவிமணி இன்பத்தமிழ்

## மேல்நிலை – இரண்டாம் ஆண்டு
## பொதுத்தமிழ்

**பேரன்புடையீர் வணக்கம்,**

கடந்த 29 ஆண்டுகளாகப் பள்ளி மாணவர்களுக்குரிய உரைநூல்களையும் மாதிரி வினா – விடை நூல்களையும் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகிறோம். இந்நூல்கள் அனைத்தும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி, பள்ளித்தேர்விலும் அரசு பொதுத்தேர்விலும் உயர் மதிப்பெண்கள் பெற உற்ற துணையாக அமையும்.

பாடநூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் எளியநடையில், சுருக்கமாக விடையளிக்கப்பட்டுள்ளன. பாடநூலை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் தேவையான அளவு கூடுதல் வினா–விடைகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்பித்தலில் நீண்ட நெடிய அனுபவம்மிக்க ஆசிரியர்களைக் குழுக்களாகக் கொண்டு, நூல்கள் அனைத்தும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்கள் சிலவற்றை, தங்களின் மேலான பார்வைக்கு இங்கே வழங்கியுள்ளோம். நூலைப் பார்வையிட்டு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி ஆசிரியர்களை அன்புடன் வேண்டுகிறோம். நன்றி! வணக்கம்!

**இவ்வுரை நூலில்...**

- கவிதைப்பேழை (செய்யுள்) : வினா – விடை
- உரைநடை : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- கற்பவை கற்றபின், செய்யுள்நயம் பாராட்டல்
- மொழியை ஆள்வோம், மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக
- கலைச்சொல் அறிவோம், மொழிப்பயிற்சி
- முதல் பருவம், காலாண்டுத் தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம் பருவம், அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள் மற்றும் மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.


# MERCY Publications
43, Bunder Street, Chennai - 600 001

நூல்களைச் சலுகை விலையில் மொத்தமாக வாங்க,
கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்
99415 16187 / 74492 00092 / 70102 31425

விலை : ரூ250.00


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| இயல் | | பொருளடக்கம் |
|---|---|---|
| 1. | செய்யுள் | இளந்தமிழே! |
| | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் |
| | செய்யுள் | தண்டியலங்காரம் – தன்னேர் இலாத தமிழ் |
| | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் – தம்பி நெல்லையப்பருக்கு |
| | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் |
| 2. | உரைநடை | பெருமழைக்காலம் |
| | செய்யுள் | பிறகொரு நாள் கோடை |
| | | நெடுநல்வாடை |
| | துணைப்பாடம் | முதல்கல் |
| | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் |
| 3. | உரைநடை | தமிழர் குடும்ப முறை |
| | செய்யுள் | விருந்தினர் இல்லம் |
| | | கம்பராமாயணம் |
| | துணைப்பாடம் | உரிமைத்தாகம் |
| | இலக்கணம் | பொருள் மயக்கம் |
| | வாழ்வியல் | திருக்குறள் |
| 4. | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் |
| | செய்யுள் | இதில் வெற்றி பெற |
| | | இடையீடு |
| | | புறநானூறு |
| | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் |
| | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் |
| 5 | உரைநடை | மதராசப்பட்டினம் |
| | செய்யுள் | தெய்வமணிமாலை |
| | | தேவாரம் |
| | | அகநானூறு |
| | துணைப்பாடம் | தலைக்குளம் |
| | இலக்கணம் | படிமம் |

www.Padasalai.Net

| இயல் | பொருளடக்கம் | |
|---|---|---|
| 6 | உரைநடை | திரைமொழி |
| | செய்யுள் | கவிதைகள் |
| | | சிலப்பதிகாரம் |
| | | தொல்காப்பியம் – மெய்ப்பாட்டியல் |
| | துணைப்பாடம் | நடிகர் திலகம் |
| | இலக்கணம் | காப்பிய இலக்கணம் |
| | வாழ்வியல் | திருக்குறள் |
| 7 | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை |
| | செய்யுள் | அதிசய மலர் |
| | | தேயிலைத் தோட்டப் பாட்டு |
| | | புறநானூறு |
| | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் |
| | இலக்கணம் | தொன்மம் |
| 8 | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் |
| | செய்யுள் | முகம் |
| | | இரட்சணிய யாத்திரிகம் |
| | | சிறுபாணாற்றுப்படை |
| | துணைப்பாடம் | கோடை மழை |
| | இலக்கணம் | குறியீடு |
| | ❖ | முதல் பருவம், காலாண்டுத் தேர்வு வினாத்தாள்கள் |
| | ❖ | இரண்டாம் பருவம், அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்கள் |
| | ❖ | நான்கு மாதிரி வினாத்தாள்கள் |
| | ❖ | மனப்பாடப்பகுதி |


www.Padasalai.Net

# இயல் – 1

## கவிதைப்பேழை

# 1. இளந்தமிழே !

(சிற்பி பாலசுப்பிரமணியம்)

### நம்மை அளப்போம்

### குறுவினாக்கள்

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணைவேண்டும் என்கிறார்? (Mar. - 20)

★ மலைமேட்டில் தலைசாய்க்கும் செங்கதிரால் சிவக்கும் வானம், உழைப்பில் சிவந்த கைகளை உடைய தொழிலாளர், அவர்தம் தோள்மீதில் முத்துமுத்தாக வீற்றிருக்கும் வியர்வைத் துளிகள் ஆகியவற்றைப்பற்றி வியந்துபாடத் தமிழின் துணைவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

### கூடுதல் வினாக்கள்

2. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" – யார், யாரைப் பற்றிக் கூறியது ? (PTA - 5)

➤ சிற்பி பாலசுப்பிரமணியம், தமிழ்த் தாயைப் பற்றிக் கூறியது.

3. மலைமேட்டில் தலைசாய்ப்பான் எவன்?

➤ மலைமேட்டில் தலையைச் சாய்ப்பவன் செம்பரிதி (சிவந்த சூரியன்).

4. செந்நிறத்துப் பூக்காடாவது எது?

➤ செந்நிறத்துப் பூக்காடாவது வானம்.

5. தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர்?

➤ செவ்வானம்போல் தம் கைகள் சிவந்து நோகுமாறு, தொழிலாளர் உழைக்கின்றனர்.

6. தொழிலாளர் வியர்வை வெள்ளம் எவ்வாறு வீற்றிருக்கும்?

➤ வியர்வை வெள்ளம், உழைக்கும் தொழிலாளரின் பருத்ததோள்மீது முத்துமுத்தாய் வீற்றிருக்கும்.

7. வியந்துபாடத் துணைநிற்பது எது?

➤ வியந்துபாடத் துணைநிற்பது, அருமைச் செந்தமிழ் அல்லால் வேறு இல்லை.

8. முத்தமிழ் எதற்கு உணவாய் உள்ளது?

➤ மூண்டுவரும் கவிதை வெறிக்கு, முத்தமிழ் உணவாய் உள்ளது.

9. முத்தமிழ் எங்கு, எப்போது கொலு இருந்தது?

➤ முன்னொரு காலத்தில், பாண்டியர் அமைத்த சங்கத்தில் முத்தமிழ், கொலு இருந்தது.

10. முத்தமிழ் எவரை ஈன்று தந்தது?

➤ பாரி முதலான வள்ளல்களை முத்தமிழ், ஈன்று தந்தது.

11. முத்தமிழ் ஈன்று தந்த வள்ளல்கள் யாவர்?

➤ அதியன், பாரி, காரி, பேகன், ஆய், ஓரி, நள்ளி ஆகியோர், முத்தமிழ் ஈன்று தந்த வள்ளல்கள் ஆவர்.

12. தமிழ்க்குயில் எதற்குக் கூவி வரவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?

➤ தமிழகத்தின் பழமையான நலன்களை எல்லாம் புதுப்பிப்பதற்குத் தமிழ்க்குயில் கூவி வரவேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

13. தென்தமிழ் எவ்வாறு சீறிவர வேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?

➤ அடைத்துள்ள கூண்டை உடைத்துக்கொண்டு, சிங்கத்தைப்போலத் தென்தமிழ் சீறிவர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**14. தமிழ்மொழியின் சிறப்புகளாக நீ அறிந்தன யாவை?**

➤ நம் அடையாளமாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும், தோன்றிய காலம்முதல் மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது தமிழ்மொழி. எத்திசையிலும் புகழோடு இலங்கும் தமிழ்மொழியின் பெருமையைப் புகழ்ந்து பாடாத மரபுக் கவிஞர்கள் இலர்.

**15. தமிழ்க் கவிஞர்களின் அவா யாது?**

➤ பல புதிய உள்ளடக்கங்களால் தமிழ் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு, பழஞ்சிறப்பையும் தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்பது, தமிழ்க் கவிஞர்களின் அவா ஆகும்.

**16. தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர்?**

➤ கதிரவன் மலைமுகட்டில் தலைசாய்க்கும் அந்திவேளையில் வானில் பரவும் செவ்வொளிபோல் தம் கைகள் சிவக்குமாறும், உடல் நோக உழைக்கும் தோள்களின்மேல் வியர்வைவெள்ளம் முத்து முத்தாக வீற்றிருக்குமாறும் தொழிலாளர் கடுமையாக உழைக்கின்றனர்.

## சிறுவினாக்கள்

**1. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்" – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

★ செங்கதிர்களைப் பரப்பும் மாலை நேரத்துச் சூரியன், மேற்கில் மலைமேட்டின்மேல் தலையைச் சாய்ப்பான். அவ்வேளையில், அந்தி நேரத்தில் வானம் முழுவதும் செந்நிறம் பரவும்.

★ அதே வேளையில், விண்ணில் மீன்கள் கண் சிமிட்டும். இக்காட்சி, நாளும் நடைபெறும்.

★ இதனைக் கண்டு சுவைத்த கவிஞர், நயமான சொற்களைக் கொண்டு, கவிதை பாடியுள்ளார்.

★ இந்த வரிகளைப் படிக்கின்றபோதே, மனக்கண்ணால் இக்காட்சியைக் கண்டு சுவைத்து மகிழ முடிகிறது.

**2. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே!<br>– நன்னூல். | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம். |

★ "பழையனவாகிவிட்ட சில நடைமுறைகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவதும், புதியனவாகிய சில நடைமுறைகள் பயன்பாட்டில் சேர்க்கப்படுவதும் குற்றம் ஆகாது; **காலத்திற்கு ஏற்ப மாறுதல்களை ஏற்றுக்கொள்வது கட்டாயமாகும்**" என்பது, முதல் பாடலால் பெறப்படும் செய்தி.

★ "அந்தப் பழமை நலத்தை மீண்டும் புதுக்குதற்கு, **உடல் சிலிர்த்து** எழுமாறு தமிழ்க்குயில் கூவி வரவேண்டும்" என்பது, இரண்டாம் பாடலின் இலக்கியச் சாரம்.

★ பழமை எல்லாம் தேவையற்றவை என்று ஒதுக்கிவிடவும் கூடாது. பழமையானவற்றுள்ளும் நலம் பயக்கும் பல செய்திகள் இருக்கலாம். பழமையைப் புதுக்குவதன்மூலம், **சமுதாயம் மறுமலர்ச்சி** பெறத் தமிழ் உதவ வேண்டும் என்பது கருத்து.

## கூடுதல் வினாக்கள்

**3. 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?** (Mar.-23)

★ மூதறிவாளர்களின் நெஞ்சிலே பூத்த தமிழ்மொழி, மொழிகளுள் மூத்த மொழியாகும். பாண்டியரின் சங்கத்தில் அத்தமிழ் வீற்றிருந்தது என்றால், தமிழின் தொன்மை புரியும்.

★ இக்கூற்றின் மூலம் கவிஞர் சிற்பி, 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி' என்ற கூற்றினை, வலியுறுத்துகிறார்.

★ பாரி, பேகன், ஓரி, ஆய், அதிகன், காரி, நள்ளி என்னும் வள்ளல்கள் தமிழால் உருவாயினர் என்று கவிஞர் சிற்பி, சுட்டிக்காட்டுவதன்மூலம் தமிழின் தொன்மையை எடுத்துரைக்கிறார்.

★ மீண்டும் அந்தச் சிறப்புகளைத் தமிழ் நாட்டிற்குத் தமிழ்மொழி தரவேண்டும் எனக் கவிஞர் தமிழை அழைக்கிறார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**4. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழைக் கூவி அழைப்பது ஏன்?**

- எதையும் வியந்து பாடும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.
- எதையும் பாட வேண்டும் என்கிற கவிதை வெறிக்கு உணவாக அமுதத்தமிழே அமையும்.
- அந்தத் தமிழே பாண்டியரின் சங்கத்தில் கொலு வீற்றிருந்தது.
- தமிழகத்தில் பாரி முதலான வள்ளல்கள் எழுவரை ஈன்றளித்தது.
- இவ்வகையில், தமிழ்ச் சமூகத்தில் பழமைநலத்தைப் புதுக்குவதற்கும், தமிழர்களை மெய்சிலிர்க்க வைத்துப் புத்தெழுச்சி பெறவைப்பதற்கும் தமிழ்க்குயில் கூவி வரவேண்டும்.
- அதற்குத் தடையாகச் சிறையிடப்பட்டிருந்தால், சிங்கம்போல் சிலிர்த்தெழுந்து கூண்டை உடைத்துக் கொண்டு வெளிவர வேண்டும் எனக் கவிஞர் சிற்பி கருதியதால், தமிழைக் கூவி அழைக்கிறார்.

**5. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் குறித்துக் குறிப்பெழுதுக.** **(PTA - 1)**

- பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், கவிஞர் எனப் **பன்முக ஆற்றல்** கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம். பாரதியார் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தவர்.
- ஒரு கிராமத்து நதி, நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி முதலிய **பல கவிதை நூல்கள்** இயற்றியவர். இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும் என்னும் **உரைநடை நூல்களையும்** எழுதியவர்.
- மலையாளக் கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்தவர். மொழிப்பெயர்ப்புக்காக ஒரு முறையும், '**ஒரு கிராமத்து நதி**' என்னும் கவிதை நூலுக்காக ஒருமுறையும் என, **சாகித்திய அகாதமி விருதை** இருமுறை பெற்றவர். இவர் நூல்கள், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

## நெடுவினா

**1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.** **(Sep.- 21, May - 22)**

"எம் அருமைச் செந்தமிழே!

செம்மையான கதிரவன், மலைமேட்டில் தலையைச் சாய்க்கும்போது, வானமெங்கும் **செந்நிறப் பூக்காடாகத்** தோன்றும். அந்தச் சிவப்பு நிறத்தைத் தங்கள் உடல் பெறுமாறு கடினமாக உழைக்கும் தொழிலாளரின் பருத்த தோள்களில், **வியர்வைத் துளிகள்** முத்துமுத்தாக அரும்பி நிற்கும்.

இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னையன்றிச் சிறந்த துணை வேறு இருக்கமுடியுமா? நீயே கூறுவாயாக! எம் உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்!

இயல், இசை, நாடகமென மூன்றாகத் தழைத்து வளர்ந்த தமிழே! முன்பு ஒரு காலத்தில் நீ, பாண்டியர் உருவாக்கிய சங்கத்தில் கொலு வீற்றிருந்தாய்! பாரி, காரி, ஓரி, ஆய், அதியன், நள்ளி, பேகன் என்னும் **ஏழு வள்ளல்களைப்** பெற்றெடுத்தாய்!

தமிழே! எம் மெய் சிலிர்க்குமாறு பழமை நலத்தைப் புதுப்பிப்பதற்காக நீ மீண்டும் குயிலாக வந்து, கூவ வேண்டும்! தென்றல் தவழும் குளிர்ந்த பொதிகைமலையில் தோன்றி வளர்ந்த தமிழே, தடைகள் இருந்தால் அவற்றை எல்லாம் கூண்டை உடைத்து எழுந்து வெளிப்படும் **சிங்கம்போல் சீறி வரவேண்டும்**" என்று, தமிழின் சீரிளமைத் திறம் வியந்து, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

## பலவுள் தெரிக

1. "மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" – கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் ______.

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

**விடை : ஈ) க, ங இரண்டும் சரி**

## கூடுதல் வினாக்கள்

2. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் (PTA - 4)
அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி
இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி
**விடை : ஆ) ஒரு கிராமத்து நதி**

3. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்? (PTA - 6)
அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி
**விடை : ஆ) சீறி**

4. "தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் : (May - 22)
அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) பாரதியார்
இ) சுரதா ஈ) பாரதிதாசன்
**விடை : அ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

5. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம்பெற்ற நூல் (Mar. - 20)
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்
**விடை : ஆ) நிலவுப் பூ**

6. 'முத்தமிழே' என்பது, ______ எனப் பிரியும்.
அ) முத் + தமிழே ஆ) மு + தமிழே
இ) முத்து + தமிழே ஈ) மூன்று + தமிழ் + ஏ
**விடை : ஈ) மூன்று + தமிழ் + ஏ**

7. 'குளிர்பொதிகை' என்பதன் இலக்கணக் குறிப்பு ______
அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை
**விடை : இ) வினைத்தொகை**

8. 'இயம்பிடாய்' என்பதில் அமைந்த பகுதி ______.
அ) இயம்பு ஆ) இயம்பி இ) இயம்ப ஈ) இயம்பிடு
**விடை : ஈ) இயம்பிடு**

## இலக்கணக்குறிப்பு

**செந்தமிழ், முத்தமிழ், செம்பரிதி, இளந்தமிழ், செந்நிறம்** – பண்புத்தொகைகள்
**முத்துமுத்தாய்** – அடுக்குத்தொடர்
**வியர்வைவெள்ளம், தமிழ்க்குயில்** – உருவகங்கள்
**சிவந்து, வியந்து, ஈன்று, கூவி, உடைத்து** – வினையெச்சங்கள்

## உறுப்பிலக்கணம்

1. **சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்**
**சாய்** – பகுதி; **ப்** – சந்தி; **ப்** – எதிர்கால இடைநிலை;
**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
2. **விம்முகின்ற – விம்மு + கின்று + அ**
**விம்மு** – பகுதி; **கின்று** – நிகழ்கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
3. **வியந்து – விய + த் (ந்) + த் + உ**
**விய** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
**உ** – வினையெச்ச விகுதி.

4. **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**

**இரு** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

5. **தந்தாய் – தா (த) + த் (ந்) + த் + ஆய்**

**தா** –பகுதி, 'த' ஆனது விகாரம்; **த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்**–இறந்தகால இடைநிலை;
**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

1. **செம்பரிதி – செம்மை + பரிதி**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – செம் + பரிதி, 'செம்பரிதி' எனப் புணர்ந்தது.

2. **வானமெல்லாம் – வானம் + எல்லாம்**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே', என்னும் விதிப்படி 'வானமெல்லாம்' எனப் புணர்ந்தது.

3. **உன்னையல்லால் – உன்னை + அல்லால்**

'உயிர்வரின்..... இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி – உன்னை + ய் + அல்லால்
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' என்னும் விதிப்படி–'உன்னையல்லால்' எனப் புணர்ந்தது.

4. **செந்தமிழே – செம்மை + தமிழே / செந்நிறம் – செம்மை + நிறம்**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – செம் + தமிழே / செம் + நிறம்
'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி செந் + தமிழே / செந் + நிறம்
'செந்தமிழே' எனப் புணர்ந்தது. / 'செந்நிறம்' எனப் புணர்ந்தது.

5. **வீற்றிருக்கும் – வீற்று + இருக்கும்**

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி – வீற்ற் + இருக்கும்
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – 'வீற்றிருக்கும்' எனப் புணர்ந்தது.

6. **எம்மருமை – எம் + அருமை**

'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி – எம்ம் + அருமை
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – 'எம்மருமை' எனப் புணர்ந்தது.

## கற்பவை கற்றபின்

1. **தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைக் கலந்துரையாடலாக நிகழ்த்துக.**

**பார்வதி** : மொழி என்பது, இங்குத் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் குறிக்கும். எனவே, மொழிவாழ்த்து என்பது, தமிழ்மொழியை வாழ்த்துதல் எனப் பொருள்படும்.

**காவியா** : நீ சொல்வது சரிதான் பார்வதி. மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கு மட்டும் துணைபுரியாமல், மக்களது அறிவை வளரச் செய்யவும் உதவுகிறது. தமிழ்மொழி என்பது தமிழர்களாகிய நமது அடையாளம்; நம் பண்பாட்டின் நீட்சி. அது தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.

**கலையரசன்** : அத்தகைய சிறப்புகளைப் பெற்ற மொழியைத் தெய்வமாகக் கருதி, அறிவைப் பெருக்க வேண்டி வாழ்த்துதல் அவசியம்தானே!

**கண்ணப்பன்** : இத்தகைய காரணங்களால்தான் தமிழ்மொழிப் பாடத்தில், மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கும், சிந்தனை ஆற்றலைத் தூண்டுவதற்கும் உற்ற துணையாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, மொழியைத் தெய்வமாகப் போற்றி வணங்குவதற்காக, மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெறச் செய்யப் பெற்றுள்ளது.

**பார்வதி** : மொழிவாழ்த்தைப் புரிந்து படித்து, மாணவர்களாகிய நாம் மொழித்திறனை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

www.Padasalai.Net

## உரைநடை உலகம்

# 2. தமிழ்மொழியின் நடை அழகியல்

(தி.சு.நடராசன்)

### நம்மை அளப்போம்

### குறுவினாக்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.** (Sep. - 21)

★ 'நடைபெற்றியலும்' என்றும் 'நடைநவின்றொழுகும்' என்றும் 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி" என்றும் நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**"கடாஅ யானைக் கலிமான் பேக" –**
**இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும், அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

**ஓசை நயமிக்க சொற்களை** – படாஅம், கெடாஅ, கடாஅ – செய்யுளிசை அளபெடைகள்.

**இலக்கணக்குறிப்பு** – இசைநிறை அளபெடை

**3. விடியல், வனப்பு – இருசொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

★ தன் செங்கதிர்களைச் சூரியன் பரப்பும் **விடியலில்**, கண்களையும் கருத்தையும் கவரும் ஒருவகை **வனப்பைக்** கீழ்வானத்தில் காணலாம்.

### கூடுதல் வினாக்கள்

**4. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?** (May-22, Mar.-23)

➤ மொழியின் இயல்பு வழக்குகளை உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை கலை இயல் வழக்குகளாக மாற்றுகின்றன.

**5. இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?** (Mar. - 23)

➤ உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை, மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

**6. அழகுணர்வு எவற்றை இலக்கியமாக ஆக்குகிறது?**

➤ உணர்வுநிலையினையும், அறிவுப்புலனையும் தனது ஆற்றலால் அழகுணர்வு இலக்கியமாக ஆக்குகிறது.

**7. தொல்காப்பியம் எவற்றைத் தன் உள்ளமைப்பாகக் கொண்டுள்ளது?**

➤ எழுத்து, சொல், செய்யுள் ஆகிய மூன்றையும், தொல்காப்பியம் தன் உள்ளமைப்பாகக் கொண்டுள்ளது.

**8. இலக்கியத்திற்குச் சிறப்புத்தன்மை தருபவை எவை?**

➤ மொழியின் தனித்துவமான பண்புகளும், மொழி சார்ந்த பொருள்களும் இலக்கியத்திற்குத் தனிச் சிறப்புத் தன்மையைத் தருபவையாகும்.

**9. இலக்கியத்தின் சிறப்புத்தன்மை எவ்வாறு பேசப்படுகிறது?**

➤ மொழிசார்ந்த கலையுணர்வு, கவிதைத்தனம் (Poeticalness) அல்லது இலக்கியத்தனம் (Literariness) என்று இலக்கியத்தின் சிறப்புத் தன்மை பேசப்படுகிறது.

**10. இலக்கிய உருவாக்கத்தில் எவை இடம்பெறவேண்டும்?**

➤ இலக்கியத்தின் பயன்களாகிய அறம், பொருள், இன்பமோ, வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளோ இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**11. கலைமுழுமை (artistic whole) என்பது என்ன?**

- இலக்கியத்தின் நோக்கம், அல்லது (அறம், பொருள், இன்பம் ஆகிய) அறவியல்சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின்போது சரிவர இணைந்திருக்கும் முழுமையே, கலைமுழுமை என்று கூறப்படுகிறது.

**12. சங்க இலக்கியம் எவற்றைப் பாடற் பொருள்களாக வடிவமைத்துள்ளது?**

- சங்க இலக்கியம், அகத்திணை சார்ந்த செய்திகளையும், புறத்திணைசார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது.

**13. மொழிசார்ந்த பொருள் எவ்வாறு மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது?**

- மொழியில் உள்ள சொற்கள், பேசப்படும் செய்திகள், மொழியின் தனித்துவமான பண்புகள் ஆகியவை, அழகியல் சார்ந்த சாதனமாக மாறும்போது, மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.

**14. இலக்கியம் எவற்றை அழகியல் சாதனமாக மாற்றுகிறது?**

- பேசுபவன், கேட்பவன் ஆகியோரின் தனிச்சூழல்கள் மட்டுமல்லாது, வரலாறு முழுக்க மொழியானது மனித நாக்குகளின் ஈரம் பட்டுக் கிடக்கிறது. இலக்கியம், அவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றுகிறது.

**15. தொல்காப்பியம் அகன் ஐந்திணைகளை எத்தகைய அறவியல் பொருள்களோடு இணைக்கிறது?**

- புணர்தல், பிரிதல் முதலிய அகன் ஐந்திணைகளைத் தொல்காப்பியம், இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'இலட்சியப்' பொருள்களோடு, இரண்டற இணைத்துவிடுகிறது.

**16. கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை எவை?**

- ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் மிகவும் முக்கியமானவை ஆகும்.

**17. கவிதையின் உந்து சக்திகளாக அமைவன எவை?**

- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்திகளாக அமைகின்றன.

**18. கவிதையின் இயங்காற்றல் என்பது எது?**

- கவிதைக்காக, இலக்கியத்துக்காக மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அந்த அழகியல் நடையே, கவிதையின் இயங்காற்றல் எனப்படும்.

**19. பாடலின் ஒலிப்பின்னல் (Sound texture) என்பது என்ன?**

- சமிக்ஞையிலிருந்தும் ஒலியிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி தொடங்குகிறது.
- மொழி சார்ந்த கவிதையும், இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே பாடலின் ஒலிப்பின்னல் (Sound texture) என்கிறோம்.

**20. பாடலின் தளத்தைப் பண்படுத்துவன யாவை?**

- பாடலின் தளத்தை ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பண்படுத்துகின்றன.

**21. தி. சு. நடராசன் இயற்றிய நூல்களைக் கூறுக.**

- கவிதையெனும் மொழி, திறனாய்வுக் கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் ஆகியவை, தி. சு. நடராசன் இயற்றிய நூல்களாகும்.

**22. இலக்கியங்கள் தமிழில் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன?**

- இழுமெனும் மொழியால், விழுமியது பயக்கும் வகையில் உயர்தனிச் செம்மொழியாம் தமிழில், இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**23. செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் யாது?**

- சமூக – பண்பாட்டு மரபிற்கு ஏற்பக் கலைப்படைப்பை, அழகியல் நெறியை, பண்பாட்டின் சிறப்புகளையெல்லாம் அறவியல் கருத்துகளோடு இணைத்துக் கூறுவதே, செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறமாகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**24. சொல்வளத்தின் சிறப்புகளைக் கூறுக.**

➤ ஒருபொருள் குறித்த பல சொல்லாய், பல பொருள் குறித்த ஒரு சொல்லாய் வருவதும், பல சூழல்களுக்கும் துறைகளுக்கும் புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் சொல்வளத்தின் சிறப்புகளாகும்.

**25. சொல்லில் பொதிந்து கிடப்பவை எவை?**

➤ சொல்லில் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

**26. சங்கப் பாடல்களின் முக்கியமான பண்பு எது?**

➤ சங்கப்பாடல்களில் உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப்பாடல்களில் காணப்படும் முக்கியமான ஒலிக்கோலப் பண்பாகும்.

**27. தொகைமொழி என்பது யாது?**

➤ தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு; அது வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறும்.

## சிறுவினா

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.**

(PTA-2, Sep. - 21, Mar.-23)

★ ஒலி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி தொடங்குகிறது.

★ மொழிசார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.

★ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கிறது.

சங்கப்பாடல்களில்,

'கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே" (புறம். 110)

★ என்ற வரிகளில், க, த, ட, ற என்ற வல்லின மெய்களில் உணர்ச்சியின் ஒலிக்கோலங் காணலாம்.

படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக. (புறம். 145)
புணரின் புணராது பொருளே....... (நற். 16)

★ இப்பாடல் வரிகளில், நெடில் ஒலிகளும் சில சொற்களும் மீண்டும் மீண்டும் திரும்பி வந்து, சொல் விளையாட்டு நிகழ்த்துவதைக் காணலாம். இவ்வாறு, சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க பண்பாக 'ஒலிக்கோலம்' அமைந்துள்ளதைக் காணலாம்.

## கூடுதல் வினாக்கள்

**2. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.** (Mar - 20)

➤ இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும். இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை எனப்படுகிறது.

➤ தொல்காப்பியமானது **புணர்தல், பிரிதல்** முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் **'லட்சியப்' பொருள்களோடு** இரண்டற இணைத்துவிடுகிறது. இது செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறமாகும். சமூக–பண்பாட்டு மரபிற்கு ஏற்பவே, கலைப்படைப்பை, அழகியல் நெறியை பண்பாட்டின் இலச்சினையாகச் சித்திரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்து முன்மொழிந்திருக்கிறது. தமிழ் **அழகியலின் நெடும்பரப்பு** இது.

**3. கவிதை மறுதலைத் தொடர் – சான்று தந்து விளக்குக.** (PTA - 6, Sep. - 20)

- பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்குகளில் தொடரமைப்பு என்பது "எழுவாய் + செயப்படு பொருள், அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை" என்று வருவது மரபு. ஆனால், **சங்கப் பாடல்கள் பலவற்றில் இம்முறை பிறழ்ந்து வருகிறது.** இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**சான்று :** "இடுக வொன்றோ, சுடுக வொன்றோ
படுவழிப் படுக இப்புகழ் வெய்யோன் தலையே" (புறநானூறு. 239)

- என்னும் பாடலின் இறுதி அடி பிறழ்வோடு அமைந்துள்ளது. இதற்கு முந்தைய ஒவ்வோர் அடியும் **மணந்தான், சூடினான், பேசினான், வழங்கினான் என நேர்பட**, தன்னிறைவோடு முடிகின்றன. இறுதியில் "**அவன் மறைந்தான்! புதைத்தால் புதை; சுட்டால் சுடு**" என இயல்பு நிலை பிறழ்ந்து வருகிறது. இதுவே, கவிதை மறுதலைத் தொடர் எனப்படுகிறது.

**4. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை" – இப்பாடலில் ஒலிக்கோலங்களின் பண்பை விளக்குக.** (May-22)

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம்.145)

- இவ்வடிகளில், உயிர் ஒலிகளுள், குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகைக்குப்பின், மேலும் **நீண்டு ஒலிப்பதும்** செய்யுளுக்குத் தனிச்சுவையைச் சேர்க்கிறது.
- அவ்வகையில், **சில ஒலிகளும், சில சொற்களும்,** திரும்பவரப் பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப் பெறும் **சொல் விளையாட்டுகளும்** கவனத்திற்குரியன. ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் நிகழ்த்தப் பெற்றுள்ளமையையும் தெளியலாம்.

**5. 'தொடரியல் போக்குகள்' குறித்து விளக்குக.**

- ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன. எனினும் தொடரியல் வடிவம், **பாத்தி கட்டி வரப்பு உயர்த்தும்** பணிகளைச் செய்கிறது. பேசுவோருடைய மொழித்திறன் என்பது கேட்போர், வாசிப்போருடைய உளப்பாடாக (Purport) மறித்தாக்கம்பெற (transform) வேண்டும். பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்ப, தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும், திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.
- உரைநடையும் பேச்சும் உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடர் அமைப்பு என்பது, **"எழுவாய் + செயப்படுபொருள் பயனிலை"** என்று வருவதே மரபு. இந்த அமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. இதனைக் **கவிதை மறுதலைத்தொடர்** (Poetic inversion) என்பர்.

**6. பேரெயின் முறுவலார் பாடலால் பெறப்படும் தொடரியல் குறித்து விவரிக்க.**

- நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது குறித்து பேரெயில் முறுவலார் பாடிய பாடல் தொடரியல் பிறழ்வு நிலைக்கு பெரிதும் காணப்படுவதற்குச் சான்றாக உள்ளது.
- "**தொடியுடை தோள் மணந்தனன்**" எனத் தொடங்கி, ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவாக முடிகின்றன. பதினெட்டுப் பண்புகளை வரிசைப்படுத்திக் கூறிய பிறகு, தொகுத்துச் சொல்வதுபோல் **"ஆங்கு செய்பவெல்லாம் செய்தனன் ஆகலின்"** எனக் கூறிவிட்டு, முத்தாய்ப்பாக முடியும் பாடலில் இறுதியில்

"இடுக வொன்றோ! சுடுக வொன்றோ!
படுவழிப் படுக! இப்புகழ் வெய்யோன் தலையே!"

என முடிக்கிறார். இதில் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது.

- அதாவது, "போடா போ! புதைத்தால் புதை, சுட்டால் சுடு" என அலுத்துக் கொள்கிறார். இறுதி அடிகளில் ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வு அமைந்திருக்கிறது. பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத் துணைபுரிகிறது.

www.Padasalai.Net www.CBSEtips.in


## நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**(PTA -1, Sep. - 20, Mar.-23)**

அழகியலை உருவாக்கத் தளம் அமைத்துத் தருகின்றது தொல்காப்பியம். எழுத்தையும் சொல்லையும் போன்று, செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

**மொழிசார் கலை :**

உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலியவை, மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன. மொழியின் தனித்துவமான பண்புகள், மொழிசார்ந்த கவிதைக் கலையாக ஆகிறது.

**கவிதையின் நடையியல் கூறுகள் :**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவையாகும்.

**ஒலிக்கோலங்கள் :**

மொழி, சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் உருவாகிறது. கவிதையும் இசையோடு பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் பெறுகிறது. இதனையே பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

“கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே” (புறம். 110)

என்னும் பாடல் வரிகளில் அமைந்த வல்லினமெய்கள், உண்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன. இதனால் ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்து கொள்ளலாம்.

“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
கடாஅ யானைக் கலிமான் பேக” (புறம். 145)
“புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே” – (நற். 16)

இப்பாடல் வரிகளில், உயிர் நெட்டொலிகளும், சில சொற்களும் திரும்பவரல் தன்மையால் நிகழும் ஒலிக்கோலம், சங்கப் பாடல்களில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

**சொற்புலமும் தொடரியல் போக்குகளும் :**

சொல்வளத்தில்தான், உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகவும், துறைகளுக்கும் சூழல்களுக்கும் புனைவுகளுக்கும் சொல்லே களமாய் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைக்கலியில் காளைகளின் இனம் பற்றிய சொற்களும், ‘கிடை’ என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களும் பல பெயர்களில் காணப்படுகின்றன. தனிச்சொல்லாகவும் தொகைமொழியாகவும் வாக்கிய அமைப்பில் சொற்புலம் காணப்படுகிறது. ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தைப் பண்படுத்துகின்றன. தமிழ் அழகியல் நடையைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாகும்.

**2. ‘சொல்லோவியங்கள்’ என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.**

**கவிதை நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

| | | |
|---|---|---|
| **வரவேற்புரை** | : | முகில்வண்ணன் |
| **நூல் அறிமுகம்** | : | கவிஞர் – செல்வம் |
| **நூல் வெளியீடு** | : | பள்ளித் தலைமை ஆசிரியர் |
| **நூல் பெறுபவர்** | : | கவிஞர் – எழிலரசன் |
| **நன்றியுரை** | : | ‘சொல்லோவியங்கள்’ ஆசிரியர் |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

நாட்டுப்பண்

நன்றியுரை

என்னால் உருவாக்கப்பெற்ற கவிதைநூலை வெளியிடுவதற்குத் திரண்டுள்ள அனைவருக்கும் வணக்கம். நூலின் சிறப்பு, அதனை அறிமுகம் செய்யும் வகையில் திறனாய்வு செய்பவர் கையில்தான் உள்ளது. அந்தவகையில் நூலின் நிறைகுறைகளை ஆய்ந்து பாராட்டிய கவிஞர் செல்வம் அவர்க்கு நன்றி. கூட்டத்தினரை வரவேற்ற முகில் வண்ணனுக்கு நன்றி. என் பணியைப் பாராட்டி இந்நூலை வெளியிட முன்வந்த பள்ளித் தலைமை ஆசிரியருக்கு நன்றி. என் கவிதை நூலைப் பெற்றுப் பெருமைப்படுத்தியதோடு, அரிய செய்திகளைக் கூறிப் பாராட்டிய கவிஞர் எழிலரசனுக்கும் அன்புகலந்த நன்றி. இந்த விழாச் சிறப்புடன் அமையத் தேவையான பணிகளை நிறைவாகச் செய்த அனைவருக்கும் நன்றி.

## பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ______.

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

**விடை : இ) தொல்காப்பியம்**

2. **கருத்து 1 :** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. (PTA - 5, Sep. - 21)

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்துகளும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

**விடை : இ) இரண்டு கருத்துகளும் சரி**

3. பொருத்துக. (PTA - 2)

அ) தமிழ் அழகியல் – 1. பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ – 2. தி. சு. நடராசன்
இ) கிடை – 3. சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி – 4. கி. இராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை : ஈ) 2, 3, 4, 1**

## கூடுதல் வினாக்கள்

4. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.
1. அழகியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.
2. இலக்கியம் என்பது, மொழிசார்ந்த பொருளாகும்.

மேற்கூறியவற்றில் தவறானதைக் கண்டறிக.

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை

**விடை : ஆ) 2 மட்டும்**

5. 1. சங்க இலக்கியம், அகம், புறம் சார்ந்த செய்திகளைப் பாடற்பொருளாகக் கொண்டுள்ளது.
2. ஓசையும் பொருளும் இணைந்து, கலைவடிவம் கொள்கின்றன.

மேற்கூறியவற்றில் சரியானதைக் கண்டறிக.

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டுமில்லை

**விடை : இ) இரண்டும் சரி**

6. கவிதையின் இயங்காற்றல் என்பது ______.

அ) ஒலி ஆ) சொல் இ) பொருள் ஈ) நடை

**விடை : ஈ) நடை**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


7. அழகின் ஆற்றல் உணர்வு நிலையினையும் ______ இலக்கியம் ஆக்குகிறது.
அ) உண்மையையும் ஆ) ஒளியையும்
இ) எண்ணத்தையும் ஈ) அறிவுப் புலமையையும்
**விடை : ஈ) அறிவுப் புலமையையும்**

8. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ______ ஓர் உள்ளமைப்பாகக் கருதுகிறது.
அ) அகத்தியம் ஆ) புறநானூறு இ) தொல்காப்பியம் ஈ) நற்றிணை
**விடை : இ) தொல்காப்பியம்**

9. இலக்கியம் என்பது ______.
அ) மொழிசார் கலை ஆ) மொழியின் தனித்துவம்
இ) மொழியின் இயல்பு ஈ) அழகியல் சாதனம்
**விடை : அ) மொழிசார் கலை**

10. மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்றமட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது ______.
அ) வரலாறு ஆ) மனித நாக்குகள் இ) மொழிசார் கலை ஈ) இலக்கியம்
**விடை : ஈ) இலக்கியம்**

11. அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது ______.
அ) தொல்காப்பியம் ஆ) புறநானூறு இ) அற இலக்கியம் ஈ) சங்க இலக்கியம்
**விடை : ஈ) சங்க இலக்கியம்**

12. கலைப் படைப்பை, அழகியல் நெறியை ______ சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது.
அ) இலக்கிய மரபாக ஆ) வரலாற்றுச் செய்தியாக
இ) பண்பாட்டின் இலச்சினையாக ஈ) அறவியல் கருத்துகளாக
**விடை : இ) பண்பாட்டின் இலச்சினையாக**

13. ‘நடை’ என்பது கவிதையின் ______.
அ) மொழியாற்றல் ஆ) கவிதையாற்றல் இ) இயங்காற்றல் ஈ) சொல்லாற்றல்
**விடை : இ) இயங்காற்றல்**

14. சரியான விடை தேர்க.
1. சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் எந்தத் தொன்மையான மொழியும் தொடங்குகிறது.
2. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை இயக்குகிறது.
3. இசையோடும் இசைக்கருவியோடும்தான் மொழிசார்ந்த கவிதை பிறக்கிறது.
4. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
அ) 1, 2, 3 சரி ஆ) 2, 3, 4 சரி இ) 1, 2, 4 சரி ஈ) 1, 3, 4 சரி
**விடை : ஈ) 1, 3, 4 சரி**

15. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதனையே அந்தப் பனுவலின் – பாடலின் – ______ என்கிறோம்.
அ) இயங்காற்றல் ஆ) கலைமுழுமை
இ) ஒலிப்பின்னல் ஈ) கவிதைப்பின்னல்
**விடை : இ) ஒலிப்பின்னல்**

16. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.
1. சொல்வளம், ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது.
2. தொடரியல் பிறழ்வு, சங்கப் பாடல்களில் காணப்படவில்லை.
மேற்கூறியவற்றில் தவறானதைக் கண்டறிக.
அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டுமில்லை
**விடை : ஆ) 2 மட்டும்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

17. 'அழகின் சிரிப்பு' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) நாமக்கல் கவிஞர்

விடை : ஆ) பாரதிதாசன்

18. "அந்நில மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப"
இந்நூற்பா இடம்பெறும் இலக்கண நூல் ______.
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
இ) யாப்பருங்கலம் ஈ) யாப்பருங்கலக்காரிகை

விடை : ஆ) தொல்காப்பியம்

19. ஒருபொருள் குறித்துவரும் பலசொல்
பலபொருள் குறித்துவரும் ஒருசொல் என்பது ______ எனப்படும்.
அ) ஒலிக்கோலம் ஆ) சொல்வளம்
இ) சொற்றொடர்நிலை ஈ) சொற்பொருள் தொடர்நிலை

விடை : ஆ) சொல்வளம்

20. 'தமிழ் அழகியல்' என்ற நூலின் ஆசிரியர் ______.
அ) மா. இராசமாணிக்கம் ஆ) வா. வே. சுப்பிரமணியம்
இ) தி. சு. நடராசன் ஈ) சிற்பி. பாலசுப்பிரமணியம்

விடை : இ) தி. சு. நடராசன்

21. பேரெயின் முறுவலார் பாடலில், தொடரியல் பிறழ்வு பெரிதும் காணப்படுவது ______.
அ) பாடலின் முதலில் ஆ) பாடலின் நடுவில்
இ) பாடலின் இறுதியில் ஈ) பாடலின் மூவிடத்தும்

விடை : இ) பாடலின் இறுதியில்

22. சங்கப் பாடல்களில் அமைந்த முக்கியமான ஒரு பண்பு ______.
அ) இசைநயம் ஆ) சொல்நயம் இ) ஒலிக்கோலம் ஈ) ஓசைநயம்

விடை : இ) ஒலிக்கோலம்

23. கூற்று 1 : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
கூற்று 2 : சொல்வளம் என்பது, தனிச் சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்; ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.
அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி
இ) இரு கூற்றுகளும் தவறு ஈ) இரு கூற்றுகளும் சரி

விடை : ஈ) இரு கூற்றுகளும் சரி

24. கூற்று : மொழியில் காணப்படும் சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது.
காரணம் : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன; கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
அ) கூற்று, காரணம் தவறு ஆ) கூற்றும் காரணமும் சரி
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை : ஆ) கூற்றும் காரணமும் சரி

25. 'நீர்படு பசுங்கலம்' என்பது ______.
அ) தொகாமொழி ஆ) பெயரெச்சம் இ) வினைத்தொடர் ஈ) தொகைமொழி

விடை : ஈ) தொகைமொழி

26. பாடலின் இறுதியில் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுவதற்குச் சான்றான பாடலைப் பாடியவர் ______.

அ) நம்பி நெடுஞ்செழியன் ஆ) பேரெயின் முறுவலார்

இ) தொல்காப்பியர் ஈ) ஔவையார்

**விடை : ஆ) பேரெயின் முறுவலார்**

27. தொடியுடைய தோள் மணந்தவன் ______.

அ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆ) சேரன் செங்குட்டுவன்

இ) பேரெயின் முறுவலார் ஈ) நம்பி நெடுஞ்செழியன்

**விடை : ஈ) நம்பி நெடுஞ்செழியன்**

## கற்பவை கற்றபின்

**1. கவிஞர் பாரதிதாசனின் அழகின்சிரிப்பு – குன்றம் – ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச் சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

### குன்றம் – மாலை வானும் குன்றமும் :

தங்கத்தை உருக்கி விட்ட வானோடை தன்னிலே ஓர்
செங்கதிர் மாணிக் கத்துச் செழும்பழம் முழுகும்மாலை
செங்குத்தாய் உயர்ந்த குன்றின் மரகதத் திருமேனிக்கு
மங்காத பவழம் போர்த்து வைத்தது வையம் காண!

### ஒளியும் குன்றும்

அருவிகள் வயிரத் தொங்கல்!
அடர்கொடி பச்சைப் பட்டே!
குருவிகள் தங்கக் கட்டி!
குளிர்மலர் மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை
நிலவுமேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ!

பாரதிதாசனின் கற்பனை உணர்வு, அவர்தம் கவிதைகளில், சிறந்த சொற்றொடர்களாகக் காட்சி அளிக்கின்றன. கதிரவனின் ஒளியால் வானில் தெரியும் இயற்கைக் காட்சியைத் தங்கத்தை உருக்கி ஓடவிட்டது போன்ற காட்சியாக வானோடையை உருவகிக்கிறார். மாலைக் காலத்தில் கதிரவன் ஒளி குன்றின்மீதும் மரம் செடி கொடிகள்மீதும் படும்போது, பச்சைநிறக் காட்சியும் பவழம்போன்ற சிவந்த கதிர் ஒளியும் வையகம் காணும் இனிய காட்சியாகக் கற்பனை செய்துகாட்டும் பாங்கு போற்றுதற்குரியது.

'ஒளியும் குன்றும்' என்னும் பாடலில், அருவிகளின் நிறமும், ஒடுகிற அவற்றின் வீச்சும்தான் கவிஞன் சொல்கிற முறையில் கவித்துவமாகிறது.

அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்செடி பச்சைப் பட்டே
குருவிகள் தங்கக் கட்டி
குளிர்மலர் மணியின் குப்பை

எனக் கவிஞரின் உள்ளத் துடிப்பை இனிய சொற்கள் காட்டுகின்றன. கவிதையின் சக்தி அழகுச் சக்தியாக மாறுகிறது. வயிரத்தொங்கல், பச்சைப்பட்டு, தங்கக்கட்டி, மணியின் குப்பை, தங்கத் தகடுகள் என்று கூறும்போது, காட்சி அமைப்பும் சொற்களும் இனிய கவித்துவமாக மாறுகிறது. கவிதையே, இனிய காட்சி வடிவில் அமைந்து, காலங்கடந்து நிலைத்த புகழ் பெறுகிறது. உணர்ச்சி மலர்கிறது; கற்பனை விரிகிறது; இனிய படைப்பை மொழி பெறுகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. **தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

| யானை | மலர்கள் |
|---|---|
| யானை, வேழம், களிறு, கரி, களபம், மாதங்கம், கைம்மா, ஆனை, குஞ்சரம், வாரணம், நால்வாய், கயம், வயமா. | பூ, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ, மொட்டு, முகிழ், பொதும்பர், பொம்மல், செம்மல், அனிச்சம், கண்ணி, காந்தள், காயா, குரவம், முல்லை, குறிஞ்சி, குவளை, கொன்றை, சண்பகம், தாமரை, தாழை, தும்பை, நெய்தல், பாலை, பிடவம், புன்னை, மருதம், வள்ளி, வஞ்சி, வாகை, வேங்கை போன்றவற்றுடன் 96 வகையான பூக்கள். |

## கவிதைப்பேழை

# 3. தன்னேர் இலாத தமிழ்

### (தண்டியலங்காரம்)

### நம்மை அளப்போம்

### கூடுதல் குறுவினாக்கள்

1. **தமிழ் மொழியானது எத்தகைய வலிமை வாய்ந்தது?** (PTA - 3)
   - தமிழ் மொழியானது பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, உலகின் புற இருளைப் போக்கும் ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பாகவும், அதற்கு மேலாக மக்களின் அக இருள் போக்கும் வலிமை வாய்ந்ததும் ஆகும்.
2. **தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** (PTA - 6)
   - தமிழ்மொழி, தொன்மையான இலக்கியங்களைப் பெற்று உயர்தனிச் செம்மொழியாகத் திகழ்வது.
   - பொதிகை மலையில் தோன்றிச் சான்றோரால் தொழுது வணங்கப்பட்டு, உலக மக்களின் அறியாமை என்னும் அகஇருளைப் போக்கி, ஒப்புமை இல்லாததாகத் திகழ்வது.
3. **வெங்கதிருக்கும் தமிழுக்கும் உள்ள வேற்றுமை என்ன?**
   - வெங்கதிரான சூரியன், உலகின் புற இருளை மட்டுமே போக்கும். ஒப்புவமை இல்லாத தமிழ், மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்கும் தனிச் சிறப்புடையது.
4. **பொருள் வேற்றுமை அணியாவது யாது?**
   - இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றிடையே உள்ள வேற்றுமையைக் கூறுவது, பொருள் வேற்றுமை அணி எனப்படும்.
5. **அணி இலக்கணத்தைமட்டும் கூறும் இலக்கண நூல்கள் எவை?**
   - தண்டி அலங்காரம், மாறன் அலங்காரம், குவலயானந்தம் என்பன அணி இலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களாகும்.
6. **அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் எவை?**
   - தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியன அணி இலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்களாகும்.
7. **தண்டியலங்காரத்தின் முப்பெரும் பிரிவுகள் யாவை?**
   - பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்பன தண்டியலங்காரத்தின் முப்பெரும் பிரிவுகளாகும்.
8. **தமிழின் பரப்பையும் விரிவையும் ஆழத்தையும் புலவர் எவ்வாறு போற்றுவர்?**
   - தமிழின் பரப்பை நிலத்தினும் பெரியது என்றும், விரிவை வானினும் உயர்ந்தது என்றும், ஆழத்தைக் கடலினும் ஆழமானது என்றும் புலவர் போற்றுவர்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## சிறுவினா

**1. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக. (PTA - 1,2, Mar.-20)**

**இடம் :** "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" என்னும் அடி, தண்டி அலங்காரம் என்னும் அணி இலக்கணநூல் **உரைமேற்கோள் பாடலில்** இடம்பெற்றுள்ளது.

**பொருள் :** தமிழுக்கும் கதிவரனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கூறும் இத்தொடருக்கு, "ஒலிக்கும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட **உலகத்தில் இருள் போக்கும்**" என்பது பொருள்.

**விளக்கம் :** சூரியன், தன் கதிர்களால் உலகில் பரவியுள்ள புற இருளைப் போக்கும்; தமிழோ, மக்களின் அக இருளைப்போக்கி, அறியாமையை அகற்றும் சிறப்புடையது என்பதாம்.

## கூடுதல் வினாக்கள்

**2. 'தன்னேர் இலாத தமிழ்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (May - 22)**

**இடம் :** தண்டியலங்காரம் என்னும் நூலின் 'உரை மேற்கோளாக இடம்பெற்ற பாடலில்' இத்தொடர் இடம் பெற்றுள்ளது

**பொருள் :** "தனக்கு நிகரில்லாத தமிழ்" என்பது இத்தொடரின் பொருள்.

**விளக்கம் :** பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அக இருளாகிய அறியாமையைப் போக்குவதோடு உலக இருளைப் போக்கும் கதிரவனுக்கும் ஒப்புவமை இல்லாதது தமிழ் எனக் கூறப்பட்டுள்ளது.

**3. பொருள் வேற்றுமை அணியை விளக்குக. (Sep. - 22)**

**இலக்கணம் :** செய்யுளில் இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், அவற்றை ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறுவது, 'பொருள் வேற்றுமை அணி'யாகும்.

**எ – கா :** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**விளக்கம் :** இப்பாடலில் தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன்சார்ந்த ஒற்றுமை முதலில் கூறப்பட்டது. பின்னர், அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது எனும் தன்மை, வேறுபடுத்திக் காட்டப்பட்டது. எனவே, இப்பாடலில் 'வேற்றுமை அணி'யின் ஒரு பிரிவான 'பொருள் **வேற்றுமை அணி**' அமைந்துள்ளது.

**4. 'தண்டியலங்காரம்' குறித்து நீ அறிவன யாவை?**

- அணியிலக்கணம் குறித்துச் சிறப்பாக விவரித்துரைக்கும் நூல்களுள் ஒன்று தண்டியலங்காரம்.
- '**தண்டி**' என்பார் பாடிய '**அலங்காரம்**' என்பது பொருள்.
- '**காவியதர்சம்**' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.
- இதனை இயற்றியவர், கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'தண்டி' ஆவர்.
- பொதுவியல், **பொருளணியியல், சொல்லணியியல்** என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- உரையாசிரியர் பலர், இந்நூலைச் சான்றுகளாக எடுத்தாண்டுள்ளமை சிறப்பாகும்.

## பலவுள் தெரிக

1. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது (PTA - 1)
தன்னேர் இலாத தமிழ்" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம் ______.

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

**விடை : இ) அடிஎதுகை, சீர்மோனை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

2. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல் ______. (May - 22)
அ) முத்து வீரியம் ஆ) தொல்காப்பியம்
இ) தண்டியலங்காரம் ஈ) வீர சோழியம்

**விடை : இ) தண்டியலங்காரம்**

3. வெங்கதிர் – இலக்கணக் குறிப்பைக் கண்டறிக. (Sep. - 21)
அ) பண்புத்தொகை ஆ)வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : அ) பண்புத்தொகை**

4. அணி இலக்கணத்தைமட்டுமே கூறும் நூல்களுள் ஒன்று ______.
அ) வீரசோழியம் ஆ) இலக்கணவிளக்கம்
இ) முத்துவீரியம் ஈ) குவலயானந்தம்

**விடை : ஈ) குவலயானந்தம்**

5. அணி இலக்கணத்தையும் கூறும் நூல்களுள் ஒன்று ______.
அ) தண்டியலங்காரம் ஆ) வீரசோழியம்
இ) குவலயானந்தம் ஈ) மாறனலங்காரம்

**விடை : ஆ) வீரசோழியம்**

6. தண்டியலங்காரம், ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இயற்றப்பட்டது.
அ) முத்துவீரியம் ஆ) குவலயானந்தம் இ) காவியதர்சம் ஈ) மாறனலங்காரம்

**விடை : இ) காவியதர்சம்**

7. ‘தனியாழி’ என்பது, ______ புணர்ச்சி வகைக்குச் சான்றாகும்.‘
அ) பண்புப்பெயர் ஆ) குற்றியலுகர இ) உடம்படுமெய் ஈ) திசைப்பெயர்

**விடை : இ) உடம்படுமெய்**

8. ‘ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி’ – இத்தொடரில் இடம்பெற்றுள்ள வினையெச்சங்கள் ______.
அ) ஓங்க, வந்து, தொழ ஆ) ஓங்கல், உயர்ந்த, வந்து
இ) உயர்ந்தோர், தொழ, விளங்கி ஈ) வந்து, தொழ, விளங்கி

**விடை : ஈ) வந்து, தொழ, விளங்கி**

9. ‘தன்னேர் இலாத தமிழ்’ என்னும் பாடலில் அமைந்துள்ளது ______.
அ) பொது வேற்றுமை அணி ஆ) சொல் வேற்றுமை அணி
இ) பொருள் வேற்றுமை அணி ஈ) இடவேற்றுமை அணி

**விடை : இ) பொருள் வேற்றுமை அணி**

10. “ஏங்கொலிநீர்’ என்னும் தொடரின் சரியான பிரிப்பு ______.
அ) ஏங் + கொலி + நீர் ஆ) ஏங்கொலி + நீர்
இ) ஏங்கு + ஒலிநீர் ஈ) ஏங்கு + ஒலி + நீர்

**விடை : ஈ) ஏங்கு + ஒலி + நீர்**

## இலக்கணக்குறிப்பு

**உயர்ந்தோர்** – வினையாலணையும் பெயர்
**வெங்கதிர்** – பண்புத்தொகை
**இலாத** – (இல்லாத) இடைக்குறை விகாரம்; எதிர்மறைப் பெயரெச்சம்
**வந்து, தொழ, விளங்கி** – வினையெச்சங்கள்
**ஒலிநீர்** – வினைத்தொகை
**இருளகற்றும்** – இரண்டாம் வேற்றுமைத்தொகை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## உறுப்பிலக்கணம்

1. **வந்து – வா (வ) + த் (ந்) + த் + உ**

**வா** – பகுதி, 'வ' ஆனது விகாரம்; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி.

2. **உயர்ந்தோர் – உயர் + த் (ந்) + த் + (ஆர்) ஓர்**

**உயர்** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
**ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி, 'ஓர்' ஆனது.
'ஆர்' என்னும் விகுதியில் ஈற்று அயல் எழுத்தான 'ஆ' என்பது, 'ஒ' ஆகத் திரிந்தது.

3. **விளங்கி – விளங்கு + இ**

**விளங்கு** – பகுதி; **இ** – வினையெச்ச விகுதி.

4. **இலாத – இலா + (ஆ) + த் + அ**

**இலா** – பகுதி; **(ஆ)** – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; **த்** – இறந்தகால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் – ஆங்கு + அவற்றுள்**

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிப்படி – ஆங்க் + அவற்றுள்
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – ஆங்கவற்றுள் எனப் புணர்ந்தது.

2. **தனியாழி – தனி + ஆழி**

'(உயிர்வரின்) இ ஈ ஐ வழி யவ்வும்' என்னும் விதிப்படி – தனிய் + ஆழி
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – தனியாழி எனப் புணர்ந்தது.

3. **வெங்கதிர் – வெம்மை + கதிர்**

'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – வெம் + கதிர்
'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி – வெங் + கதிர் – வெங்கதிர் எனப் புணர்ந்தது.

4. **(i) ஒங்கலிடை – ஒங்கல் + இடை (ii) இருளகற்றும் – இருள் + அகற்றும்**
**(iii) கதிரொன்று – கதிர் + ஒன்று**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி – (i) ஒங்கலிடை (ii) இருளகற்றும் (iii) கதிரொன்று எனப் புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **வேற்றுமை அணி பயின்று வரும் இருபாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**வேற்றுமையணி இலக்கணம் :** முதலில் இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்தி ஒன்றைவிட இன்னொன்றை உயர்ந்ததாய்க் கூறுவது வேற்றுமையணி ஆகும்.

**சான்று : 1**

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
    கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சு
    பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
    நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
    என்னுயிர் என்பேன் கண்டீர்.

– பாரதிதாசன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் கரும்பின் சாறு, பலாக்கனியின் சுளை, காய்ச்சிய பாகு, பசுவின் பால், தென்னையின் இளநீர் ஆகியன இனிமை தருவன என ஒப்புமைப்படுத்திவிட்டு, உயிர்போன்ற 'தமிழ்' அவற்றைவிடவும் இனியது என்று வேறுபடுத்திக் கூறியுள்ளமையால், இச்செய்யுள் வேற்றுமை அணிக்குச் சான்றாகும்.

**சான்று : 2**

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

– நாலடியார்

**சான்று விளக்கம் :** இச்செய்யுளில் சான்றோருக்கும் திங்களுக்கும் முதலில் ஒப்புமை கூறிப் பின்னர், அகல் நிலாப் பாரிக்கும் திங்களினும் சான்றோர் சிறந்தவர் என்று வேறுபடுத்திக் கூறியுள்ளதால், இச்செய்யுளில் வேற்றுமையணி பயின்று வந்துள்ளது.

**2. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரையை உருவாக்குக.**

**தமிழின் தொன்மை :**

தமிழ்மொழி, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த பழங்குடியினரால் பேசப்பட்ட பெருமை வாய்ந்தது. படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வந்த முடிமன்னர் மூவரால் பேணி வளர்க்கப்பட்டது.

எல்லையறு பரம்பொருள் பல்லுயிரும், பலவுலகும் படைத்து அளித்துத் துடைக்கினும் தான்மட்டும் முன் இருந்தபடியே இன்றளவும் யாதொரு மாறுபாடுமின்றி இருந்து வருகிறது. அஃதேபோல் நம் செந்தமிழும் தான்தோன்றிய காலம்முதல் இன்றளவும் எந்த மாறுபாடுமின்றி என்றும் கன்னிமையோடு நின்று நிலவுகின்றது.

**தமிழின் சீரிளமைத் திறம் :**

நம் தாய்மொழியாகிய இத்தமிழிலிருந்தே கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் சேய் மொழிகளாகத் தோன்றியுள்ளன. பல சேய்களை ஈன்றும் தாய்த்தமிழ், இளமை கெட்டு முதுமையுற்று வளமையற்றுப் போகவில்லை.

**தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள் :**

இனிய மொழி, எளிய மொழி, சிறந்த மொழி, பழைய மொழி, தனித்த மொழி என்ற ஐந்து அடைமொழிகளுக்கும் தமிழ் ஒன்றேதான் தகுதியானது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கணங்களைப் பெற்றது.

கண்ணால் காணமுடியாத, மனத்தால் நினைக்கப்படுகின்ற பொருள்களுக்கும் இலக்கணம் கூறுகின்ற, அகப்பொருள் இலக்கணத்தைக் கொண்டது.

பிற மொழிகளில் காணப்படாத ழகர எழுத்தைச் சிறப்பாகக் கொண்டது.

ஒழுக்கத்தை மட்டும் வற்புறுத்திக் கூறும் தனிநூல்கள் பலவற்றைக் கொண்டது.

**தன்னேரிலாத தமிழ் :**

"தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே"

என்று தமிழைக் குழைந்து போற்றுகின்றனர். தமிழ் எதனோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாத தன்னேரிலாத தமிழாக விளங்குகின்றது. இதன் சிறப்பைப் பற்றிப் பாடாத புலவர்கள் இல்லை; பேசாத அறிஞர்கள் இல்லை என்றே கூறலாம். இதனையே பாரதிதாசன், "தமிழ் என்றன் உயிரை, உணர்வை வளர்க்கின்றது" என்று கூறியுள்ளார். மேலும், "தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனவும், தமிழின் பெருமையையும் சிறப்பையும் போற்றிப் பாடியுள்ளார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## கூடுதல் வினாக்கள்

**1. வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

இரு பொருள்களுக்குரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் அவற்றை ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி.

எ – கா : தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

இதில் தீயும் நாவும் சுடுதலால் ஒற்றுமை சுட்டப்பட்டது. தீயால் சுட்டது புண்; எனவே, ஆறும். நாவால் சுட்டது வடு; எனவே, ஆறாது என்பது வேற்றுமை. எனவே, வேற்றுமை அணி அமைந்துள்ளது.

எ – கா : உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கைஅஃது இல்லார்
மரமக்கள் ஆதலே வேறு.

இதில், ஊக்கம் இல்லாதவரும் மரமும் சமம் என்று கூறப்பட்டது. பின்னர் மரத்திலிருந்து மனிதன் வடிவத்தால் வேறுபட்டவன் என்பது சுட்டப்பட்டது. எனவே, வேற்றுமை அணி அமைந்துள்ளது.

**2. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரையை உருவாக்குக.**

மொழி என்பது, மக்கள் தங்கள் கருத்தைப் பிறருக்கு உணர்த்துவதற்காக உருவானது. காலப்போக்கில் மனிதன் சிந்தனை வளர்ந்தது. அதனால் அவன் பேசிய மொழியும் வளர்ந்தது. இவ்வகையில் தோன்றிய முதல்மொழி தமிழே யாகும். இதனைப் பாரதியார், "வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வன்மொழி" என்று போற்றிப் பாராட்டுவார்.

தமிழில் மூவாயிரம் ஆண்டுகள் பழமையான இலக்கிய இலக்கணங்கள் கிடைக்கின்றன. அவற்றின் துணையால் தமிழின் தொன்மையை அறியலாம். தமிழ், தனித்துவம் மிக்கது. பிற மொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றது. அன்றியும், அதுவே உலகின் பல மொழிகள் தோன்றுவதற்குக் காரணமாகவும் இருந்துள்ளது. எனவே, மூத்த மொழி, தாயாய் முதிர்ந்த மொழி எனவும் கூறுவர்.

உலகின் தொன்மையான செம்மொழிகள் என்று சமற்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம், தமிழ், சீனம் ஆகியவற்றைக் கூறுவர். பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இயங்கி வருபவை தமிழும் சீனமுமே ஆகும். பிறமொழிகள், மக்கள் பேசும் வழக்கு அழிந்து ஒழிந்துள்ளன.

நம் தமிழ், இளமை குன்றாதது; என்றும் நிலைத்திருக்கும் வல்லமை உடையது; எளிதில் கற்கத் துணைநிற்பது; தோன்றும் புதுப்புதுத் துறைகள் சார்ந்த செய்திகளை ஏற்றுத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் வல்லமை பெற்றது. இன்று கணினித் துறையில் ஆட்சி செய்யும் மொழிகளுள் இரண்டாவதாக இருப்பது. இத்தகு தமிழை நம் தாய்மொழியாகப் பெற்றதில் பெருமைகொள்ள வேண்டும். தமிழ்மொழி நமது அடையாளம்; பண்பாட்டின் நீட்சி. அது தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு, உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. மேலும், தழைத்து ஓங்க, நம் அன்னைத் தமிழுக்கு நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்றதைச் செய்து, வளம்பெற உதவ வேண்டும். நன்றி. வணக்கம்.

## விரிவானம்

# 4. தம்பி நெல்லையப்பருக்கு

(பாரதியின் கடிதம்)

(பாரதியார்)

## நெடுவினா

**1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.** (Sep. -21, May - 22, Mar.-23)

மகாகவி பாரதியார், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மறுமலர்ச்சிக் கவிஞர் ஆவார் . நாட்டின்மீதும் மொழியின்மீதும் அவர் கொண்டிருந்த பற்று, ஆழ்ந்து கிடக்கும் ஆன்மிகச் சிந்தனை, சமுதாய மறுமலர்ச்சிக்குப் படைத்தளித்த கவிதைகள், அவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. மகாகவியாய், தேசியக் கவியாய் அடையாளப்படுத்திய பாரதியின் படைப்புகளில் கடிதம் வரைதலும் ஒரு புதுசக்தியாகத் திகழ்கிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**மொழிப்பற்று :**

மகாகவி பாரதி, **பன்மொழிப் புலமை** பெற்றவர். தாம் புலமை பெற்ற மொழிகளில் எல்லாம் உயர்ந்த மொழியாகத் தமிழ்மொழியைக் காட்டுகிறார். அதனை,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்ற அடிகளால் உறுதிப்படுத்துகிறார். இஃது ஒன்றே, அவரின் மொழிப்பற்றை வெளிப்படுத்துகிறது.

**நெல்லையப்பருக்கு வேண்டுகோள் :**

நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும், "**தமிழ், தமிழ், தமிழ்** என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்! புதியபுதிய சிந்தனைகள், புதியபுதிய உண்மைகள், புதியபுதிய இன்பங்கள் தமிழில் வளர்ந்துகொண்டே இருக்கவேண்டும். தமிழ், செழுமை அடைய வேண்டும்" என்னும் தம் விருப்பத்தை வேண்டுகோளாக வைக்கிறார். இங்கே **பாரதியின் மொழிப்பற்று**, விருப்பமாக வெளிப்படுகிறது.

**சமூகப் பற்று :**

நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில், பெண்ணுக்குச் சமவுரிமை வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். "தம்பி, ஆணும் பெண்ணும் ஒருயிர்; இரண்டு தலைகள். அவை ஒன்றுக்கொன்று தாழ்வில்லை! பெண்ணை அடிமை செய்வோன், தன் கண்ணைக் குத்திக்கொண்டவனாவான். பெண்ணை அடைத்து வைப்பவன், கண்ணை அடைத்தவனாவான் என்று எழுது" என வேண்டுகோள் விடுக்கிறார் பாரதி.

**எழுதுக! பேசுக! :**

"தமிழ்நாடு வாழ்க! தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க! தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிகள் பெருகுக! அந்தப் பள்ளிகளில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க" என்று, நெல்லையப்பரை எழுதச் சொல்கிறார். "**வணிகமும் இயந்திரங்களும்** பெருகவேண்டும் எனப் பேசு! **முயற்சிகள் ஓங்க** வேண்டும். இசை, சிற்பம், இயந்திர நூல், வானநூல், இயற்கைநூலென ஆயிரம் ஆயிரமாய்ப் பெருகவேண்டும் என முழங்கு தம்பி" என்று, கட்டளை இடுவதன்மூலம் **பாரதியின் சமூகப்பற்று**, தெளிவாய் வெளிப்படுகிறது.

## கூடுதல் வினா

**2. 'கடிதம் – ஓர் இலக்கிய வகை' – நிறுவுக.**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில், அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. கடித வடிவில், சொல்ல வேண்டியவற்றை வெளியிடும்முறை உண்டு. பாரதியார், தாம் நேரில் பேசுவது போன்றே, கடிதத்தில் எழுத்து வடிவில் பேசிவிடுகிறார். இது, ஒரு வகையான புது உத்தியாகும்.

**கடித இலக்கியம் :**

கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள், மொழிக்கு அதன் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருகிறார்கள். தனிப்பட எழுதும் கடிதங்களிலும் ஈர்க்கும் மொழியில் அழுத்தமான எண்ணங்களை, ஆழமான கருத்துகளைத் தந்து, அவற்றைப் பொதுவெளிக்குக் கொண்டு வருகிறார்கள்.

**கடிதத் தாக்கங்கள் :**

பண்டித நேரு, தம் மகளுக்கு எழுதிய கடிதங்கள், அறிஞர் அண்ணா தம் தம்பிமார்க்கு எழுதிய கடிதங்கள், அரசியலிலும் சமூகத்திலும் தாக்கங்களை ஏற்படுத்திப் புதுப்பாதைக்கு வழிவகுத்தன.

**கற்பனையும் கருத்துச் செறிவும் :**

நேரில் கண்டு அன்பைத் தெரிவிப்பதும், பாராட்டுவதும் மகிழ்ச்சியைத் தரவல்லன என்றாலும், கடிதம் மூலமாக உணர்த்துவது, வெளிப்படுத்துவது என்பது, உள்மனத்தில் பதிய வைப்பது; உணர்ச்சி வயப்படுத்துவது. கற்பனைநயம், சொல்நயம், கருத்துநயம் அமைந்த கடிதங்கள், இலக்கிய வகையில் இடம் பெற்றுள்ளன. கண்டு பேசுவதிலும், காணாமல் கடிதத்தின்மூலம் கருத்துகளையும், கற்பனைகளையும், வருணனைகளையும் நிரம்பத் தரமுடியும் என்பதுவே உண்மை.

## கூடுதல் பலவுள் தெரிக

1. பெண்ணைத் தாழ்வு செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர் **(PTA - 1)**

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

**விடை : ஆ) பாரதியார்**

2. பாரதியார் எங்கிருந்து பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்? (PTA - 3)
அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை

விடை : அ) புதுச்சேரி

3. தமிழ்நாட்டின் வீதிதோறும் ______ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது.
அ) ஆங்கில ஆ) உருது இ) தமிழ் ஈ) தெலுங்கு

விடை : இ) தமிழ்

4. எட்டயபுர மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதியவர் ______.
அ) சு. நெல்லையப்பர் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்
இ) வெங்கடேசுவரர் ஈ) பாரதி

விடை : ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்

5. பாரதி, ______ என்பவருக்குக் கடிதம் எழுதினார்.
அ) வேங்கடேசுர எட்டப்பர் ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) பரலி சு. நெல்லையப்பர் ஈ) வீரேசலிங்கம் பந்துலு

விடை : இ) பரலி சு. நெல்லையப்பர்

6. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ______.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) பரலி சு. நெல்லையப்பர்

விடை : ஈ) பரலி சு. நெல்லையப்பர்

7. பாரதி எழுதிய கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர் ______.
அ) சி. வை. தாமோதரம் பிள்ளை ஆ) பரலி சு. நெல்லையப்பர்
இ) பாரதியார் ஈ) அயோத்தி தாசர்

விடை : ஆ) பரலி சு. நெல்லையப்பர்

8. பாரதியார் நடத்திய இதழ்கள் ______.
அ) சூரியோதயம், கர்மயோகி ஆ) கர்மயோகி, நவ இந்தியா
இ) சக்கரவர்த்தினி, யங் இந்தியா ஈ) சூரியோதயம், தி இந்து

விடை : அ) சூரியோதயம், கர்மயோகி

9. பாரதி பதினைந்து வயதில் யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) தந்தைக்கு ஆ) உறவினர்க்கு
இ) எட்டயபுர அரசருக்கு ஈ) நண்பருக்கு

விடை : இ) எட்டயபுர அரசருக்கு

10. பாரதி எழுதிய இறுதிக் கடிதம் ______.
அ) குத்தி கேசவருக்கு ஆ) வ. உ. சி.க்கு
இ) பாரதிதாசனுக்கு ஈ) மனைவிக்கு

விடை : அ) குத்தி கேசவருக்கு

11. வம்சமணி தீபிகை நூலின் மூல வடிவம் மறுபதிப்பாக ______ என்பவரால் 2008இல் வெளியிடப்பட்டது.
அ) மகாகவி பாரதியார் ஆ) பரலி சு. நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசை மணி

விடை : ஈ) இளசை மணி

www.Padasalai.Net

12. பாரதியார், நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர் ______.
அ) இளசை மணி
ஆ) ரா. அ. பத்மநாபன்
இ) கி. ராஜநாராயணன்
ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்

**விடை : ஆ) ரா. அ. பத்மநாபன்**

13. கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.
கருத்து 2 : பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப் பாட்டைப் பதிப்பித்தவர்.
அ) இரண்டு கருத்துகளும் தவறு
ஆ) இரண்டு கருத்துகளும் சரி
இ) கருத்து 1 தவறு, 2 சரி
ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

**விடை : ஆ) இரண்டு கருத்துகளும் சரி**

## கற்பவை கற்றபின்

**1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 11.12.1882 | பாரதியார் பிறப்பு |
| 1887 | பாரதியின் தாயார் மரணம் |
| 1893 | பாரதி தமது முதல் கவிதையை எழுதினார். |
| 1897 | பாரதியின் திருமணம் |
| 1898 | பாரதி, எட்டயபுர மன்னருக்குக் கடிதம் எழுதினார். |
| 1898 – 1902 | பாரதி, காசியில் தங்கியிருந்தார். |
| 1903 | பாரதியின் பாடல்கள் அச்சில் வெளிவந்தன. |
| 1904 | பாரதி பாடல், ‘விவேக பானு’ இதழில் வெளியானது. |
| 1904 – 1906 | சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். |
| 1905 – 1906 | இந்தியா, பாலபாரதம் இதழ்களில் பணியாற்றினார். |
| 1905 – 1906 | மே 1905 முதல் செப்டம்பர் 1906 வரை புதுச்சேரியில் தங்கியிருந்தார். |
| 1905 | அரசியலில் ஆர்வம் காட்டினார். |
| 1908 | இந்தியா இதழ், புதுவையில் இருந்து வெளிவரத் தொடங்கியது. |
| 1908 – 1910 | சூரியோதயம் இதழ் |
| 1910 | கர்மயோகி |
| 1909 – 1910 | தர்மம், பாலபாரதம், யங் இண்டியா ஆங்கில இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார். |
| 1912 | பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். |
| 1918 | கைது செய்யப்பட்டு 34 நாள்கள் சிறையில் வைக்கப்பட்டார். |
| 1919 | ராஜாஜி வீட்டில் காந்தியைச் சந்தித்தார். |
| 11.09.1921 | பாரதியின் மறைவு. |

**2. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக் கடிதம் ஒன்றினை எழுதுக.**

என் பாட்டன் பாரதிக்கு,
உம் எண்ணம்போலவும், கூறியதுபோலவும் நாட்டுப்பற்று கொள்வேன்!
மொழிப்பற்று கொள்வேன்!
என் மனத்தை விரிவாக்குவேன்!
இவ்வுலகைத் தமிழ்க் கண்ணோடு பார்ப்பேன்;
உலகின் சிறந்த கலைவளர்ச்சி பெற்ற மொழிகளைக் கற்பேன்!
என் தாய்த்தமிழில் அவ்வளங்களைச் சேர்ப்பேன்!
நீங்கள், “சபாஷ் பாண்டியா!” என்று போற்றும்படி வாழ்வேன்.

உங்கள் கொள்ளுப்பேரன்,
பாண்டியன்.

# இனிக்கும் இலக்கணம்

# 5. தமிழாய் எழுதுவோம்

## நம்மை அளப்போம்

### இலக்கணத் தேர்ச்சிகொள்

1. **பிழையான தொடரைக் கண்டறிக.** (PTA - 2)

அ) காளைகளைப் பூட்டி, வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறி, கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள், மழைநீரில் மூழ்கின.

**விடை : இ) காளையில் பூத்த மல்லிகை, மனம் வீசியது.**

2. **பேச்சுத் தமிழில் அமைந்த தொடர்** (Sep. - 20)

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி, எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள், விறலியரைப்போல் ஆடுகின்றன.

**விடை : அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருள்கள் யாவை?**

➤ **முடிந்தால் தரலாம் :** நான் கேட்ட பொருளை, உன்னால் கொடுக்க **முடிந்தால் தரலாம்.**

➤ **முடித்தால் தரலாம் :** நான் தேர்வை எழுதி **முடித்தால்** என் புத்தகத்தை உனக்குத் **தரலாம்.**

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

★ எழுத்து ஒலிகளைத் தெளிவாக உச்சரித்து எழுதவேண்டும்.

★ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமையத் தொடர்களை எழுதவேண்டும்.

★ தொடர்களில் வினைச்சொற்களில் கால வேறுபாடு உணர்ந்து எழுதவேண்டும்.

★ திணை, பால், எண், இடம் என்பனவற்றை எழுதும்போது, தெளிவாக உணர்த்த வேண்டும்.

★ கூறும் செய்திகளைச் சிறுசிறு பத்திகளாக அமைத்து எழுத வேண்டும்.

★ நிறுத்தக் குறிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

★ சிறந்த எழுத்தாளரின் நூல்களைப் படித்து அறிதல் வேண்டும்.

### கூடுதல் வினாக்கள்

5. **தமிழை எழுதும்போது ஏற்படும் பிழைகள் யாவை?** (PTA - 1)

➤ எழுத்துப் பிழை, சொற்பொருள் பிழை, சொற்றொடர்ப் பிழை, பொதுவான பிழை என்பவை, தமிழை எழுதும்போது ஏற்படும் பிழை வகைகளாகும்.

6. **பிழைகளைக் களைவதற்கு அறிய வேண்டிய தமிழ்மொழி எழுத்துகள் குறித்த அடிப்படைச் செய்திகள் யாவை?**

அ) **உயிரெழுத்துகள் 12.** (அவற்றுள்) குறில் 5 (அ, இ உ, எ, ஒ),
நெடில் 7 (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) என அறிக.

ஆ) **மெய்யெழுத்துகள் 18.** (அவற்றுள்) வல்லின மெய்கள் 6 (க், ச், ட், த், ப், ற்),
மெல்லின மெய்கள் 6 (ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்) இடையின மெய்கள் 6 (ய்,ர்,ல்,வ்,ழ்,ள்) என அறிக.

இ) **உயிர்மெய்யெழுத்துகள் 216.** (அவற்றுள்) உயிர்மெய்க்குறில் 90 (18 × 5),
உயிர்மெய் நெடில் 126 (18 × 7) என அறிக.

ஈ) (முப்புள்ளி வடிவான) ஆய்தம் 1 (ஃ) என அறிக.
ஆக மொத்தம் **247 எழுத்துகள்** என அறிக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

7. **தமிழைப் பிழை இல்லாமல் எழுத என்ன செய்ய வேண்டும்?**

➤ தமிழ்மொழியின் இயல்பை உணர்ந்தும், **இலக்கண விதிகளை** அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும். **முயற்சியும் பயிற்சியும்** பிழை இல்லாமல் எழுதத் துணைபுரியும்.

8. **தமிழ் எழுதுவதற்கு எழுத்துத் தெளிவு தேவை என்பதைச் சான்று தந்து விவரி.**

➤ ந, ண, ன / ற, ர / ல, ள, ழ – எழுத்து ஒலிகளில் தெளிவு இருக்க வேண்டும்.

➤ உயிர்மெய் எழுத்துகளில் வரும் மேல்விலங்கு (மி), கீழ்விலங்கு (பூ), கொம்புகள் (கெ, கே), துணைக்கால் (கா, கொ, கோ) போன்றவற்றை எழுதும் முறையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

➤ சொல்லை எழுதும்போது பிழை ஏற்பட்டால், பொருள் பிழை ஏற்படும். '**அவன் கறிச்சோறு உண்டான்**' என்பதை '**அவன் கரிச்சோறு உண்டான்**' என எழுதினால் பொருள் வேறுபடும்.

9. **எழுதும்போது பிழை மலியக் காரணம் யாது?**

➤ பேச்சுத் தமிழை எல்லா இடங்களிலும் எழுத முடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மைக் காரணமாகும். **குறில், நெடில்** வேறுபாடுகளை அறியாது இருப்பதும், எழுத்துகள் சொற்களில் வரும் முறை குறித்துத் தெளிவு பெறாமல் இருப்பதும் **பிழைகள் மலியக்** காரணமாகும்.

10. **ந், இன் – சாரியைகள் எவ்வாறு வரும்?**

➤ '**ஒட்டுநர்**' என எழுதாது '**ஒட்டுனர்**' என எழுதுவது தவறு. ஒட்டு, இயக்கு, அனுப்பு, பெறு, செலுத்து, நடத்து என்பன வினைச்சொற்கள். இதன்படியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்களான ஒட்டுநர், இயக்குநர், அனுப்புநர், பெறுநர், செலுத்துநர், நடத்துநர் என்பன 'ந்' என்னும் பெயர் இடைநிலையும் 'அர்' என்னும் விகுதியும் பெற்று அமைவதே சரியாகும்.

➤ '**உறுப்பினர்**' என எழுதாது, '**உறுப்பிநர்**' என எழுதுவது தவறு. **உறுப்பு, குழு, ஊர்** என்பன பெயர்ச் சொற்கள். அதனால் அவை '**இன்**' என்னும் சாரியையும் '**அர்**' என்னும் விகுதியும் பெற்று '**உறுப்பினர், குழுவினர், ஊரினர்**' என அமைவதே சரியாகும்.

11. **தமிழில் எழுதும்போது எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க அறிய வேண்டுவன யாவை?**

➤ தமிழ்ச்சொல்லின் முதல் எழுத்து மெய்யெழுத்தில் தொடங்காது.

➤ வல்லின மெய்யில், எந்தத் தமிழ்ச்சொல்லும் முடியாது.

➤ சொற்களின் இடையில், ட், ற் மெய்களை அடுத்து, இன்னொரு மெய் வராது.

➤ ஆய்த எழுத்து, சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

➤ ண, ன சொல்லின் தொடக்கத்தில் வராது. தனிக்குறிலை அடுத்து ர், ழ் மெய்கள் வரா.

12. **எழுத்துப் பிழைகளைத் தவிர்க்கச் சில குறிப்புகள் தருக.**

➤ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழகவேண்டும்.

➤ ந, ண, ன / ல, ள, ழ / ற, ர **ஒலிப்பு வேறுபாடுகளைத் தெரிந்து** தெளிவாக ஒலிக்கவேண்டும்.

➤ ந, ண, ன / ல, ள, ழ / ற, ர எழுத்துகளை **முறை மாற்றி ஒலி எழுப்பினால்**, பொருள் வேறுபடும் என்பதை அறிதல் வேண்டும்.

➤ எழுதப் பழகும் தொடக்க காலத்தில் வாய்விட்டு ஒலித்தோ, மனத்துள் உச்சரித்தபடியோ எழுதிப் பழகவேண்டும்.

➤ வேகமாக, எழுத்துத் தெளிவு இல்லாமல் எழுத முயற்சி செய்வது, பிழை மலிய வழிவகுக்கும்.

➤ எகர (ெ), ஏகார (ே), ஒகர (ெ – ா), ஓகார (ே – ா) **உயிர்மெய் எழுத்துகளின்** வேறுபாடு புரிந்து எழுத வேண்டும்.

13. **எழுதும்போது எப்படிப் பிழைகளைத் தவிர்க்கலாம்?**

➤ சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதுகிறபோது, பிழைகளைத் தவிர்க்க முடியும்.

**எ – கா :** அறம் – அரம் /குறை – குரை / வளம் – வலம் / களம் – கலம் / போனாள் – போனால்/ கள் – கல் / மழை – மலை / அழை – அலை.

www.Padasalai.Net www.CBSEtips.in


## கூடுதல் பலவுள் தெரிக

1. உயிரெழுத்துகள் ______ வகைப்படும். (PTA - 2)
   அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு
   விடை : ஈ) இரண்டு
2. பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க. (Sep. - 20)
   அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
   ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
   இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
   ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
   விடை : ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
3. எவ்வகை வாக்கியம் என்பதைக் கண்டறிக. (PTA - 3)
   அ) ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்?
   விடை : வினா வாக்கியம்.
   ஆ) நீச்சல் தன்னம்பிக்கையைத் தரும்.
   விடை : செய்தி வாக்கியம்.
4. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் :(Mar. - 23)
   அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116
   விடை : இ) 126

## மொழியை ஆள்வோம்

**தமிழாக்கம் தருக.** (PTA - 2, May - 22)

1. Learning is a treasure that will follow its owner everywhere.
   கற்றல் என்பது ஒரு பெரும் புதையல்; அது, தன்னை உடையவரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் பின்தொடரும்.
2. A new language is a new life.
   ஒரு புது மொழியை அறிவது, ஒரு புது வாழ்வுக்கு வழியாகும்.
3. If you want people to understand you, speak their language.
   மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமென நீ விரும்பினால், அவர்கள் மொழியில் பேசு.
4. Knowledge of languages is the doorway to wisdom.
   பலமொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.
5. The limits of my language are the limits of my world.
   எனது மொழிக்குறைபாடு என்பது, உலகை அறியத் தடையாகும்.

## இலக்கிய நயம் பாராட்டல்

**ஓர் அறிமுகம்:**

'செய்யுள் நயம் பாராட்டல்' வினாவானது, **"பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக்கருத்தை எடுத்துரைத்து, அதில் ஏற்புடைய நயங்களுள் எவையேனும் மூன்றனை எழுதுக"** என்று, கொடுக்கப் பெற்றிருக்கும். 'ஏற்புடையவற்றைச் சுட்டிக்காட்டி எழுதுக' எனக் குறிப்பிடப்படுவதால், கொடுக்கப் படும் செய்யுளில் அனைத்து நயங்களுமே இடம்பெறும் என எண்ண வேண்டாம். அச்செய்யுளுள் இருக்கின்றவற்றை மட்டும் கண்டறிந்து எழுதினால் போதும்.

## தொடைநயம் அறிக

**'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்'** என்னும் பழமொழி, செய்யுளில் '**தொடைவகை**', அமைய வேண்டியதன் இன்றியமையாமையை நிலைப்படுத்துவதை, நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தொடுக்கப்படுவது தொடை! உதிரி மலர்களால் மாலை தொடுக்கப்படுகிறது. பொருள் நிறைந்த சொற்களால் அசை, சீர் அமையச் செய்யுள் யாக்கப்படுகிறது. அப்படி யாக்கும்பொழுது, 'தொடை' அமைகிறது. **எதுகை, மோனை, முரண், இயைபு** முதலான அனைத்தும், தொடைவகையுள் அடங்கும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

### மோனைத்தொடை (மோனை)

செய்யுளின் அடிகளில் அமைந்த சீர்களின் முதல்எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, '**மோனைத் தொடை**' எனப்படும். அடிதோறும் முதல்சீரின் முதலெழுத்து ஒன்றிவருவது, '**அடிமோனை**' எனப்படும்.

எ – டு : சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

இக்குறளில் அடிதோறும் முதல் சீராக அமைந்த '**சொல்லுதல்**', '**சொல்லிய**' என்பவற்றில் முதலெழுத்து **(சொ)** ஒன்றிவந்து, '**அடிமோனை**' அமைந்துள்ளது.

செய்யுளின் அடியில் அமைந்த சீர்களின் முதலெழுத்து ஒன்றி வருவது, '**சீர்மோனை**' எனப்படும்.

எ – டு : உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இக்குறள் அடியின் 1, 4 சீர்களில், '**உருவுகண்**', '**உருள்பெருந்தேர்க்**' முதல் எழுத்து **(உ)** ஒன்றிவந்து, '**சீர்மோனை**' அமைந்துள்ளது.

### எதுகைத்தொடை (எதுகை)

செய்யுளின் அடிகளில் அமைந்த சீர்களின் முதல்எழுத்துகள் தம்முள் (மாத்திரை) அளவு ஒத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, '**எதுகைத்தொடை**' எனப்படும்.

i. செய்யுளின் அடிதோறும் முதல்சீரின் முதலெழுத்துகள் அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது, '**அடிஎதுகை**' எனப்படும்.

எ – டு : எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

இக்குறளில் அடிதோறும் முதல்சீராக அமைந்த '**எண்**ணிய,' '**திண்**ணிய' என்பவற்றின் முதல் எழுத்துகள் **(எ, தி)** குறிலாக அமைய, இரண்டாம் எழுத்து '**ண்**' என்னும் மெய் வந்து, '**அடிஎதுகை**' அமைந்துள்ளது. (குறில் ஒரு மாத்திரை அளவு பெறும். நெடில் இரண்டு மாத்திரை அளவு பெறும். முதல் சீரில் **குறில்** இருந்தால், மற்ற சீர்களிலும் **குறில்** இருக்கவேண்டும். முதல் சீரில் **நெடில்** இருந்தால், மற்ற சீர்களிலும் **நெடில்** இருக்கவேண்டும். இதுவே (மாத்திரை) அளவு ஒத்தல் ஆகும்.)

ii. செய்யுள் அடியின் சீர்களில் முதல்எழுத்து தம்முள் அளவு ஒத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, '**சீர்எதுகை**' எனப்படும்.

எ – டு : எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்

இக்குறள் அடியின் 1, 2, 4 சீர்களில் 'எ**ண்**ணிய, எ**ண்**ணியாங், எ**ண்**ணியர்' முதல்எழுத்து (குறிலாய்) அளவு ஒத்துஇருக்க, இரண்டாம் எழுத்து '**ண்**' ஒன்றிவந்து, சீர்எதுகை அமைந்துள்ளது.

### முரண்தொடை (முரண்)

செய்யுள் அடியில் அமைந்த சீர்களில் முதல்சீரோடு சொல்லாலோ, பொருளாலோ மாறுபட்டு வருவது, '**முரண்தொடை**' எனப்படும்.

i. அடிதோறும் முதல்சீர் சொல்லாலோ, பொருளாலோ முரண்பட அமைவது, '**அடிமுரண்**' எனப்படும்.

எ – டு : துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.

இக்குறளில், அடிதோறும் முதல்சீராக அமைந்த '**துன்பம்**', '**இன்பம்**' என்பவை, சொல்லாலும் பொருளாலும் முரண்பட்டு '**அடிமுரண்**' அமைந்துள்ளது.

ii. செய்யுளடியில் அமைந்த சீர்கள் சொல்லாலோ, பொருளாலோ முரண்பட அமைவது, '**சீர்முரண்**' எனப்படும்.

எ – டு : அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

இக் குறளடியின் 1, 4 சீர்களில் அமைந்த '**அறிவுடையார்**', '**அறிவிலார்**' என்னும் சீர்கள், சொல்லாலும் பொருளாலும் முரண்பட்டுச் '**சீர் முரண்**' அமைந்துள்ளது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## இயைபுத்தொடை (இயைபு)

செய்யுள் அடிகளின் ஈற்றில்நிற்கும் எழுத்தோ, சொல்லோ ஒன்றுபோல் ஓசையில் பொருந்திவருவது, '**இயைபுத்தொடை**' எனப்படும்.

எ – டு : மூலையில் கிடக்கும் வாலிபனே – தினம்
முதுகிலா வேலையைத் தேடுகிறாய்!
பாலை வனம்தான் வாழ்க்கையென – வெறும்
பல்லவி எதற்குப் பாடுகிறாய்?

இவ்வடிகளின் ஈற்றில் அமைந்த 'தேடுகிறாய்', 'பாடுகிறாய்' என்பவை, ஓசையில் ஒன்றுபோல் பொருந்தி வருவதால், '**இயைபுத்தொடை**' அமைந்துள்ளது.

## அணி

செய்யுளில் அமைந்த சொற்களும், அவை உணர்த்தும் பொருள்களும் உவமை, உருவகம் முதலிய அணி வகைகளைப் பெற்றிருக்கக் கூடும். அவற்றைத் தெளிவாக உணர்ந்து விளக்குதல் வேண்டும்.

## சந்த நயம்

'**சந்தம்**' என்பது, இனிய ஓசையைக் குறிக்கும். பாவகை ஒவ்வொன்றிற்கும் ஒருவகை ஓசையுண்டு. எனினும், **விருத்தப் பாக்களில்** சந்த நயம் மிகுந்திருக்கும். பெரும்பான்மையாக ஆசிரியப்பா, அதன் இனமாகிய ஆசிரியவிருத்தம், சந்தப்பா ஆகியவையே தரப்படும்.

கவிதைகளில் எல்லா நயங்களும் அமைந்திருக்கும் எனக் கூற முடியாது. இருந்தால் விளக்குதல் வேண்டும். திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்து, அமைந்துள்ள நயங்களைச் சுட்டுதல், முழு மதிப்பெண் பெற வழிவகுக்கும்.

**இலக்கிய நயம் பாராட்டுக.** (PTA - 5, 6)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக்கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

**முன்னுரை :**

'கவியரசரா'ய் வாழ்ந்தவர் கண்ணதாசன். பாரதிக்குப்பின் பாரதிதாசன் பரம்பரை எனக் கவிஞர் பலர் வாழ்ந்தனராயினும், திரைத்துறையிலும் பத்திரிகையிலும் எழுதிப் புகழை நிலைப்படுத்தி, மறைந்த பின்னரும், தம் திரையிசைப் பாடல்களால் வாழ்ந்து கொண்டிருப்பவர். இப்பாடலில் தமிழன்னையின் சிறப்பைப் பாடியுள்ளார். இனி நயம் காண்போம்.

**மையக்கருத்து :**

சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்து அரிய நூல்களைப் படைத்தளிக்கத் தமிழ்த்தாய் துணை நின்றதை விளக்குவது மையக்கருத்தாகும். சங்கத்தில் அளப்பரிய பொருள்நிறை நூல்கள் உருவானதையும், அவை சுவை மிகுந்த கவிதைகளாக இருந்தமையும் விளக்கப்பட்டுள்ளது.

**நயம் :**

பண்டைக்காலத்தே மூன்று சங்கங்கள் அமைத்ததையும், அவற்றில் அறிவுமுதிர் புலவர்கள் கூடியதையும், அளப்பரிய பொருள் நிறைந்த, பல அரிய நூல்களைப் படைத்ததையும், படைத்த கவிதைகளில் சுவையூட்டச் 'சொற் சங்கமம்' காரணமாக இருந்ததையும், இந்த அற்புதங்கள் எல்லாம் அமையக் காரணமாக இருந்தவள் தமிழ் அன்னை என்பதனையும் விளக்கியுள்ள நயம் பாராட்டத்தக்கதாகும். உலகின் பல மொழிகளுக்கும் தாயாக விளங்கிய தமிழன்னையைக் கவிஞர், 'பெருமாட்டி' எனப் பாராட்டியுள்ள நயம் வெகுசிறப்பாகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

நான்கு அடிகளாய் அமைந்த இந்த ஆசிரிய விருத்தத்தில், முதல் இரண்டு அடிகளில் 'முச்சங்க', 'அச்சங்க' என்னும் சீர்கள், இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, '**அடிஎதுகை**' அமைந்துள்ளது.

அடுத்த இரண்டு அடிகளில் 'சொற்சங்க', 'அற்புதங்க' என்பனவற்றில், இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, 'அடிஎதுகை' அமைந்துள்ளது.

**மு**ச்சங்க, **மு**துபுலவர்; **அ**ச்சங்க, **அ**ளப்பரிய; **சொ**ற்சங்க, **சு**வைமிகுந்த; **அ**ற்புதங்க, **அ**மைந்த என்னும் சீர்களில், முதலெழுத்து ஒன்றிவந்து, 'சீர்எதுகை' அமைந்துள்ளது.

அடிதோறும் இறுதியில் '**கூட்டி**' என்னும் சீர் பெற்று, '**இயைபுத்தொடை**' அமைந்துள்ளது.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே, பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

– மொழி வரலாறு (மு. வரதராசனார்)

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?
2. மொழி, எதற்குக் கருவியாக உள்ளது?
3. தாயின் முதல் வேட்கை எது?
4. பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது எது?
5. மொழிக்கு ஆசிரியராகவும், மாணவராகவும் உள்ளவர் எவர்?

**வினாக்கள் :** (Sep. -21)

**1. குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது ?**

குழந்தையின் மனவளர்ச்சி மொழி வளர்ச்சியோடு தொடர்புடையது.

**2. மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் ______ ஆகும்.**

அரியதொரு கலை.

**3. தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன?**

தாயின் முதல் வேட்கையாக இருப்பது தன் குழந்தையுடன் பேசுதல்.

**4. மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?**

மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழி வளர்ச்சி பெறும்.

**வினாக்கள் :** (May -22)

**1. மொழி என்பது யாது?**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை.

**2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?**

தன் குழந்தையுடன் பேசுதலே பெற்ற தாயின் முதல் வேட்கையாகும்.

**3. மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது ?**

மொழி வளர்ச்சி, குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது,

**4. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.**

வளர்மொழி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**உவமைத்தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

1. **தாமரை இலை நீர்போல :**

உண்மையான துறவியர், உலக ஆசைகளில் மனத்தைப் பறிகொடுக்காமல் **தாமரை இலை நீர்போல** இருப்பர்.

2. **கிணற்றுத் தவளைபோல :**

செய்தி இதழ்களைப் படிக்காமல், பாடநூல்களோடு மட்டுமே உறவாடும் மாணவர்கள், **கிணற்றுத் தவளைபோல்** உலகியல் அறிவு பெறாமல் வாழ்கிறார்கள்.

3. **எலியும் பூனையும்போல :**

உலகில் சில நாடுகள், அண்டை நாடுகளுடன் தேவையற்ற பூசல்களில் ஈடுபடுவதால், **எலியும் பூனையும்போலக்** காணப்படுகின்றன.

4. **அச்சாணி இல்லாத தேர்போல :** (Mar. - 20)

தலைவனை இழந்ததால் குடும்பம், **அச்சாணி இல்லாத தேர்போல்** தடுமாறுகிறது.

5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல :** (Sep. - 20)

அகிம்சைக் கொள்கையைக் கடைப்பிடித்து, வெற்றிப்படிகளில் கால்பதிக்கும் நாடுகளால், அகிம்சைக் கொள்கையின் பெருமை, **உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்** தெளிவாகப் புலப்படுகின்றது.

6. **நகமும் சதையும்போல :** (Mar. - 20)

மணமக்களை **நகமும் சதையும்போல்** வாழுமாறு வாழ்த்தினர்.

**ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

## தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்திப் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.**

**முன்னுரை :**

ஒருவர் தம் அறிவை வளர்க்கக் கற்றல் இன்றியமையாதது ஆகிறது. பல நூல்களைக் கற்பதே கல்வியாகும். அதாவது, சிறந்த நூல்களைப் படிப்பதனால் மட்டுமே அறிவு வளர்ச்சிபெறும் என்பது, எல்லாரும் அறிந்த உண்மை. கற்றல் சிறக்க எந்த மொழி உதவும் என்பதை, இந்தக் கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

பிறந்த குழந்தை வளரும்போது, பெற்ற தாயே குழந்தைக்கு உலகின் உறவுகளையும் பொருள்களையும் அறிமுகப் படுத்துகிறார். தாய் கற்பிக்கும் மொழியே, உலகை நாம் அறியவும், பிறரிடம் பேசவும் துணைபுரிகிறது. தாய் தன் குழந்தைக்குக் கற்பிக்கின்ற மொழியே தாய்மொழியாகும். பள்ளி சென்று படித்து அறிவைப் பெறாத பாமர மக்களும் வாழ்வில் சிறக்க, அவர்கள் திறமை வளர அவரவர் தாய்மொழியே காரணமாக இருக்கிறது. கற்பதை அவரவர் தாய்மொழியில் கற்பதே சிறப்பு. அப்போதுதான் படிப்படியான அறிவு வளரும்; புரிதல் தெளிவுபெறும்; சிந்தனை தூண்டப்படும்; புதுமைகள் கண்டறியப்படும். எனவே, தாய்மொழி வழிக்கல்வியே தேவை என்பதை உணரமுடிகிறது.

**தாய்மொழிச் சிந்தனை :**

சிந்தனை வளர்வதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாக உதவும். இலக்கியத்திற்கு 'நோபல் பரிசு' பெற்ற தாகூர், தம் 'கீதாஞ்சலி'யைத் தாய்மொழியான வங்காள மொழியிலேயே முதலில் எழுதினார். உலகில் அனைவரும் போற்றும் 'My Experiment with Truth' என்னும் சுயசரிதை நூலைக் காந்தியடிகள், முதலில் தம் தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். இப்படி உலகில் எண்ணற்றவர், அவரவர் சிந்தனைகளை அவரவர் தாய்மொழியில்தான் வளர்த்துள்ளனர்.

**அறிஞர்களின் பார்வை :**

ஜப்பான், ரஷ்யா, சீனா, ஜெர்மன், பிரான்சு, இங்கிலாந்து, ஸ்பெயின், கியூபா என்னும் நாடுகள், தொழில் வளத்திலும், அறிவியல் முன்னேற்றத்திலும் சிறந்திருக்கக் காரணம், அந்நாடுகளில் மக்கள் பெறும் கல்வி, அவரவர் தாய்மொழியில் இருப்பதே ஆகும் என்பதை அறிஞர் பலர் எடுத்துரைக்கின்றனர். சிந்தனைமிக்க அறிஞர்கள், தாய்மொழிக் கல்வியே வளம்சேர்க்கும் என்பதை பல வகைகளிலும் வலியுறுத்தியே வருகின்றனர்.

**கற்கும் திறன் :**

தாய்மொழிவழிக் கல்வி பயில்பவரே, கற்றல் திறனில் சிறந்து விளங்குகின்றனர். இதற்கு மேலை நாட்டவரின் சாதனைகளே சான்று. நோபல் பரிசு பெறுவோர் எண்ணிக்கையின் சிறப்பினாலும் இதனைத் தெளியலாம். திறன் வளர, பயன்பெறத் தாய்மொழி வழிக்கல்வியே சரியானது.

**பயன் :**

நம் நாட்டில் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர்வரை, குஜராத்திலிருந்து அருணாசலப் பிரதேசம்வரை பரவலாகத் தாய்மொழி ஒதுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் கற்பிப்பதே வலியுறுத்தப்படுகிறது. பயன் என்ன? உலகில் சாதனை படைக்கும் இந்திய மக்களின் விழுக்காடு எத்தனை? இதனால் பிறமொழியால் கல்வி கற்பதன் விளைபயனைத் தெளியலாம்.

**இன்றைய நிலை :**

நம் நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் தாய்மொழி வழிக்கல்வியை ஒதுக்கிவிட்டு, ஆங்கிலமொழி வழிக்கல்வியையே பலரும் விரும்புகின்றனர். இதனால் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தையும் முழுமையாகக் கற்காமல், தாய்மொழியான தமிழையும் மறந்து போகின்றனர். தாய்மொழிவழிக் கல்வி, கல்லாத பலர், காகம் அன்னநடை கற்கப் போய்த் தன் நடை மறந்த கதையாகத் திண்டாடுகின்றனர்.

**முடிவுரை :**

பத்திரிகைகளில், “எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் மூன்றாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலைக்கூட வாசிக்க முடியவில்லை” என்னும் செய்தியைப் பார்த்துப் பெற்றோர், திகைப்படையும் நிலையே உள்ளது.

## மொழியோடு விளையாடு

**1. எண்ணங்களை எழுத்தாக்குக.**



ஆதி மனிதன், குகைகளை உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தான். வாழ்க்கை என்பது, உணவு தேடுவதோடு முடிந்து விடுவதில்லை. அவனது அன்றாட வாழ்விலும் சிந்தனை இருந்திருக்கிறது. தன் உறைவிடமான குகையை அழகு படுத்த முயன்றுள்ளான். அத்துடன் தன் அனுபவங்களைக் கோட்டு உருவங்களாக வரைந்துள்ளான். கருவிகளைக் கற்களைக் கொண்டு செய்தவன், தன் சிந்தனைக்குக் கலைவடிவம் கொடுக்க முயன்றுள்ளான். கற்காலத்தில் வாழ்ந்தாலும், கலை உணர்வுடன் வாழ்ந்துள்ளான் போலும்!

**2. அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.**

**குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்**
**தாயின் குரலில் உயிரின் ஒலி**
உயிரின் ஒலியில் உறக்கம் தெளிந்தது
உறக்கம் தெளிந்து அழைத்தது குழந்தை!

**3. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

**எ – கா :** கவிஞர்தம் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – சூடாமணி

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். – மறைமலை அடிகள்
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தருவன. – தமிழ்ஒளி
3. சிறுகதை ஆசிரியர் : முதல்பாதி நவீனம். – புதுமைப்பித்தன்
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். – கோதை

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி / தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும், தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் ஒப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| **எ–கா :** பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல். | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல். | | தவறு. பொதுத்தூய்மை கெடும்;. நோய் பரவும்; கட்டுப்படுத்திக் குறிப்பிட்ட இடத்தில் துப்பப் பழக்க வேண்டும். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | தவறு. வகுப்பறைத் தூய்மை கெடும். குப்பைக்கூடை வைத்துப் போடப் பழக வேண்டும். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல். | | தவறு. பொது உடைமை. நமக்கு முன் பலருக்கும் பயன்பட்டது; நமக்குப்பின்னரும் பலருக்கும் பயன்பட வேண்டும். பாதுகாப்பாகக் காப்பாற்றுவது நல்லது. |

**படிப்போம்; பயன்படுத்துவோம் (நூலகம்)**

**Subscription** – உறுப்பினர் கட்டணம்
**Fiction** – புனைவு
**Biography** – வாழ்க்கை வரலாறு
**Archive** – காப்பகம்
**Manuscript** – கையெழுத்துப் படி
**Bibliography** – நூல் நிரல்

www.Padasalai.Net

# இயல் – 2

## கவிதைப்பேழை

# 3. நெடுநல்வாடை

(நக்கீரர்)

### நம்மை அளப்போம்

**1. இனநிரை – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

**இனநிரை – இனம் + நிரை**

★ "மவ்ஈறு ஒற்றுஅழிந்து, உயிர்ஈறு ஒப்பவும் ஆகும்" என்னும் விதிப்படி – இன + நிரை – இனநிரை எனப் புணர்ந்தது.

### கூடுதல் வினாக்கள்

**2. வாகைத்திணை, கூதிர்ப்பாசறை விளக்குக.** (PTA - 1,3)

**வாகைத்திணை :** போரில் வெற்றி பெற்ற அரசனும் அவனுடைய வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூச்சூடி, வெற்றியை விழாவாகக் கொண்டாடுவது 'வாகைத்திணை' ஆகும்.

**கூதிர்ப்பாசறை :** கூதிர்ப்பாசறை என்பது, போர்மேற் சென்ற அரசன், குளிர்காலத்தில் தங்கும் படைவீடாகும்.

**3. பொய்யா வானம் எவ்வாறு பொழிந்தது?**

➤ பொய்த்தல் இல்லாத மேகம், தான் தங்கி இருந்த மலையை வலப் பக்கமாகச் சூழ்ந்து சுழன்று எழுந்து, உலகம் குளிர்ச்சி பெறுமாறு, புதிய மழையைப் பொழிந்தது.

**4. கொடுங்கோல் கோவலர் – விளக்குக.**

➤ 'கோவலர்' என்பது, ஆநிரைகளைப் பாதுகாக்கும் ஆயரைக் குறிப்பது.

➤ அவர்கள் தம் கையில் கோல் வைத்திருப்பர். அது வளைந்திருக்கும்.

➤ அதனால், 'கொடுங்கோல் கோவலர்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**5. ஆயர் புலம் பெயர்ந்தது ஏன்?**

➤ பொழிந்த புதிய மழையால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியதனால், அதனை வெறுத்த ஆயர், தம் நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேயவிடப் புலம் பெயர்ந்தனர்.

**6. புலம்பெயர் ஆயர் கலங்கியது ஏன்?**

➤ புதுமழை பெய்ததால் பெருகிய வெள்ளத்தால், தம் ஆநிரையை மேயவிடத் தாம் பழகிய நிலத்தை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டதால், புலம்பெயர் ஆயர் கலங்கி, வருத்தம் அடைந்தனர்.

**7. ஆயர் எவ்வாறு வருந்தினர்?**

➤ பழகிய நிலத்தை விட்டு இடம்பெயரும் நிலை ஏற்பட்டதால், ஆயர்தம் தலையில் சூடி இருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மலர்மாலை கசங்கியது; பலர் சேர்ந்து குளிர் நடுக்கம் போக்கக் கைகளுக்குக் கொள்ளி நெருப்பினால் சூடு ஏற்றியபோதிலும், பற்கள் நடுங்க வருந்தினர்.

**8. வாடையால் விலங்கினங்கள் எவ்வாறு வருந்தின?**

➤ விலங்குகள் வாடையால் மேய்ச்சலை மறந்தன;

➤ குரங்குகள் நடுங்கின; பறவைகள் தாம் தங்கியிருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன;

➤ பசுக்கள், பால் உண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

**9. சங்க இலக்கியப் பதிவால் பெறப்படும் வாழ்வியல் மாற்றம் யாது?**

➤ முல்லைநில மக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்வில், மழையாலும் குளிராலும் ஏற்படும் மாற்றத்தைச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

**10. 'நெடுநல்வாடை' – பிரித்துப் பொருள் தருக.**

➤ நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை.

➤ அதாவது, தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பம் மிகுந்ததால், 'நெடுவாடை';

➤ போர்ப் பாசறையில் தங்கிய தலைவன் வெற்றி பெற ஏதுவானதால், 'நல்வாடை'.

➤ எனவே, 'நெடுநல்வாடை' ஆயிற்று.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## சிறுவினா

1. **வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?** (Sep. -20, Mar.-23)

★ வாடைக் காலத்தில் பெய்த பெருமழையால் வெள்ளம் பெருகியது.
★ தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், பெருகிய வெள்ளத்தை வெறுத்தனர்.
★ தம் நிரைகளை மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
★ அவர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின.
★ மலையையே நடுங்கச் செய்வதுபோன்ற குளிரில் பாதுகாப்பைத் தேடினர்.
★ ஆயர் பலர் சேர்ந்து, கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர்.
★ எனினும், அவர்களின் பற்கள் வாடைக் குளிரில் நடுங்கின.

## கூடுதல் வினாக்கள்

2. **குளிர்காலத்தில் பறவைகளும் விலங்குகளும் எவ்வாறு நடுங்கியதாக நெடுநல்வாடை கூறுகிறது?** (Mar.-20, PTA - 6)

➤ மிகுந்த குளிரால் விலங்குகள் மேய்ச்சலை மறந்தன.
➤ பெண் குரங்குகளின் உடல்கள், குளிரால் கூனிப் போயின.
➤ பறவைகள், குளிரால் நடுங்கி மரத்தின் மீதிருந்து கீழே விழுந்தன.
➤ கன்றுகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்கள், கன்றுகளைத் தவிர்த்தன.
➤ குன்றையே குளிர்விப்பதுபோலக் கூதிர்காலத்து நள்ளிரவு இருந்தது.
➤ குளிர்க்காலத்தின் தன்மையால் நிகழ்ந்தனவாக, இவற்றை நெடுநல்வாடை கூறுகிறது..

3. **நெடுநல்வாடை குறித்து நீ அறிவன யாவை?**

➤ நெடுநல்வாடை, சங்க இலக்கியம் சார்ந்த 'பத்துப்பாட்டு' நூல்களுள் ஒன்று.
➤ இப்பாட்டின் தலைவன், பாண்டியன் நெடுஞ்செழியன்.
➤ இதனை இயற்றியவர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்.
➤ இதனை, 188 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாக நக்கீரர் இயற்றியுள்ளார்.
➤ இப்பாட்டுள் வரும் தலைவி, தன் தலைவனைப் பிரிந்து துன்புற்றதனால், 'நீண்டவாடை' ஆயிற்று.
➤ தலைவியைப் பிரிந்து போர்ப்பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு, வெற்றிபெற ஏற்றதாக இருந்ததால், 'நல்லவாடை' ஆயிற்று. எனவே, நூலுக்கு 'நெடுநல்வாடை' என்பது பெயராயிற்று.

## நெடுவினா

1. **நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.** (PTA -2,5)

**புதுப்பெயல் :**

மேகமானது தான் தங்கி இருந்த பெரிய மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு, விண்ணில் எழுந்தது. அதனைத் தொடர்ந்து உலகம் குளிர்ச்சி பெறுமாறு **மழையைப் பொழிந்தது.** அதனால் தாழ்வான பகுதிகளில், பெருவெள்ளம் புரண்டது. காற்றும் மழையும் தொடர்ந்ததால், பருவநிலை மாறியது.

**வாழ்வு மாற்றம் :**

புதுப்பெயலால் **ஆயர் இனமக்கள்** தங்கியிருந்த நிலப்பரப்பில் நீர் சூழ்ந்தது. தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், தம் **ஆநிரைகளோடு** மேடான நிலங்களைத் தேடினர். அவற்றைக் காப்பதற்கும், மேயவிடுவதற்கும் தாம் முன்னர் வாழ்ந்த பகுதியிலிருந்து புலம்பெயர நேர்ந்தது.

**வாடைக்கால வாழ்வு :**

பெருமழை பெய்த வாடைக்காலத்தில், ஆயர்கள் சூடியிருந்த **காந்தள்மலர் மாலைகள்** கசங்கின. மலையையே குளிரால் நடுங்கச் செய்வதுபோன்ற குளிர் வாட்டியது. எனவே, பாதுகாப்பைத் தேடி ஆயர் பலர் ஒன்று சேர்ந்து, **கொள்ளி நெருப்புகொண்டு** கைகளுக்குச் சூடு ஏற்றினர். எனினும், அவர்களின் பற்கள் நடுங்கின. விலங்கினங்கள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கிக் கொண்டிருந்தன. பறவைகள், தங்கி இருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன. பசுக்களோ, தம் கன்றுகளுக்குப் பாலூட்ட மறுத்தன. இவ்வகையில் நக்கீரர், தமது நெடுநல்வாடையில் **மக்கள் வாழ்க்கையைப்** படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## பலவுள் தெரிக

1. பொருத்துக.
அ. குரங்குகள் – 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ. விலங்குகள் – 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ. பறவைகள் – 3. குளிரால் நடுங்கின
ஈ. பசுக்கள் – 4. மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4
**விடை : ஆ) 3, 4, 2, 1**

2. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு _______. (Mar.-20, Sep. - 20)
அ) வினைத்தொகை. ஆ) உரிச்சொல் தொடர்.
இ) இடைச்சொடல் தொடர். ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
**விடை : ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

## கூடுதல் வினாக்கள்

3. பழந்தமிழர், ஓராண்டை ______ பருவங்களாக வகைப்படுத்தினர். (PTA - 2)
அ) பன்னிரண்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) நான்கு
**விடை : இ) ஆறு**

4. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ______. (PTA - 4)
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) நற்றிணை
**விடை : இ) நெடுநல்வாடை**

5. நெடுநல்வாடை, ______ அடிகளைக் கொண்டது. (PTA - 2)
அ) 202 ஆ) 185 இ) 188 ஈ) 306
**விடை : இ) 188**

6. ‘நெடுநல்வாடை’ என்பது ______ எனப் பிரிவது சரி.
அ) நெடு + நல்வாடை ஆ) நெடுநல் + வாடை
இ) நெடு + நன்மை + வாடை ஈ) நெடுமை + நன்மை + வாடை
**விடை : ஈ) நெடுமை + நன்மை + வாடை**

7. வெற்றியின் அடையாளமாகச் சூடுவது _______.
அ) காந்தள் பூ ஆ)கரந்தைப் பூ இ) வஞ்சிப்பூ ஈ) வாகைப்பூ
**விடை : ஈ) வாகைப்பூ**

8. ‘கூதிர்ப் பருவம்’ என்பது ______ மாதங்கள்.
அ) ஐப்பசி, புரட்டாசி ஆ) கார்த்திகை, மார்கழி
இ) புரட்டாசி, கார்த்திகை ஈ) ஐப்பசி, கார்த்திகை
**விடை : ஈ) ஐப்பசி, கார்த்திகை**

9. உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை மாற்றம் பெறுவது, ______.
அ) பருவமழையால் ஆ) ஆயர் பசு மேய்ப்பதால்
இ) புது வெள்ளத்தால் ஈ) பருவ மாற்றங்களால்
**விடை : பருவ மாற்றங்களால்**

10. ஆயர், எதனால் வருத்தம் அடைந்தனர்?
அ) மேகம் சூழ்ந்ததால். ஆ) புதிய மழை பொழிந்ததால்.
இ) நிரைகளை மேடான நிலத்தில் மேயவிட்டதால்.
ஈ) தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால்.
**விடை : ஈ) தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால்.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

11. ஆயர்கள், தலையில் சூடியிருந்த ______ மாலை கசங்கியது.
அ) வாகை ஆ) காந்தள் இ) மல்லிகை ஈ) முல்லை
**விடை : ஆ) காந்தள்**

12. ஆர்கலி **முனைஇய** – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.
அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
**விடை : ஈ) சொல்லிசை அளபெடை**

13. கவுள் **புடையூஉ** நடுங்க – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.
அ) உயிர் அளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) சொல்லிசையளபெடை ஈ) இன்னிசையளபெடை
**விடை : ஈ) இன்னிசையளபெடை**

14. குன்று குளிர்ப்**பன்ன** கூதிர் – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.
அ) உவமானம் ஆ) உவமை இ) உவமை உருபு ஈ) உவமைச்சொல்
**விடை : இ) உவமை உருபு**

15. 'கலங்கி கோடல்' என்பதில் 'கலங்கி' என்பது ______.
அ) வினைமுற்று ஆ) பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்
**விடை : இ)வினையெச்சம்**

16. 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' எனும் விதிப்படி புணரும் சொல் ______.
அ) வலனேர்பு ஆ) பொழிந்தன இ) இனநிரை ஈ) கண்ணிநீர்
**விடை : இ) இனநிரை**

## இலக்கணக்குறிப்பு

**வளைஇ, முனைஇய** – சொல்லிசை அளபெடைகள்.
**புடையூஉ** – இன்னிசையளபெடை.
**பொய்யா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
**பனிப்ப, பரப்பி, கலங்கி, நலிய, மறப்ப, வீழ** – வினையெச்சங்கள்.
**புதுப்பெயல், கொடுங்கோல், பெரும்பனி** – பண்புத்தொகைகள்.
**படிவன** வீழ – வினையெச்ச விகுதி.

## உறுப்பிலக்கணம்

1. **கலங்கி – கலங்கு + இ**
**கலங்கு** – பகுதி; **இ** – வினையெச்ச விகுதி.
2. **படிவன – படி + வ் + அன் + அ**
**படி** – பகுதி; **வ்** – எதிர்கால இடைநிலை; **அன்** – சாரியை; **அ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **இனநிரை – இனம் + நிரை**
'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' என்னும் விதிப்படி – இனநிரை எனப் புணர்ந்தது.
2. **புதுப்பெயல் – புதுமை + பெயல்**
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – புது + பெயல் என்னும் விதிப்படி 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிப்படி – புதுப்பெயல் எனப் புணர்ந்தது.
3. **பெரும்பனி – பெருமை + பனி**
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – பெரு + பனி
'இனமிகல்' என்னும் விதிப்படி – பெரும் + பனி – பெரும்பனி எனப் புணர்ந்தது.
4. **கொடுங்கோல் – கொடுமை + கோல்**
'ஈறுபோதல்' என்னும் விதிப்படி – கொடு + கோல்
'இனமிகல்' என்னும் விதிப்படி – கொடுங் + கோல் – கொடுங்கோல் எனப் புணர்ந்தது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 3

## உரைநடை உலகம்

# 1. தமிழர் குடும்பமுறை

(பக்தவத்சல பாரதி)

### நம்மை அளப்போம்

### குறுவினா

1. **புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.** (PTA - 6, Mar.-20)

★ சங்க இலக்கியத்தில், **தற்காலிகத் தங்குமிடம்** அல்லது தற்காலிகப் புகலிடம் 'புக்கில்' எனப்பட்டது. திருமணத்திற்குப்பின் பெற்றோரிடமிருந்து பிரிந்து, கணவனும் மனைவியும் **தனியாக வாழுமிடம்** 'தன்மனை' எனப்பட்டது.

2. **சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகத்துறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?** (Sep. - 21)

★ சங்ககாலத்தில் சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள்.
★ திருமணம் செய்த பின்னரும் பெண் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்ந்தாள்.
★ குடும்பங்களில் குலத்தொடர்ச்சிக்கு பெண்களே உரியவர்களாயினர்.
★ பெண்குழந்தைகளின் பேறு பெரிதும் விரும்பப்பட்டது.
★ அதனால் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

### கூடுதல் வினாக்கள்

3. **குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது எது?** (May - 22)

➤ மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக்கு அடிப்படையான குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு, **திருமணம்** என்பதே அடிப்படையாக இருக்கிறது.

4. **குடும்பம் எனும் சொல் எவ்வாறு அமைந்தது?**

➤ கூடி வாழ்தல் என்னும் பொருளுடைய, 'குடும்பு' எனும் சொல்லுடன் 'அம்', எனும் விகுதி சேர்த்துப் பொருண்மை விளக்கமாகக் 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது.

5. **தொல்காப்பியம் குறிப்பிடும் இரண்டு வாழிடங்களைக் கூறுக.**

➤ தொல்காப்பியப் பொருளியல் நூற்பா, **'இல், மனை'** ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

6. **சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்விடங்களின் பெயர்களைக் கூறுக.**

➤ இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலியன, சங்க இலக்கியங்களில் காணப்படும் வாழ்விடங்களின் பெயர்களாகும்.

7. **அகநானூற்றுப் பாடல் 'மனை' என்பதை எவ்வாறு பிரித்துப் பேசுகிறது?**

➤ மனைவியின் இல்லத்தைத் **'தம்மனை'** என்றும், கணவனின் இல்லத்தை **'நும்மனை'** என்றும் அகநானூற்று மருதத்திணைப் பாடல் பிரித்துப் பேசுகிறது.

8. **'மணந்தகம்' என்றால் என்ன?**

➤ குடும்பத்தின் தொடக்கமாகத் திருமணம் புரிந்த கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் சேர்ந்து ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே, 'மணந்தகம்' எனப்படுகிறது.

➤ தனக்குரிய உருவாக்கத்தின் தொடக்க நிலையான இது, முதல் குழந்தை பிறக்கும் வரையிலான காலக்கட்டத்தையும் குறிக்கிறது.

9. **தாயமுறை குறித்து எழுதுக.**

➤ சங்ககாலத்தில் திருமணம் செய்த பின்னரும் பெண் தனக்குரிய இல்லத்திலேயே தொடர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்தியதைத் தாயமுறை எனக் குறிப்பிட்டனர். திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியின் இல்லத்தில் சென்று வாழும் வாழ்க்கை நடைமுறையாகும்.

➤ இம்முறையில் தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் பெண்களுக்கே சென்று சேரும். தாய்வழிச் சொத்து பெண்களுக்கே தொடர்வதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**10. மனிதனைச் சமூக வயப்படுத்தும் பணி செய்யும் அடிப்படை அலகு எது?**

➤ மனித சமூகத்தின் அலகாக உள்ளது குடும்பம். மனிதனைச் சமூக வயப்படுத்தும் பணியை அவன் வாழும் காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் செய்வதில்லை.

**11. தாயமுறை என்பது என்ன?**

➤ சங்க காலத்தில் திருமணம் செய்த பின்னரும், பெண் தன் இல்லத்திலேயே வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தும் முறை இருந்துள்ளது. அதாவது, மனைவியின் இல்லத்திற்குக் கணவன் சென்று வாழ்வது நடைமுறையாக இருந்துள்ளது. இதுவே, 'தாயமுறை' எனப்பட்டது.

**12. சிலம்புகழி நோன்பு என்பது என்ன?**

➤ திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனுடைய தந்தை இல்லத்திற்கு வாழ வந்தபோது, அவனுடைய தாய், பெண்ணிற்குப் பூச்சூட்டி, பழைய கன்னிச் சிலம்புகளைக் களைந்து, புதுச்சிலம்பு பூட்டுவது 'சிலம்புகழி' நோன்பாகும்.

**13. சங்க காலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை இருந்துள்ளமையை எவ்வாறு அறியலாம்?**

➤ தந்தைவழிக் குடும்பமுறை, சங்க காலத்தில் மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளது. அதனைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் என்னும் பல்வேறு சமூகக் களங்களில் காணமுடிகிறது.

**14. நேர்வழி விரிந்த குடும்பமுறை என்றால் என்ன?**

➤ கணவன், மனைவி, மகன் ஆகியோருடன், பெற்றோர் ஒருவரின் தந்தையும் சேர்ந்து வாழ்வதே, நேர்வழி விரிந்த குடும்பமுறை எனப்படும்.

**15. சங்ககால மக்கள் இல்வாழ்வின் பயன் என எதைக் கருதினார்கள்?**

➤ மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறங் காத்தலே, இல்லறவாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் கருதினார்கள்.

**16. இன்றைய சமூக அமைப்பு எவ்வாறு உள்ளது?**

➤ கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும், தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் இன்றைய சமூக அமைப்பு இருக்கிறது.

**17. தாய்வழிச் சொத்துகள் யாருக்குப் போய்ச் சேர்ந்தன?**

➤ தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாய் இருந்தனர். பெண் குழந்தைகளின் பேறு, முதன்மையாக விரும்பப்பட்டது. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.

**18. தமிழர் பரம்பரைக் குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.**

➤ ஒரு குடும்பத்தின் பழமைதொட்டுப் பிற்கால நிலைவரை தொடரும் உறவுமுறைப் பெயர்கள் : பரன், பரை; சேயோன், சேயோள்; ஒட்டன், ஒட்டி; பூட்டன், பூட்டி; பாட்டன், பாட்டி; தந்தை, தாய்; நாம்; மகன், மகள்; பெயரன், பெயர்த்தி; கொள்ளுப் பெயரன், கொள்ளுப் பெயர்த்தி; எள்ளுப் பெயரன், எள்ளுப் பெயர்த்தி என, உறவுமுறைப் பெயர்கள் தமிழர் பரம்பரை வழக்கில் உள்ளன.

## சிறுவினாக்கள்

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் தருக.**

(PTA - 1, Sep.-21, May - 22)

★ மனித சமூகத்தின் அடிப்படை அலகாக இருப்பது குடும்பமே. சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூகத்தில் இது வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி, தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது.

★ கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து, கூட்டுக் குடும்பமாக அமைந்தது.

★ பெருமை நிறைந்த மக்களுடன், அறத்தை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்லறப் பயனாகக் கருதப்பட்டது.

★ கணவனின் சகோதர சகோதரிகள், தாய் தந்தையர் இணைந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில், இன்றைய கூட்டுக்குடும்பம் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக விளங்குகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**2. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

★ கூட்டுக் குடும்பத்தில் வாழ்கின்ற நான், தாத்தா, பாட்டிக்கு உதவி செய்கிறேன். அம்மா, அப்பா ஆகிய இருவரும் பணிக்குச் செல்வதால், குடும்ப வேலைகளைப் பகிர்ந்து செய்கிறேன்.

★ வீட்டிற்குத் தேவையான தண்ணீர் கொண்டு வருதல், மளிகைக் கடைக்குச் சென்றுவருதல், சில நேரங்களில் காய்கறிகள் வாங்கி வருதல் போன்ற வேலைகளையும் செய்கிறேன்.

★ விடுமுறை நாள்களில் என் ஆடைகளை நானே துவைத்துக் கொள்கிறேன்.

★ அப்பாவுடைய இரு சக்கர வாகனம், எனது மிதிவண்டி ஆகியவற்றை விடுமுறை நாள்களில் துடைத்துத் தூய்மையாக்குகிறேன். என்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறேன்.

## கூடுதல் வினாக்கள்

**3. தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும். (Mar.-23)**

➤ சங்ககாலத்தில் தாயே கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றிருந்தாள். குலத் தொடர்ச்சியும் தாய் வழியாகவே குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேர நாட்டு மருமக்கள் தாயமுறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்கப்பாடல் தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டதும் தாய்வழிச் சமூகத்தின் நிலையை உறுதிப்படுத்துகின்றன.

➤ திருமணம் செய்த பின்னரும், பெண் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை சங்ககாலத்தில் இருந்துள்ளது.

➤ திருமணத்திற்குப்பின்னர், கணவன் மனைவியின் இல்லத்தில் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது. குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் தாய்வழி முறையில் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்னும் இவையே தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளாகும்.

**4. வாழிடம் பற்றிச் சங்க இலக்கியம் கூறுவது யாது?**

➤ தொல்காப்பியம் இல், மனை என்னும் இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள், வாழிடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.

➤ அகநானூற்று மருதநிலப் பாடல் ஒன்று, மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் முறையே தம்மனை, நும்மனை எனப் பிரித்துப் பேசுகிறது. புறநானூற்றுப் பாடல், தற்காலிகத் தங்குமிடத்தைப் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோரைப் பிரிந்து தனியே வாழ்ந்த இடத்தைத் 'தன்மனை' எனவும் குறிப்பிடுகிறது.

➤ 'மனை' என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளது. நம்மனை, தம்மனை, எம்மனை, இம்மனை, உம்மனை, நின்மனை, நுந்தைமனை, நன்மனை, வறுமனை, வளமனை, இடிமனை, தாய்மனை என்பன, சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

**5. செவிலித்தாய் குறித்து அறிவன யாவை?**

➤ இளம் தம்பதியருக்கு தக்க அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணியைச் சங்ககாலத்தில் செய்தவர் செவிலித்தாயர். முதல்நிலை உறவினர்களை மட்டுமே ஓரளவு இனம் காணமுடிகிற சங்ககால குடும்ப அமைப்பில் மட்டுமே செவிலித்தாய் நற்றாய் (பெற்ற தாய்) ஒருபுறம் இருந்தாலும் செவிலித்தாயும் அவள் மகளுமாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர். சங்ககால ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பு ஏற்றிருந்ததை அறியமுடிகிறது.

## நெடுவினா

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. – எவ்வாறு? விளக்குக. (Sep.-21, May - 22)**

**குடும்பம் என்னும் அமைப்பு :**

குடும்பம் எனும் அமைப்பு, குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என விரிவு பெறுகிறது. **குடும்பமே, மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.** குடும்பம், திருமணம் இரண்டும் இணைந்தே செயல்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, முன்றில், குடில் போன்ற சொற்கள், குடும்பங்களின் வாழ்விடங்களைச் சுட்டுகின்றன. மனைவியின் இல்லம், '**தம்மனை**' என்றும், கணவனின் இல்லம், '**நும்மனை**' என்றும் பிரித்தே காணப்பட்டிருக்கிறது.

**தாய், தந்தைவழிக் குடும்பம் :**

சங்க காலத்தில் கண சமூகத்திற்குத் தாயே தலைமை தாங்குகிறாள். தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி வளர்கிறது. சேரநாட்டு **'மருமக்கள் தாயமுறை'** இதற்குச் சிறந்த சான்றாகும். 'சிறுவர் தாயே', 'முதியோள் சிறுவன்', 'இவளது மகன்' முதலான தொடர்கள், தாய்வழிச் சமூக நிலையைக் காட்டுகின்றன. சங்க காலத்திலேயே ஆண் மையச்சமூக முறையும் காணப்படுகிறது. **"மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே"** எனும் குறுந்தொகைப் பாடலால், பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறியமுடிகிறது. சங்க காலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை வலுவான, பரவலான முறையாக இருந்ததைக் காணலாம்.

**தனி, கூட்டுக் குடும்பங்கள் :**

தாய், தந்தை, குழந்தை என மூவருள்ள தனிக்குடும்பம், விரிவு பெற்றுக் கணவன், மனைவி, மகன், கணவனின் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்த குடும்பமுறை ஆகியவற்றைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். சங்க காலத்தில் இல்லற வாழ்வின் இறுதியில் பெருமைமிகு மக்களுடன் நிறைந்து, சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே, **இல்வாழ்வின் பயனாகும்** எனப்பட்டது. குடும்பம் என்ற அமைப்பு, தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என விரிந்தது. தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டு, **பண்பாட்டின் அடையாளமாக** மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது.

## பலவுள் தெரிக

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______. **(Sep. -21)**
   அ) அறவோர் துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
   **விடை : ஆ) திருமணமும் குடும்பமும்**

2. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
   சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது ______.**(Mar. -23)**
   அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
   இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை
   **விடை : ஈ) தந்தைவழிச் சமூகமுறை**

## கூடுதல் வினாக்கள்

3. சங்க காலத்தில் கண சமூகத்துக்குத் தலைமை ஏற்றவர் : **(Sep. -20)**
   அ) தாயே ஆ) தந்தையே இ) தலைவியே ஈ) தலைவனே
   **விடை : அ) தாயே**

4. மனித சமூகத்தின் அடிப்படை அலகு ______. **(PTA -2, 6)**
   அ) கணவன் ஆ) மனைவி இ) திருமணம் ஈ) குடும்பம்
   **விடை : ஈ) குடும்பம்**

5. 'தம்மனை' என்பது ______ இல்லம். **(Mar. -23)**
   அ) தந்தையின் ஆ) மனைவியின் இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்
   **விடை : ஆ) மனைவியின்**

6. குடும்பம் எனும் சொல், முதன்முதலில் ______ நூலில்தான் வருகிறது.
   அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) அகநானூறு
   **விடை : ஆ) திருக்குறள்**

7. சங்கப் பாடல்களில், 'மனை' எனும் சொல் குறிப்பது ______.
   அ) வாழ்விடம் ஆ) காவற்காடு இ) கோட்டை ஈ) சமவெளி
   **விடை : அ) வாழ்விடம்**

8. மணந்தகம் என்பது ______.
   அ) திருமணக்கூடம் ஆ) வீடு
   இ) கோவில் ஈ) இல்லறத் தொடக்கம்
   **விடை : ஈ) இல்லறத் தொடக்கம்**

9. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.
1. சங்க காலத்தில், கண சமூகத்திற்குத் தாயே தலைமை வகித்தார்.
2. திருமணம், குடும்பம் எனும் சொற்கள், தொல்காப்பியத்தில் எங்கும் இடம் பெறவில்லை.
மேற்கூறியவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடு.
அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் சரியில்லை
**விடை : இ) இரண்டும் சரி**

10. 'சமூகம்' என்ற அமைப்புவரை விரிவு பெறுவதன் தொடக்கம் ______.
அ) குலம் ஆ) கூட்டம் இ) பெருங்குழு ஈ) குடும்பம்
**விடை : ஈ) குடும்பம்**

11. மனைவியின் இல்லத்தைத் 'தம்மனை' எனவும் கணவனின் இல்லத்தை 'நும்மனை' எனவும் பிரித்துப் பேசும் போக்கு ______ பாடலில் காணப்படுகிறது.
அ) குறிஞ்சித் திணை ஆ) முல்லைத்திணை
இ) மருதத்திணை ஈ) நெய்தல் திணை
**விடை : இ) மருதத்திணை**

12. சங்ககாலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுவது ______
அ) மனையோர் கிளவி கேட்கும் ஆ) மனை வதுவை நல் மணம் கழி
இ) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் ஈ) மறியிடைப் படுத்த மாண்பினைபோல
**விடை : இ) வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**

13. தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதனால் ______ எனப்படும்.
அ) தந்தைவழிக் குடும்பம் ஆ) தாய்வழிக்குடும்பம்
இ) விரிந்த குடும்பம் ஈ) நெருக்கமான குடும்பம்
**விடை : ஈ) நெருக்கமான குடும்பம்**

14. சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர் ______.
அ) தந்தை ஆ) நற்றாய் இ) தோழி ஈ) செவிலித்தாய்
**விடை : ஈ) செவிலித்தாய்**

15. இளம் தம்பதியினரை நெறிப்படுத்தும் பணிக்கு உரியவர் ______.
அ) நற்றாய் ஆ) செவிலித்தாய் இ) தோழி ஈ) தந்தை
**விடை : ஆ) செவிலித்தாய்**

16. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல் ______.
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து
**விடை : ஆ) குறுந்தொகை**

17. இல்வாழ்வின் பயனாகக் கருதப்படுவது ______.
அ) தாய்வழிக் குடும்பம் ஆ) தந்தைவழிக் குடும்பம்
இ) மனையறம் காத்தல் ஈ) கூட்டுக் குடும்பம்
**விடை : இ) மனையறம் காத்தல்**

18. "சிலம்புகழி நோன்பு" செய்வதற்கு உரியவர் ______.
அ) நற்றாய் ஆ) செவிலித்தாய்
இ) தலைவனின் தாய் ஈ) தலைவியின் தாய்
**விடை : இ) தலைவனின் தாய்**

19. 'இலக்கிய மானிடவியல்' என்னும் நூலை இயற்றியவர் ______.
அ) சுப்பிரமணிய பாரதி ஆ) பக்தவச்சல பாரதி
இ) பாரதி பாஸ்கர் ஈ) சோமசுந்தர பாரதி
**விடை : ஆ) பக்தவச்சல பாரதி**

www.Padasalai.Net

# கவிதைப்பேழை

# 3. கம்பராமாயணம்

## நம்மை அளப்போம்

### குறுவினா

1. **நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?** (Sep. -21)

★ பொய்யான தன் உலகப்பற்று, இராமனைக் கண்டதால் அழிந்தது என்றும், அளவற்ற காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தைச் சவரி வெளிப்படுத்தினாள்.

2. **"துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது?" என்ற இராமனின் கூற்று, பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?** (Sep.-20)

**அ) நிழலின் அருமை வெயிலில் தெரியும்.**

**ஆ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

★ "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது?" என்ற இராமனின் கூற்று, "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்னும் பழமொழிக்குப் பொருந்தும்.

### கூடுதல் வினாக்கள்

3. **குகன் குறித்து நீ அறிவன யாவை?**

➤ வேடுவர் தலைவன் குகன்; பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன்;

➤ இராமன் காட்டிற்குச் சென்றபோது, கங்கையைக் கடக்க உதவியவன்.

➤ பேரரசனாக இருந்தும், அன்பினால் நட்பு முகிழ்ந்த இராமன், வேடுவனான குகனை உடன்பிறந்தானாக ஏற்றான். இராமன் இளவல் பரதனும், குகனைத் தனக்கு மூத்தவனாக ஏற்றான்.

4. **அமலன் நேர்ந்த உரை யாது?**

➤ உடன்வர விரும்பிய குகனைப் பார்த்து அமலனான இராமன், "என் உயிர்போன்ற நீ என் இளவல்; என் இளவல் இலக்குவன் உன்தம்பி; அழகிய நெற்றியை உடைய சீதை உன் அண்ணி!

➤ கடல் சூழ்ந்த உலகம் முழுமையும் உன்னுடையது. நான் உன் ஏவலுக்கு ஏற்பப் பணிபுரிவேன்" என்று உரைத்தான்.

5. **குகனுடன் இராமன் எவ்வாறு உறவு பாராட்டினான்?**

➤ தான் காடு செல்வதால் வருந்திய குகனை நோக்கி இராமன், "இப்பிரிவை எண்ணி வருந்தாதே! இதுவரை நாங்கள் உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம்.

➤ இப்போது உன்னையும் சேர்த்து, உடன்பிறந்தார் ஐவரானோம்" என்று, உறவு பாராட்டி ஆறுதல் கூறினான்.

6. **சடாயு குறித்து நீ அறிவன யாவை?**

➤ கழுகு வேந்தன் சடாயு, இராமனின் தந்தை தயரதனுக்கு நண்பன்.

➤ சீதையைச் சிறை எடுத்துவந்த இராவணனைத் தடுத்துப் போரிட்டுக் காயப்பட்டு வீழ்ந்தவன்.

➤ இராமன் தேடிவரும்வரை காத்திருந்து, நடந்ததைக் கூறியபின் உயிர்விட்டவன்.

➤ தந்தை நிலையில் வைத்து இராமனால் இறுதிச் சடங்குகள் செய்யப்பெற்றவன்.

7. **சவரி குறித்து அறிந்த செய்திகளை எழுதுக.**

➤ இராமனிடம் பக்தி கலந்த அன்பு கொண்டவள் சவரி. சீதையைத் தேடிவந்த, இராமனின் வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், சுக்கிரீவனுடன் நட்பு கொள்ளச் செய்தவள்.

➤ இராம இலக்குவரை வரவேற்று விருந்துபசாரம் செய்த சவரியிடம், இராமன் தாயன்பைப் பெற்றான்.

8. **இராமன் சவரியிடம் கேட்ட இன்னுரை யாது?**

➤ தன்னையே நினைத்துத் தவமிருந்தவள் சவரி என்பதனை அறிந்த இராமன், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று, பரிவுடன் கேட்டான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**9. அமுது இழி அருவிக் கண்ணாள் யார்? அவள் கூறியது என்ன?**

- அன்பின் கனிவால் அருவி இழிவதுபோல் கண்ணீர் வடித்தவள் சவரி.
- இராமனைக் கண்ட மகிழ்ச்சியில், "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது.
- அளவற்ற காலம் நான் மேற்கொண்ட தவம் பலித்தது. என் பிறவி ஒழிந்தது" என்றாள்.

**10. சுக்ரீவனை இராமன் எவ்வாறு நண்பனாக ஏற்றான்?**

- சீதையைத் தேடி வந்த இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான்.
- அந்தச் சுக்ரீவனை இராமன், நண்பனாக ஏற்றுக் கொண்டான்.

**11. சுக்ரீவனை உயிர்த்துணையாய் ஏற்ற இராமன் கூறியது என்ன?**

- சுக்ரீவனை உயிர்த்துணையால் ஏற்ற இராமன், "இனி, விண்ணிலும் மண்ணிலும் உன் பகைவர், என் பகைவர்; உன் நண்பர், என் நண்பர்;
- உன் உறவினர், என் உறவினர்; என் சுற்றம், உன் சுற்றம்.
- நீ என் உயிர்த்துணைவன்" என்று கூறி நட்பை உறுதி செய்தான்.

**12. வீடணன் யார்? இராமனை அடைக்கலம் புகுந்தது ஏன்?**

- இலங்கை வேந்தன் இராவணனுக்குத் தம்பி வீடணன்.
- இராவணனிடம் சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என, வீடணன் கூறினான்.
- அதனை ஏற்காத இராவணன், இழிமொழிகள் கூறி, வீடணனைக் கடிந்து உரைத்தான்.
- அதனால், இலங்கையை விட்டு நீங்கிய வீடணன், இராமனைத் தேடிவந்து, அடைக்கலம் வேண்டினான்.

**13. அடைக்கலம் வேண்டி வந்த வீடணனுக்கு இராமன் எதனைக் கொடுத்தான்?**

- அடைக்கலம் வேண்டி வந்த வீடணனிடம், "ஈரேழாகிய பதினான்கு உலகங்களும் என் பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம்வரை, ஆழமான கடல் நடுவே அமைந்த அரக்கர் வாழ் இலங்கை அரசாட்சி உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்" என்று கூறினான்.

**14. 'புதல்வரால் பொலிந்த நுந்தை' – யார்? எவ்வாறு?**

- புதல்வரால் பொலிந்த நுந்தை (தந்தை) தசரதன்.
- நால்வருள் ஒருவனாகப் பிறந்த இராமன், தந்தை தயரதனால் காட்டிற்கு அனுப்பப்பட்டான்.
- இராமன், குகனையும், சுக்ரீவனையும், வீடணனையும் சந்தித்து உடன்பிறந்தவர் களாக ஏற்றான்.
- எனவே, அடைக்கலம் வேண்டி வந்த வீடணனிடம் இராமன், "நின்னொடும் எழுவர் ஆனோம். புகலரும் கானம் தந்து, நுந்தை புதல்வரால் பொலிந்தான்" எனக் கூறினான்.

**15. காவிய இராமனைக் கம்பன் எப்பண்புகளின் படிமமாகப் படைத்துள்ளான்?**

- "யாவரும் கேளிர், சிறியோரை இகழ்தல் இலமே, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். காக்கை குருவி எங்கள் ஜாதி" என்னும் பண்புகளின் படிமமாக, இராமனைக் கம்பன் படைத்துள்ளான்.

**16. இராமன் எவற்றை எல்லாம் கடந்து தன் அன்பை விரிவுபடுத்துகிறான்?**

- தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியமாகிய எல்லைகள் அனைத்தையும் கடந்து வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகளைக் கடந்து, இராமன் தன் அன்பின் எல்லையை விரிவுபடுத்துகிறான்.

**17. கம்பராமாயணம் எவ்வாறு போற்றப்படுகிறது?**

- கவிச்சக்கரவர்த்தி கம்பர், தாம் இயற்றிய நூலுக்கு 'இராமகாதை' என்றே பெயர் சூட்டினார்.
- கம்பனது கவிநலத்தின் காரணமாக இது, 'கம்பராமாயணம்' என்றே அழைக்கப்படுகிறது.
- பன்னிரண்டாம் நூற்றாண்டு முதலே, மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுகிறது.

**18. கம்பர் – சிறு குறிப்பு வரைக.**

- கம்பர் சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தார். இவர் தந்தை ஆதித்தர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல். இவர் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
- கம்பராமாயணம் எழுதப்பட்ட காலந்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## சிறுவினாக்கள்

**1. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.** (PTA - 1,4,6)

★ காட்டிற்குப் போன இராமன், கங்கையைக் கடக்க வேடுவர் தலைவன் குகன் உதவினான். பேரரசனாக இருப்பினும், வேடன் குகனிடம் நட்பு முகிழ்த்ததால், ஐந்தாம் உடன்பிறந்தானாக ஏற்றான்.

★ கிட்கிந்தையில் அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனை, "உன் கிளை எனது; என் சுற்றம் உன் சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்" எனக் கூறி, ஆறாம் உடன்பிறந்தானாக இராமன் ஏற்றான்.

★ சீதையைக் கவர்ந்துவந்தது தவறெனக் கூறியதை ஏற்காமல், அதற்காகக் கடிந்த அண்ணன் இராவணனை விலக்கித் தன்னிடம் அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை இராமன், ஏழாம் உடன்பிறந்தானாக ஏற்றான். இவையே, "குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான" நிகழ்வாகும்.

**2. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.** (Sep.-21, May-22)

★ சீதையைச் சிறை எடுத்த இராவணனைத் தடுத்துப் போரிட்டுத் தன் சிறகுகளை இழந்து, குற்றுயிராய்க் கிடந்த சடாயு, இராமனிடம் நடந்ததைக் கூறி இறந்தான். இறந்த சடாயுவைத் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் இறுதிச் சடங்குகளைச் செய்ய இராமன் முடிவெடுத்தான்.

★ மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். அதில், சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்தான். தேவையான அளவுக்குத் தருப்பைப் புற்களையும் சேர்த்து ஒழுங்குபட அடுக்கினான்; மலர்களைத் தூவினான்; நன்னீர் கொண்டுவந்தான்.

★ சடாயுவின் உடலைத் தன் தந்தையின் உடலாகவே கருதிப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்து, மேடையில் வைத்து இறுதிச் சடங்குகளை முடித்துக் கடமையாற்றினான்.

## கூடுதல் வினாக்கள்

**3. "அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : அயோத்தியா காண்டத்தின் குகப் படலத்துள், வேடுவர் தலைவன் குகனிடத்தில் பேரரசனாயினும், கானகம் சென்ற இராமன் கூறியதாக இத்தொடர் இடம் பெற்றுள்ளது.

**விளக்கம்** : கங்கையைக் கடக்க உதவிய குகன், 'இராமன் காட்டிற்குச் சென்று வருந்துவானே' என எண்ணியபோது, இராமன், "குகனே! துன்பம் என ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும்! இப்போது நம்மிடையே பிரிவு நேரிடுகிறதே என்று எண்ணாதே. நாங்கள் இதுவரை உடன்பிறந்தார் நால்வராக இருந்தோம்! உறவு என்பது எங்கள் நால்வரோடு முடிவதில்லை. இப்போது அன்பினால் இணைந்த உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம்" என்று கூறி, உறவை உறுதிப்படுத்தினான்.

**4. "தீது இன்றி இருந்தனை போலும்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : ஆரணிய காண்டம் 'சவரி பிறப்பு நீங்கு படலம்' பகுதியில் சவரியைச் சந்தித்த இராமன், தன்பால் சவரி கொண்ட அன்பையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்து, தாயென அன்பு காட்டிப் பரிவுடன் பேசியது இது.

**விளக்கம்** : சீதையைக் காணாது காட்டில் அலைந்து திரிந்த இராமன், அன்பும் பக்தியும் நிறைந்த சவரியைக் கண்டான். தாய்போல் பாசம் காட்டிய சவரி, இராமனின் வாழ்வில் ஒரு திருப்பத்தை உண்டாக்கும் வகையில், சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு கூறினாள். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம் இராமன், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா" என்று, பரிவுடன் கேட்டான்.

**5. "நீ என் இன்னுயிர்த் துணைவன்" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : கிட்கிந்தா காண்டத்தின் நட்புகோட் படலத்தில், அனுமனால் சுக்ரீவனைக் கண்ட இராமன் கூறிய கூற்று இது.

**விளக்கம்** : சீதையைத் தேடிக் கானகத்தில் அலைந்தபோது, அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனைச் சந்தித்து நண்பனாக ஏற்றான். அரக்கர்களை அழித்து, அறத்தை உலகில் நிலைநாட்ட இராமனும் சுக்ரீவனும் இணைந்தனர். அப்போது சுக்ரீவனிடம் இராமன், "இனி நான் உரைப்பதற்கு என்ன இருக்கிறது? இம்மண்ணிலும் விண்ணிலும் இருக்கும் உன் பகைவர் என் பகைவராவர். தீயவராக இருப்பினும், உன் நண்பர் எனக்கு உற்ற நண்பராவர். உன் உறவினர் என் உறவினராவர். அன்பு மிகுந்த என் சுற்றத்தவர், உனக்குச் சுற்றத்தவராவர்! நீ என் இனிய உயிர்த் துணைவனாவாய்" என்று கூறினான்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**6. புதல்வரால் பொலிந்தவன் யார்? ஏன்? எவ்வாறு?**

- புதல்வரால் பொலிந்தவன் தயரத மாமன்னன். தயரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கனன் என்னும் நால்வர் புதல்வராவர். தன்னைக் காட்டுக்கு அனுப்பியதால் தந்தை தயரதன், புதல்வரால் பொலிந்ததாக இராமன் கூறுகிறான்.
- தன்னிடம் அடைக்கலம் புகுந்த வீடணனை உடன் பிறந்தானாக ஏற்ற இராமன், "என் தந்தை, என்னைக் கானகத்திற்கு அனுப்பியதால், குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம்; மேருமலையைச் சுற்றிவரும் கதிரவனின் மகன் சுக்ரீவனுடன் அறுவரானோம்;
- "உள்ளத்தில் அன்பு கொண்டு என்னிடம் வந்த உன்னுடன் சேர்த்து எழுவரானோம்" என்று கூறித் தயரதன், புதல்வரால் பொலிந்ததை விளக்கியுள்ளான்.

**7. கம்பராமாயணம் – குறிப்பு வரைக.**

- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயரிட்டார்.
- அயோத்யா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோருடன், இராமன் கொண்ட உறவு பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- கம்பராமாயணம், பல்வேறு விதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது, சமமாக அன்பு காட்டும் பாத்திரமாக இந்நூலில் படைக்கப்பட்டிருக்கிறான்.
- இந்நூல் எழுதப்பட்ட காலந்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் காரணம், கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே.

**8. அடைக்கலம் புகுந்த வீடணனுக்கு இராமன் அளித்த உறுதிமொழி யாது?**

- சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என வீடணன் கூறியதால், அவனை அண்ணன் இராவணன் கடிந்து உரைத்தான். எனவே, வீடணன் இலங்கையைவிட்டு வெளியேறி, இராமன் இருக்குமிடம் அடைந்து, அடைக்கலம் வேண்டினான்.
- தன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனை அணைத்து, "ஆழமான கடல் நடுவே உள்ளதும், அரக்கர்கள் வாழ்வதுமான இலங்கையின் ஆட்சி உரிமையை, ஈரேழு பதினான்கு உலகங்களும் என் பெயரும் நிலைத்துள்ள காலம்வரை உனக்கே தந்தேன்" என்று, இராமன் உறுதியளித்தான்.

## நெடுவினா

**பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.** **(PTA - 3, Sep.-20)**

கம்பர், தான் படைத்த காப்பியத்தின் தலைவனான இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளார். தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம், பிற எல்லைகள் என அனைத்தையும் கடந்து, இவனுக்கு முன்போ, பின்போ இப்படி ஒருவன் இருந்தான் எனச் சுட்டிக் காட்ட முடியாத இயல்புகளைக் கொண்டவனாகப் படைத்துள்ளார்.

காடு செல்லும் இராமன், வேடுவர் தலைவன் குகனைக் காண்கிறான். கங்கை ஆற்றைக் கடக்க அந்தக் குகன் உதவுகிறான். கானகத்தில் இராமன் துன்பமடைவானே எனக் குகன் வருந்துகிறான். 'துன்பம் இருந்தால்தானே இன்பம் புலப்படும்' என்று கூறி, வேடனான குகனை இராமன் உடன் பிறந்தானாக ஏற்று, "அன்பு உள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" எனக் கூறினான். இவ்வுறவைப் பின்னர்க் குகனைச் சந்தித்த பரதனும் உறுதி செய்தான்.

சீதையைப் பிரிந்து வாடிய இராமன், தம்பி இலக்குவனோடு சீதையைத் தேடிச் சென்றபோது, காயப்பட்டுக் கிடந்த கழுகுவேந்தன் சடாயுவைக் கண்டான். சீதையை மீட்க இராவணனோடு தான் போராடிக் காயப்பட்டதைக் கூறிச் சடாயு உயிர் துறந்தான். இராமன், தன் தந்தையின் நண்பரான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையிலிருந்து இறுதிச் சடங்குகளைச் செய்தான். தொடர்ந்து சீதையைத் தேடிய இராம இலக்குவர், சவரி என்னும் வயது முதிர்ந்த பெண்ணைக் கண்டனர்.

சவரி செய்த விருந்து உபசரிப்பால், அவள் தன்னைக் காணத் தவமிருந்தவள் என்பதை அறிந்து மனம் நெகிழ்ந்து, "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாயல்லவா?" என விசாரித்தான். கண்ணீர் பெருக்கிய சவரி, " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; என் தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என மகிழ்ந்து கூறி, இராமனைச் சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு அறிவுறுத்திச் சீதையைத் தேடுதலில் ஒரு திருப்பத்தை உண்டாக்கினாள்.

www.Padasalai.Net www.CBSEtips.in


சவரியின் அறிவுரையை ஏற்றுச் சீதையைத் தேடிப் புறப்பட்ட இராம இலக்குவரைக் கண்ட அனுமன், நண்பனாக ஏற்கத்தக்க சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரராயினும் சுக்ரீவனிடம், "உன் கிளை எனது! என் சுற்றம் உன் சுற்றம்! நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்று கூறி, உறவு பூண்டான்.

இராமன் இலங்கையில் கால் பதித்தபோது, தான் கூறிய நல்லுரையை ஏற்காது கடிந்துரைத்த அண்ணன் இராவணனை வெறுத்து, வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அரக்கர் குலத்தில் பிறந்தவனாயினும், அவனைத் தன் உடன் பிறந்தானாக ஏற்ற இராமன், தன் உறவுகளை எல்லாம் கூறி, "குகனொடும் ஐவர் ஆனோம்; குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்! நின்னொடும் எழுவர் ஆனோம்" என்று, உடன் பிறந்தாரை உறுதி செய்தான்.

இவற்றை எல்லாம் நோக்க, தாய் தந்தை மீதான அன்பு, உடன் பிறப்பியம் என்னும் எல்லைகள் அனைத்தையும் கடந்து, இராமன் அன்பு செலுத்துகிறான். இராமனின் அன்பிற்கு வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்னும் வேலிகள் இல்லை என்பதையும் தெளியலாம்.

## கூடுதல் வினா

### இராமனிடம் வெளிப்படும் உடன்பிறப்பியப் பண்பினைக் கம்பராமாயணம் வழிநின்று விளக்குக (Sep.-20)

**முன்னுரை :**

குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் என்று அனைவரிடத்திலும் இராமன் கொண்டிருந்த உறவுநிலை, கம்பராமாயணத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. "தன்னைப்போலப் பிறரை நினை" என்னும் கூற்றை மெய்ப்பிப்பதுபோல் அமைந்த இராமனின் வாழ்க்கையைப் பற்றி, இப்பகுதி தெளிவாக எடுத்துரைக்கிறது.

**குகன் :**

வேடுவர் தலைவன் குகன்; பாறை உடலையும், பஞ்சுபோன்ற மென்மையான உள்ளத்தையும் கொண்டவன்; காட்டிற்குச் சென்ற இராமனுக்குக் கங்கை நதியைக் கடக்க உதவுகிறான். குகனுக்கும் இராமனுக்கும் இங்கு நட்புறவு உருவாகிறது. அதனால், பேரரசனான இராமன், வேடனான குகனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக்கொள்கிறான்.

**சடாயு :**

கழுகுகளின் அரசன் சடாயு. சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, சடாயு அவனைத் தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமன் சந்தித்தபோது, இராமனிடம் நடந்தவற்றைக் கூறியபின் உயிர்விடுகிறான். தன் தந்தையின் நண்பனான கழுகு வேந்தன் சடாயுவைத் தன் சொந்தத் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் தன்னை நிறுத்தி, அச்சடாயுவுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான் இராமன்.

**சவரி :**

இராமனிடம் மிகுதியான அன்பையும், பக்தியையும் கொண்டவள் சவரி. சீதையைத் தேடி வந்த இராமனைச் சுக்ரீவனுடன் நட்புகொள்ளுமாறு, செய்தவள் இந்தச் சவரி. இவ்வகையில் காப்பியத்தின் போக்கில், ஒரு நல்ல திருப்பத்தை உருவாக்கியவள் சவரி.

**சுக்ரீவன் :**

சீதையைத் தேடி வந்த இராமஇலக்குவரைச் சந்தித்த அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரனாயினும் சுக்ரீவனிடம் இராமன், "உன் சுற்றம் என் சுற்றம். இனி நீ வேறு நான் வேறு அல்ல" என்று கூறி, அவனைத் தன் உறவாக ஏற்றுக் கொள்கிறான்.

**வீடணன் :**

சீதையைக் கவர்ந்தது தவறெனத் தன் அண்ணன் இராவணனிடம் கடிந்து உரைத்து, அவனைப் பிரிந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். அவனையும் இராமன் தன் உடன்பிறந்தவனாக ஏற்று, இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

**முடிவுரை :**

அனைத்து உயிர்களையும் நேசிக்கும் பண்புடைய இராமன், வேடுவன் குகனைத் தன் உடன்பிறப்பாகவும், சடாயுவைத் தன் தந்தையாகவும், சவரியைத் தன் தாயாகவும், சுக்ரீவனைத் தன் உறவினனாகவும், வீடணனைச் சகோதரனாகவும் ஏற்றுக்கொண்டு பண்பின் சிகரமாக விளங்குகிறான்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பலவுள் தெரிக

1. "உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்? (Sep. -20)
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
**விடை : இ) இராமன், சுக்ரீவன்**

## கூடுதல் வினாக்கள்

2. சரியானதைத் தேர்க. (PTA - 5)
அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் புறப்பட்டான்.
**விடை : இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.**

3. 'குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்' இங்கு குறிப்பிடப்படுபவர் ______. (PTA - 5)
அ) வாலி ஆ) சுக்ரீவன் இ) வீடணன் ஈ) குகன்
**விடை : ஆ) சுக்ரீவன்**

4. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – 'உவா' என்பதன் பொருள் ______. (Dept., Sep. - 20)
அ) சந்திரன் ஆ) சூரியன் இ) பௌர்ணமி ஈ) அமாவாசை
**விடை : ஈ) அமாவாசை**

5. 'அருங்கானம்' – புணர்ச்சிவிதி தருக. (Mar.-20)
அ) ஈறுபோதல், ஆதிநீடல்
ஆ) ஈறுபோதல், இணையவும் பண்பிற்கு இயல்பே
இ) ஈறுபோதல், இனமிகல்
ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்
**விடை : இ) ஈறுபோதல், இனமிகல்**

6. வேடுவர் தலைவன் ______ ஆவான். (May-22)
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) வீடணன்
**விடை : ஆ) குகன்**

7. 'தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ______.
அ) யாவரும் கேளிர் ஆ) சிறியோரை இகழ்தல் இலமே
இ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஈ) காக்கை குருவி எங்கள் சாதி
**விடை : ஈ) காக்கை குருவி எங்கள் சாதி**

8. "அமலனும் உரை நேர்வான்" 'அமலன்' எனக் குறிப்பிடப்பட்டவன் ______.
அ) குகன் ஆ) பரதன் இ) இராமன் ஈ) இலக்குவன்
**விடை : இ) இராமன்**

9. "தந்தனன் தாதை தன்னை" – இதில் 'தாதை' என்று குறிப்பிடப்படுவது ______.
அ) தயரதன் ஆ) சவரி இ) சுக்கிரீவன் ஈ) சடாயு
**விடை : ஈ) சடாயு**

10. 'இன்னுரை' என்பது ______ எனப் பிரியும்.
அ) இன் + னுரை ஆ) இன் + உரை இ) இனிமை + உரை ஈ) இனி + உரை
**விடை : இ) இனிமை + உரை**

11. "போயது பிறவி" என்று கூறியது ______.
அ) குகன் ஆ) சடாயு இ) வீடணன் ஈ) சவரி
**விடை : ஈ) சவரி**

www.Padasalai.Net

12. "அவா முதல் அறுத்த சிந்தை அனகன்" ______ யார்?
அ) குகன் ஆ) சடாயு இ) வீடணன் ஈ) இராமன்
**விடை : ஈ) இராமன்**

13. "அரியும் வேந்தும்" என்பது ______ குறிக்கும்.
அ) இராமன் ஆ) குகன் இ) சடாயு ஈ) சுக்ரீவன்
**விடை : ஈ) சுக்ரீவன்**

14. "அகன் அமர் காதல் ஐயன்" எனக் குறிப்பிடப்பட்டவர் ______.
அ) குகன் ஆ) சடாயு இ) சுக்ரீவன் ஈ) வீடணன்
**விடை : ஈ) வீடணன்**

15. புகல் அருங் கானம் தந்தவன் ______.
அ) குகன் ஆ) சுக்ரீவன் இ) அனுமன் ஈ) தயரதன்
**விடை : ஈ) தயரதன்**

16. 'இளவல் உன் இளையான்' என்பதில், 'இளையான்' எனக் குறிப்பிடப்பட்டவன் ______.
அ) குகன் ஆ) பரதன் இ) சுக்ரீவன் ஈ) இலக்குவன்
**விடை : ஈ) இலக்குவன்**

17. 'நன்னுதலவள்' என்னும் தொடர், ______ எனப் பிரியும்.
அ) நன் + னுதலாள் ஆ) நல் + நுதலவள்
இ) நல்ல + நுதலவள் ஈ) நன்மை + நுதல் + அவள்
**விடை : ஈ) நன்மை + நுதல் + அவள்**

18. 'நளிர்கடல்' என்பதற்கு இலக்கணக்குறிப்பு ______.
அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை
**விடை : ஈ) வினைத்தொகை**

19. 'துன்பு உளது எனின் அன்றோ, சுகம் உளது?' யார், யாரிடம் கூறியது?
அ) குகன் இராமனிடம் கூறியது ஆ) பரதன் குகனிடம் கூறியது
இ) இராமன் இலக்குவனிடம் கூறியது ஈ) இராமன் குகனிடம் கூறியது
**விடை : ஈ) இராமன், குகனிடம் கூறியது.**

20. 'இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' – இதில் குறிக்கப்பட்ட ஐந்தாவது நபர் யார்?
அ) சடாயு ஆ) சுக்ரீவன் இ) குகன் ஈ) வீடணன்
**விடை : இ) குகன்**

21. 'இன்னுரை' என்பது ______ எனப் பிரியும்.
அ) இன் + உரை அ) இன் + னுரை இ) இனிய + உரை ஈ) இனிமை + உரை
**விடை : ஈ) இனிமை + உரை**

22. 'ஓர் மூலம் இல்லான்' எனக் குறிப்பிடப்பட்டவன் ______.
அ) குகன் ஆ) இலக்குவன் இ) இராமன் ஈ) சவரி
**விடை : இ) இராமன்**

23. "மாண்டது என் மாயப் பாசம்" என்று யார், யாரிடம் கூறியது?
அ) இராமனிடம் குகன் ஆ) இலக்குவனிடம் சவரி
இ) சவரி, இராமனிடம் ஈ) இராமனிடம் சடாயு
**விடை : இ) சவரி, இராமனிடம்**

24. இராம இலக்குவரிடம் சுக்ரீவனை அழைத்து வந்தது ______.
அ) சடாயு ஆ) சவரி இ) குகன் ஈ) அனுமன்
**விடை : ஈ) அனுமன்**

25. 'புதல்வரால் பொலிந்தான் நுந்தை' – இதில், 'நுந்தை' எனக் குறிப்பிடப்பட்டவன் ______.
அ) குகன் ஆ) இராவணன் இ) சடாயு ஈ) தசரதன்

**விடை : ஈ) தசரதன்**

26. அ. யாவரும் கேளிர் – 1. தமிழர் உயிர்ப் பண்பின் முதிர்ச்சி
ஆ. சிறியோரை இகழ்தல் இலமே – 2. தமிழர் நற்பண்பின் மலர்ச்சி
இ. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் – 3. தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி
ஈ. காக்கை குருவி எங்கள் சாதி – 4. தமிழர் நற்பண்பின் வளர்ச்சி
அ) 4, 1, 2, 3 ஆ) 4, 2, 3, 1 இ) 4, 2, 1, 3 ஈ) 3, 2, 1, 4

**விடை : இ) 4, 2, 1, 3**

## இலக்கணக்குறிப்பு

**உளது** – ('உள்ளது' என்பதன்) இடைக்குறை விகாரம்
**மாதவம், தடக்கை** – உரிச்சொற்றொடர்கள்
**தாழ்கடல், நளிர்கடல், இழிஅருவி** – வினைத்தொகைகள்
**செற்றவர்** – வினையாலணையும் பெயர்
**நுந்தை** – 'நும் தந்தை' என்பதன் மரூஉ மொழி
**நோற்கும்** சவரி – பெயரெச்சம்
**தாவா** வலி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**பொலிந்தான்** – படர்க்கை ஆண்பால் இறந்தகால வினைமுற்று
**வலிஅரக்கர்** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
**நன்னுதல், இன்னுரை, அருங்கானம்** – பண்புத்தொகைகள்

## உறுப்பிலக்கணம்

1. **தந்தனன் – தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; **அன்** – சாரியை; **அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
2. **பொலிந்தான் – பொலி + த் (ந்) + த் + ஆன்**
**பொலி** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை;
**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
3. **தந்து – தா (த) + த் (ந்) + த் + உ**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
**உ** – வினையெச்ச விகுதி.
4. **தந்தேன் – தா (த) + த் (ந்) + த் + ஏன்**
**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
**ஏன்** – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சிவிதி

1. **அருங்கானம் – அருமை + கானம்**
"ஈறுபோதல்" – (அரு + கானம்); "இனம்மிகல்" – அருங்கானம்
2. **இன்னுரை – இனிமை + உரை**
"ஈறுபோதல்" (இனி + உரை); "இனையவும் பண்பிற்கு இயல்பே" (இன் + உரை)
"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (இன்ன் + உரை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" இன்னுரை
3. **நன்னுதல் – நன்மை + நுதல்**
"ஈறுபோதல்" (நன் + நுதல்); "ணலமுன் றனவும் ஆகும் தநக்கள்" நன்னுதல்

# இனிக்கும் இலக்கணம்

# 5. பொருள் மயக்கம்

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.
   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
   இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

   **விடை : இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.**

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
   அ) பாலை பாடினான் – 1. தேரை என்னும் தவளையினத்தைப் பார்த்தான்
   ஆ) பாலைப் பாடினான் – 2. தேரினைப் பார்த்தான்
   இ) தேரை பார்த்தான் – 3. பாலினைப் பாடினான்
   ஈ) தேரைப் பார்த்தான் – 4. பாலைத்திணை பாடினான்
   அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

   **விடை : இ) 4, 3, 1, 2**

3. **வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**
   மாணவர்கள் வரிசையில் நின்று, **அறிவியல் கண்**காட்சியைக் கண்டனர்.
   மாணவர்கள் வரிசையில் நின்று, **அறிவியல்கண்** காட்சியைக் கண்டனர்.

4. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**
   **எ – கா :** முன் : அவன் முன்வந்து கூறினான் / அவன்முன் வந்து கூறினான் **(Mar. - 20)**
   1. தானே: கந்தன் தானே செய்தான் / கந்தன்தானே செய்தான்? **(Mar. - 22)**
   2. கொண்டு : எடுத்து கொண்டுவந்தான் / எடுத்துக்கொண்டு வந்தான்
   3. விட்டான் : புறா பறக்கவிட்டான். / புறாபறக்க விட்டான்

5. **காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**
   சுந்தரி, அத்தை வீட்டிற்குச் சென்றாள். / சுந்தரி அத்தை, வீட்டிற்குச் சென்றாள்.

6. **சலசல, வந்துவந்து, கலகல, விம்மிவிம்மி – இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**
   சலசல, கலகல – இவை இரட்டைக்கிளவிகள். இச்சொற்களைப் பிரித்து எழுதக்கூடாது. சேர்த்தே எழுத வேண்டும். பிரித்தால் பொருள் தராது.
   i. மழைநீர் சலசலத்து ஓடியது. (சரி) மழைநீர் சல சலத்து ஓடியது. (பிழை)
   ii. சுந்தரி கலகலவெனச் சிரித்தாள். (சரி) சுந்தரி கல கலவெனச் சிரித்தாள். (பிழை)

7. **திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன்–இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?** **(PTA - 1, Sep.-21)**
   ★ திருவளர் செல்வன் – சரி. ‘வளர்செல்வன்’ என்பது வினைத்தொகை.
   ★ ‘வினைத்தொகைச் சொல்லுக்கு இடையில், வல்லினமெய் மிகக்கூடாது’ என்பது விதி.

## கூடுதல் வினாக்கள்

8. **பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெற வழி யாது?**
   ➤ தமிழ்மொழியைப் பேசும்போதும், படிக்கும்போதும், எழுதும்போதும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் சில உள்ளன. அவற்றைப் பின்பற்றினால், பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெறலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

9. **மொழியில் பொருள் குழப்பம் எப்போது ஏற்படும்?**

- தேவையான இடங்களில் இடைவெளி விடாமலும், தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டும் எழுதுவதனால் படிப்போர்க்கும், பேசுவதனால் கேட்போர்க்கும் மொழியில் பொருள் குழப்பம் ஏற்படும்.

10. **தொடர்களை எழுதுவதில் எப்போது பொருள் மாறுபாடு ஏற்படுகிறது?**

- தொடர்களை எழுதும்போது சொற்களின் இடையே விடவேண்டிய இடைவெளியை அறியாது, சொற்களைச் சேர்த்தோ, பிரித்தோ எழுதுவதால் பொருள் மாறுபடும்.

  எ – கா : i. இன்று, முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை.
  இன்றுமுதல், தோசைக்குச் சர்க்கரை இல்லை.
  ii. அம் மாநிலக் கடலை, சுவையானது.
  அம்மா, நிலக்கடலை சுவையானது.

- சொற்களைச் சேர்த்தோ பிரித்தோ எழுதும்போது, வல்லின மெய்கள் (க், ச், த், ப்) மிகுமாறு எழுதுவதாலும், தொடர்களில் பொருள் வேறுபடும்.

  எ – கா : i. கடலில் முத்து குளித்தான்; கடலில் முத்துக்குளித்தான்.
  ii. இரவி கையை எடு; இரவிக்கையை எடு.

11. **உரையாடும்போது பொருள் குழப்பம் ஏற்படாமைக்குக் காரணம் யாது?**

- உரையாடும்போது, குரலின் ஏற்ற இறக்கம், சொற்களின் அழுத்தம் அல்லது குழைவு, இறுதிச் சொல்லின் உணர்ச்சி ஆகியவற்றால், பொருள் உணர்வில் எந்தக் குழப்பமும், பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

12. **எழுதும்போது பொருள்குழப்பம் ஏற்படக் காரணம் என்ன?**

- எழுதும்போது, காற்புள்ளி முதலான நிறுத்தக் குறிகளை உரிய இடத்தில் இடாமையாலும், மாற்றி இடுவதனாலும், தொடருக்குரிய முழுமையான பொருளை உணரமுடியாது.

  எ – கா : அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.
  ('அந்தப்பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள்' என்பது பொருள்.)
  அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.
  ('அந்தப் பெண்ணின் அக்காள், அவளது வீட்டிற்குச் சென்றாள்' என்பது பொருள்.)

13. **சொல்லுருபை எவ்வாறு எழுதவேண்டும்? ஏன்?**

- தொடர்களை எழுதும்போது, சொற்களின் தெளிவான பொருளை உணர்த்தச் சொல்லுருபைச் சேர்த்தே எழுதவேண்டும்.

  எ – கா : வீட்டிலிருந்து சென்றான்.

- சொல்லுருபைப் பிரித்து எழுதினால், பொருள் வேறுபட்டு, மயக்கம் தரும்.

  எ – கா : வீட்டில் இருந்து சென்றான். (வீட்டில் இருந்துவிட்டுச் சென்றான் என்றாகிவிடும்.)

14. **தொடர்கள் எவ்வாறு அமைதல் வேண்டும். ஏன்?**

- ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியன அமைந்திருக்கும்.

  எ – கா : இராமன் காட்டிற்குச் சென்றான்.

- சில தொடர்களில் எழுவாய் மறைந்து வரும்.

  எ – கா : பாடம் படித்தேன்.

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன, முறையாக அமைந்தால், தொடர்களின் பொருள் தெளிவாகப் புரியும்.

15. **"ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்" – இத்தொடரில் அமைந்த பிழை யாது?**

- இத்தொடரில் பொருள்பிழை அமைந்துள்ளது. அதாவது, 'தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார்' என்னும் தவறான பொருளைத் தருகிறது.
- (சரியான) தெளிவான பொருளைத் தர, 'மறைந்த தி. ஜானகிராமன் நினைவாக, ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்' என, அமைதல் வேண்டும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


**16. கீழ்க்காணும் தொடர்களில் தெளிவான பொருளை உணர்த்தும் தொடரைத் தேர்க.**

அ) இராமனுடன் இலக்குவனும், காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் புறப்பட்டான்.
இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
ஈ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**விடை :** இ) இராமனுக்குப் பணிவிடை செய்ய, இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**17. 'யாரோ ஒருவருக்குப் பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளைத் தரும் தொடர் ______**

அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.
ஆ) பணிவிடை செய்ய. இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.
இ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய. இலக்குவனும் புறப்பட்டான்.
ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய. இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**விடை :** ஆ) பணிவிடை செய்ய, இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

**18. 'ஒருசொல்' என்னும் தன்மை கொண்ட சொற்கள் எவை? அவற்றை எவ்வாறு எழுத வேண்டும்?**

➤ பண்புத்தொகையாகவும், வினைத்தொகையாகவும் வரும் சொற்கள், ஒருசொல் என்னும் தன்மை கொண்டவையாதலால், பிரிக்காமல் சேர்த்தே எழுதவேண்டும்.

**எ – கா :** செங்கடல், அருங்கானம் (பண்புத்தொகைச் சொற்கள்)
கத்துகடல், தாழ்கடல் (வினைத்தொகைச் சொற்கள்)

**19. இடைச்சொற்கள் எவை? அவற்றை எவ்வாறு எழுத வேண்டும்?**

➤ பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்பவை இடைச்சொற்கள். அவற்றைப் பெறும் பெயர், வினைச்சொற்களோடு சேர்த்தே எழுதவேண்டும்.

**எ – கா :** அணங்குகொல், இராமன்பால் (இராமனிடம்), இராமன்கண் (இராமனிடம்)

**20. சரியான தொடர்களின் தொகுப்பைக் கண்டறிக.**

அ) உடம்படு மெய்கள் அமைந்த சொற்களைச் சேர்த்தே எழுதவேண்டும்.
ஆ) இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்தே எழுதவேண்டும்.
இ) நேரிணை, எதிரிணைச் சொற்களைத் தனித்தனிப் பிரித்தே எழுதவேண்டும்.
ஈ) பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும் உரிச்சொற்களைச் சேர்த்தே எழுதவேண்டும்.

அ) 1, 2, 3 ஆ) 2, 3, 4 இ) 1, 3, 4 ஈ) 1, 2, 4

**விடை : ஈ) 1, 2, 4**

**21. கீழ்க்காணும் தொடர்களில் சரியான தொடரைக் கண்டறிக.**

அ) நேரிணைச் சொற்களையும் எதிரிணைச் சொற்களையும் பிரித்து எழுதவேண்டும்.
ஆ) சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யாகவும், வருமொழிமுதல் உயிராகவும் வந்தால், அவற்றைத் தனித்தனியே எழுதவேண்டும்.
இ) பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகைச் சொற்களைச் சேர்த்தே எழுதவேண்டும்.
ஈ) அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றை எப்படியும் பயன்படுத்தலாம்.

**விடை : இ) பண்புத்தொகை, வினைத்தொகை, உம்மைத்தொகைச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.**

**22. இலக்கணப் பிழை தவிர்க்கச் சில குறிப்புகளைக் கூறுக.**

ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகவேண்டும். சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுவது, சிறந்த பயிற்சியாக அமையும். மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாததாகும். சில விதிமுறைகளை மனத்துள் பொதிந்து வைத்தல் வேண்டும். எழுதியதைத் திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்துப் பிழை இருப்பின், திருத்துவது இன்றியமையாததாகும்.

**23. பிழையற்ற தொடரைக் கண்டறிக.** **(Mar. - 20)**

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது.
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது.
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

**விடை :** அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## வாழ்வியல்

# 6. திருக்குறள்

### கற்பவை கற்றபின்

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

விடை : இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

2. கடலின் பெரியது ______.

அ) உற்ற காலத்தில் செய்த உதவி

ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

**விடை : ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.

| | |
|---|---|
| நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்<br>கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை<br>வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்<br>நினைப்ப வருவதொன் றில். | அ) இருவேறு உலகத்து இயற்கை திருவேறு<br>தெள்ளியர் ஆதலும் வேறு.<br>ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்<br>நல்லவாம் செல்வம் செயற்கு.<br>இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று<br>சூழினும் தான்முந்து உறும்.<br>விடை :<br>இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று<br>சூழினும் தான்முந்து உறும். |

4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக.

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

**விடை : சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

5. இலக்கணக்குறிப்புத் தருக.
அன்பும் அறமும், பண்பும் பயனும், வையகமும் வானகமும், நகையும் உவகையும் – எண்ணும்மைகள்
நன்கலம் – பண்புத்தொகை
மறத்தல், பிறத்தல், வெஃகுதல் – தொழிற்பெயர்கள்
உலகு – ஆகுபெயர்.

6. பொருள் கூறுக.

| | | | |
|---|---|---|---|
| **வெகுளி** | – சினம் | **புணை** | – தெப்பம் |
| **ஏமம்** | – பாதுகாப்பு | **திரு** | – செல்வம் |
| **வையகம்** | – மண்ணுலகம் | **வானகம்** | – விண்ணுலகம் |
| **ஞாலம்** | – உலகம் | **துணை** | – அளவு |
| **வெஃகி** | – விரும்பி | **அஃகாமை** | – குறையாமை |
| **நகை** | – முகமலர்ச்சி | **உவகை** | – மனமகிழ்ச்சி |
| **கொள்ளி** | – நெருப்பு | **தெள்ளியர்** | – தெளிந்த அறிவுடையார் |

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) திணைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

**விடை : அ) செய்யாமல் செய்த உதவி**

8. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக.
(சினத்தைவிட) வேறு பகையும் உண்டோ?

9. செல்லிடத்து – புணர்ச்சிவிதி கூறுக.
செல்லிடத்து – செல் + இடத்து
“தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்” என்னும் விதிப்படி – (செல்ல் + இடத்து)
“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” என்னும் விதிப்படி – ‘செல்லிடத்து’ எனப் புணர்ந்தது.

10. பொருத்துக. **(PTA - 3,5)**
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1. சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2. ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் – 3. தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4. நன்மை கடலின் பெரிது
அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

**விடை : ஆ) 3, 4, 1, 2**

## குறுவினா

**1. ‘முயல்வாருள் எல்லாம் தலை’ என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**
★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரையே, ‘முயல்வாருள் எல்லாம் தலை’ என, வள்ளுவர் சுட்டுகிறார்.

**2. ஞாலத்தின் பெரியது எது?**
★ உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், ஞாலத்தைவிட (உலகத்தை) மிகப் பெரியதாகும்.

**3. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை? (Mar. - 23)**
★ மறக்கக் கூடாதது, ஒருவர் செய்த நன்மையை; மறக்கக் கூடியது, ஒருவர் செய்த தீமையை.

**4. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பது யாது?**
★ செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழி, பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தலாகும்.

**5. சினத்தை ஏன் காக்க வேண்டும்? (May - 22)**
★ ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொள்ளச் சினத்தைக் காக்கவேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

6. **இல்வாழ்வின் பயன் எது?** (PTA - 3)
   - அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே, பண்பும் பயனுமாகும். அதாவது, இல்வாழ்வின் பயன் அறம் செய்தலாகும்.

7. **வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார் எவர்?**
   - இல்லறத்திற்கு உரிய அறநெறிப்படி உலகில் வாழ்பவர், வானுலகத்தில் உறையும் தெய்வத்திற்கு இணையாக வைக்கப்படுவார்.

8. **வையகமும் வானகமும் எதற்கு ஈடாகாது?**
   - ஒருவர்க்குத் தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும், தனக்கு ஒருவர் செய்த உதவிக்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.

9. **கடலின் பெரிது எது?**
   - பயன்கருதாது ஒருவர் செய்த உதவியை ஆராய்ந்தால், அதனால் விளைந்த நற்பயன், கடலைவிடவும் பெரிதாகும்.

10. **செய்த நன்றியின் பயனை அறிந்தவர் எவ்வாறு போற்றுவர்?**
    - ஒருவர் செய்த உதவி, தினைஅளவினதாக இருந்தபோதிலும், அதன் பயனை அறிந்து தெளிந்தவர், பனை அளவினதாகக் கருதிப் போற்றுவர்.

11. **உய்வு, எவருக்கு உண்டு? எவருக்கு இல்லை?**
    - எந்த நல்லறத்தை அழித்தவருக்கும் அதிலிருந்து தப்பிப்பிழைக்கும் உய்வு உண்டு; ஆனால், செய்த நன்றியைக் கொன்றவருக்கு உய்வு இல்லையாம்.

12. **நடுவுநிலைமையைக் கைவிட நாணுபவர் எதனைச் செய்யார்?**
    - பெரும்பயன் கிடைப்பதாக இருந்தாலும், நடுவுநிலைமையைக் கைவிட நாணுபவர், பிறருக்கு உரிய பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

13. **வெஃகுதல் செய்யார் எவர்?**
    - வறுமை காரணத்தைக் காட்டியும் ஐம்புலன்களை வென்ற தெளிவான அறிவுடையோர் பிறருக்கு உரிய பொருளை வெஃகுதலைச் (விரும்புதலை) செய்யார்.

14. **விலைப்பொருட்டால் ஊன் தருவார் எப்போது இரார்?**
    - தின்னும் பொருட்டு உயிர்களைக் கொல்பவர் உலகில் இல்லையெனில், விலையின் (வருவாயின்) பொருட்டு ஊன் விற்பவர் எவரும் இருக்கமாட்டார்.

15. **சினங்காப்பான் எவன்?**
    - தன் சினம் செல்லுபடியாகும் மெலியவனிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவனே, சினம் காப்பானாவான்.

16. **யார்மாட்டும் வெகுளியை ஏன் மறத்தல் வேண்டும்?**
    - வெகுளி என்னும் சினத்தினாலேயே தீமைகள் விளைவதனால் எவரிடத்திலும் வெகுளியை மறத்தல் வேண்டும்.

17. **சினத்தைவிடவும் பகை வேறு இல்லை – ஏன்?**
    - சினம் முகமலர்ச்சியையும், அகமகிழ்ச்சியையும் கொல்லும்.
    - ஆதலால், சினத்தைவிடப் பகை வேறு இல்லை.

18. **சினம் எதனைச் சுடும்?**
    - சினமாகிய நெருப்பு தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும்; பாதுகாப்பாக ஒருவனுக்கு அமையும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழித்துவிடும்.

19. **உண்மை அறிவே மிகும் – எப்போது?**
    - நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றிருந்தாலும், ஒருவருக்கு இயல்பாக உள்ளதாகிய உண்மை அறிவே மேலோங்கி நிற்கும்.

20. **உலகத்து இயற்கையின் வகைகள் எவை?**
    - உலகில் செல்வம் உடையவர், அறிவுடையவராக இருப்பதில்லை; அறிவுடையார், செல்வம் உடையவராக இருப்பதில்லை. இவையே உலகத்தின் இருவேறு இயற்கையாகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**21. திருக்குறள் – பெயர்க்காரணம் கூறுக.**

- ‘குறள்’ என்னும் இரண்டடி வெண்பாக்களால் ஆகித் ‘திரு’ என்னும் சிறப்பு அடைமொழி பெற்றதால், ‘திருக்குறள்’ எனப் பெயர் பெற்றது.

**22. பாரதியார் தமிழ்நாட்டை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**

- “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” எனப் பாரதியார், தமிழ்நாட்டைப் புகழ்ந்துள்ளார்.

**23. பாரதிதாசன் வள்ளுவரை எவ்வாறு பாராட்டியுள்ளார்?**

- “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” எனப் பாரதிதாசன், வள்ளுவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

**24. திருவள்ளுவரைப் போற்றும்வகையில் அரசு செய்தன யாவை?**

- திருவள்ளுவர் நினைவைப் போற்றும்வகையில், தமிழ்நாடு அரசு, கன்னியாகுமரியில் 133அடி உயரச் சிலை அமைத்துள்ளது; வேலூரில், ‘திருவள்ளுவர் பல்கலைக்கழக’த்தை நிறுவியுள்ளது.

**25. திருக்குறள் எத்தனை இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?**

- திருக்குறள் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை : பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல், அரசியல், அமைச்சியல், ஒழிபியல், களவியல், கற்பியல்.

## சிறுவினாக்கள்

**1. “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.** (PTA - 6, Sep.-20, May - 22)

**அணிச்சுட்டல்** : இக்குறளில் **நிரல்நிறை அணி** அமைந்துள்ளது.

**அணி இலக்கணம்** : செய்யுளில் முன்னர்க் கூறியவற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர்க் கூறும்போது, அவற்றை நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்ளுமாறு வரிசைபடக் கூறுவது நிரல்நிறை அணியாகும்.

**விளக்கம்** : இக்குறளில், ‘இல்வாழ்க்கைக்கு அன்பும் அறனும் இன்றியமையாதன’ எனக் கூறியவர், அதற்குரிய பண்பையும் பயனையும் அடுத்த அடியில் முறைப்பட வைத்து, ‘**இல்வாழ்க்கைக்கு அன்பு பண்பு**’ என்றும், ‘அறம் பயன்’ என்றும் பொருள் கொள்ளுமாறு வரிசைபடக் கூறியமையால் ‘**நிரல்நிறை அணி**’யாகும்.

**2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.**

- ★ அறத்தோடு பொருந்திய இல்வாழ்க்கை வாழ்பவர் என்பவர், பல்வேறு முயற்சிகளைச் செய்து, உயர்வு அடைபவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஆவார்.
- ★ உலகத்தில் வாழும்போது, வாழவேண்டிய அறநெறியோடு பொருந்தி வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வத்திற்குச் சமமாக மதிக்கப்படுவர்” என்று, வள்ளுவர் கூறியுள்ளார். அதனால், இல்வாழ்க்கை சிறப்படைய, அறநெறியோடு வாழவேண்டியதன் முக்கியத்துவம் புலப்படும்.

**3. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக.** (PTA - 5)

- ★ வானகம், ஞாலம், கடல் ஆகியவற்றை எல்லாம்விட, நன்றி உயர்ந்தது என, வள்ளுவர் கூறுகிறார்.
- ★ செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், உரிய காலத்தில் செய்யப்பட்டதாயின், அது உலகத்தைவிட மிகப்பெரியதாகும்.
- ★ பயனை எதிர்பார்க்காமல், ஒருவர் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும். ஆதலால், நன்றி என்பது, மிகப் பெரியது என்பது புலப்படும்.

**4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.** (PTA - 1, 4, Sep.-20)

- ★ சினத்தாலேயே தீமையான விளைவுகள் ஏற்படுவதனால், எவரிடத்திலும் சினம் கொள்வதை மறந்துவிட வேண்டும். சினத்தைவிடவும் அழிக்கின்ற பகை என்பது வேறு இல்லை.
- ★ தன்னைத்தானே ஒருவன் பாதுகாத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் காக்காவிட்டால், கொண்ட சினமே அவனை அழித்துவிடும்.
- ★ சினம் தன்னைச் சேர்ந்தவனை அழிப்பதோடு, அவனுக்குப் பாதுகாப்பாக விளங்கும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழிக்கும் என, வள்ளுவர் கூறியுள்ளார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

5. **கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**
சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் (PTA - 5)
ஏமப் புணையைச் சுடும்.

★ செய்யுளில் கூற எடுத்துக்கொண்ட பொருள்களில் ஒன்றைமட்டும் உருவகம் செய்து, பிறிதொன்றை உருவகம் செய்யாமல் கூறுவது, ஏகதேச உருவக அணியாகும்.
★ இக்குறளில் சுற்றத்தவரைப் புணையாக (தெப்பமாக) உருவகம் செய்தவர், சினத்தை நெருப்பாக உருவகம் செய்யாமையால், ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

## கூடுதல் வினாக்கள்

6. **நிரல் நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.** (Sep.-20)

**அணி இலக்கணம் :** ஒரு செய்யுளின் முதலில் சொன்னவற்றோடு தொடர்புடைய பொருளை பின்னர்க் கூறும்போது, அவற்றை வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே பொருத்திப் பொருள் கொள்ளும் முறை நிரல்நிறை அணியாகும்.

**சான்று :** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**பொருள் :** இல்லற வாழ்வை நடத்துவோர் அன்பையும் அறத்தையும் கடைப்பிடித்து ஒழுகினால், அதுவே வாழ்க்கைக்கு உரிய பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் ‘**அன்பு, அறன்**’ என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் கூறிய திருவள்ளுவர், அவற்றோடு தொடர்புடைய ‘**பண்பு, பயன்**’ என்பனவற்றை அடுத்த வரிசையில் அதே முறையில் இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே, இக்குறள் நிரல் நிறை அணிக்குப் பொருத்தமானதாயிற்று.

7. **ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.** (Mar.-23)

**அணி :** ஏகதேச உருவக அணி

**அணிவிளக்கம் :** செய்யுளில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஒரு பொருளை மட்டும் உருவகப்படுத்திவிட்டு, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று :** **“சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.**

**சான்று விளக்கம் :** சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டு அழிக்கும்.

**அணிப்பொருத்தம் :** சினத்தை நெருப்பாகவும், இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யவில்லை. இப்படி, குறளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டதால், இக்குறள் **ஏகதேச உருவக அணி**க்குப் பொருத்தமாயிற்று.

8. **‘வெஃகாமை’யின் பொருள் கூறி, அதுகுறித்த வள்ளுவர் கூறிய கருத்துகளையும் எழுதுக.**

➤ ‘வெஃகாமை’ என்பதற்குத் தனக்கு உரியன அல்லாதவற்றை விரும்பாமை என்பது பொருளாகும்.
➤ பண்புடையோர், பெரும்பயன் கிடைப்பதாயினும், பிறர் பொருளைக் கவரும் பழிச்செயலைச் செய்யமாட்டார். தெளிந்த அறிவுடையார், தாம் வறியவர் என்னும் காரணத்தைக் காட்டியும் பிறர்க்கு உரிமையான பொருளை விரும்பமாட்டார்.
➤ பிறர்க்கு உரிய பொருளை விரும்பாமல் இருப்பதே, தன் செல்வம் குறையாதிருக்கச் சிறந்த வழியாகும் என்பன, ‘வெஃகாமை’ குறித்து வள்ளுவர் கூறிய கருத்துகளாகும்.

9. **‘ஊழ்’ என்பதன் பொருளைக் கூறி, அது குறித்த வள்ளுவர் கருத்துகளை எழுதுக.**

➤ ‘ஊழ்’ என்பதற்குச் “செய்த நல்வினை தீவினைகளின் பயன்கள், செய்தவனையே சென்றடையும்” என்பது பொருளாகும். ஒருவர் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றிருந்தாலும், ஊழ்வினைப் பயனால், அவருக்கு இயல்பாக உள்ள அறிவே மேலோங்கி நிற்கும்.
➤ உலக இயல்பு, இருவேறு வகையாய் உள்ளது. அது, ‘செல்வமுடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை; அறிவுடையவர் செல்வமுடையவராக இருப்பதில்லை’ என்பதாகும். இவையே, ‘ஊழ்’குறித்து, வள்ளுவர் கூறிய செய்திகளாகும்.

**10. திருக்குறள் குறித்து எழுதுக.**

- உலகின் தொன்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்ற பெருமையுடையது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப் பாக்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் பெற்றுள்ளது.
- 'அறத்துப்பா'லானது பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களாகவும், 'பொருட்பாலா'னது அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களாகவும், 'இன்பத்துப்பா'லானது களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களாகவும் பகுக்கப்பெற்றுள்ளன.

## நெடுவினாக்கள்

**1. 'செய்ந்நன்றியறிதலே அறம்' என்பதை வாயுறை வாழ்த்தின் துணைக்கொண்டு நிறுவுக.** (PTA - 2,6, Mar.-20)

- 'செய்ந்நன்றி' மறத்தலாகாது என்பதைச் சான்றோர் வலியுறுத்துவர். இங்கு வள்ளுவர் கூறும் வாயுறை வாழ்த்தின் கருத்துவழி, 'செய்ந்நன்றி அறிதலே அறம்' என்பது குறித்துக் காண்போம்.

**கடலும் மண்ணும் விண்ணும் ஈடு ஆகாது :**

- உதவி ஏதும் தான் செய்யாதிருந்தும், கைம்மாறு கருதாமல் தனக்கு ஒருவர் செய்த உதவிக்கு, **மண்ணுலகையும் விண்ணுலகையும்** கொடுத்தாலும் ஈடாகாது.
- உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்க, **உலகத்தின் அளவைவிடவும்** மிகப் பெரியதாகும்.
- இதைச் 'செய்வதனால் என்ன பயன் கிடைக்கும்?' என்று ஆராயாமல், நமக்கு ஒருவர் செய்த உதவியினை ஆராய்ந்து பார்த்தால், அதனால் விளையும் நன்மை, **கடலைவிடவும்** பெரிதாகும்.
- ஒருவர் செய்த உதவி தினையளவினதாக இருந்தபோதிலும், அதனால் விளையும் பயனைத் தெரிந்தவர்கள், அதனைப் **பனை அளவினதாகக்** கருதிப் போற்றுவர்.

**மறந்து விடு, மறக்காதே :**

- நமக்கு ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று. ஆனால், அவர் செய்த **தீமையை** அப்பொழுதே **மறந்துவிடுவது** நல்லதாகும்.

**செய்ந்நன்றி அழித்தலின் கொடுமை :**

- எந்த அறத்தை அழித்தவருக்கும் அதன் தீய விளைவிலிருந்து தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. ஆனால், **செய்த நன்றியை** மறந்தவனுக்கு, அதன் விளைவிலிருந்து **தப்பிப் பிழைக்கும்** வாய்ப்பே கிடையாது. இவையே, திருக்குறள், 'செய்ந்நன்றி அறிதலே அறம்' என்பது குறித்துக் கூறும் செய்திகளாகும்.

**2. 'சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விரித்துரைக்க. (அல்லது) வெகுளாமை குறித்து திருவள்ளுவர் உரைப்பன யாவை?** (PTA - 1, Sep.-22)

**வெகுளாமைக்கு இடம் :**

- 'வெகுளி' என்னும் சினம் தீமைகள் அனைத்திற்கும் அடிப்படையாகும். சினம் கொள்ளல் கூடாது என முப்பால் வலியுறுத்துகிறது.
- தன் சினம் **செல்லத்தக்க** மெலியவரிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவரே, உண்மையில் சினத்தைக் காப்பவராவார். தன் கோபம் **செல்லத்தகாத** வலியவரிடத்தில் அதனைக் காத்தால்தான் என்ன, காக்காவிட்டால்தான் என்ன?
- சினத்தினால் (வெகுளியால்) தீய விளைவுகள் ஏற்படும் என்பதை அறிந்து, எவரிடத்திலும் சினம் கொள்ளுதலைத் தவிர்க்க வேண்டும். சினம் என்பது, **முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும்** கொன்று அழிக்கிறது. இதனால், சினத்தைவிட, அழிவுக்கு வேறு பகை தேவை இல்லை.

**சினம் கொண்டவருக்கு ஏற்படும் தீங்கு :**

- ஒருவன், தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், **சினம் வெளிப்படாமல்** அடக்கிக் காத்தல் வேண்டும். அப்படிக் காத்துக்கொள்ளவில்லை என்றால், அச்சினமே அவனை அழித்துவிடும்.
- சினம் (வெகுளி) என்பது, தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பைப் போன்றது. அந்தச் சினம் என்னும் நெருப்பானது, பாதுகாப்பாக அமையும் **சுற்றத்தவராகிய தெப்பத்தையும்** எரித்துவிடும்.
- முப்பால் கூறும் இக்கருத்துகளால் **'சினத்தைக் காத்தலே வாழ்வை மேன்மைப்படுத்த வழி'** என்பதனைத் தெளியலாம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## புணர்ச்சி விதி

**1. நன்றன்று – நன்று + அன்று / நன்றல்லது – நன்று + அல்லது**

"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" என்னும் விதிப்படி – (நன்ற் + அன்று / நன்ற் + அல்லது)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – நன்றன்று / நன்றல்லது எனப் புணர்ந்தது.

**2. உய்வுண்டாம் – உய்வு + உண்டாம் / உய்வில்லை – உய்வு + இல்லை**

"உயிர்வரின்..... முற்றும் அற்று" என்னும் விதிப்படி – (உய்வ் + உண்டாம் / உய்வ் + இல்லை)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – உய்வுண்டாம் / உய்வில்லை எனப் புணர்ந்தது.

**3. யாதெனின் – யாது + எனின்**

"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் என்னும் விதிப்படி – (யாத் + எனின்)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – யாதெனின் எனப் புணர்ந்தது.

## கூடுதல் பலவுள் தெரிக

1. ஞாலத்தின் மாணப் பெரிது ______. (PTA - 3)
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
இ) காலத்தினால் செய்த நன்றி ஈ) விலைப்பொருட்டால் ஊன் தருதல்
**விடை : இ) காலத்தினால் செய்த நன்றி**

2. திருக்குறளில் அமைந்த இயல்களின் மொத்த எண்ணிக்கை ______. (May-22)
அ) ஒன்பது ஆ) ஏழு இ) மூன்று ஈ) ஐந்து
**விடை : அ) ஒன்பது**

3. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு : (Mar.-23)
அ) 1816 ஆ) 1812 இ) 1815 ஈ) 1824
**விடை : ஆ) 1812**

4. முயல்வாருள் எல்லாம் தலையாயவன் ______.
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் ஆ) செய்யாமல் உதவி செய்பவன்
இ) இலமென்று வெஃகுதல் செய்யாதவன் ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்
**விடை : ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்**

5. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுபவர் ______.
அ) இலமென்று வெஃகுதல் செய்யாதவர் ஆ) பயன் தூக்காது உதவி செய்பவர்
இ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் ஈ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவர்
**விடை : இ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்**

6. பயன்தூக்கார் செய்த உதவி ______.
அ) வையகமும் வானகமும் ஆற்ற லரிது ஆ) ஞாலத்தின் மாணப் பெரிது
இ) பனைத்துணையாக் கொள்வர் ஈ) நன்மை கடலின் பெரிது
**விடை : ஈ) நன்மை கடலின் பெரிது**

7. பயன்தெரிவார் பனைத்துணையாக் கொள்வது ______.
அ) செய்யாமல் செய்த உதவியை ஆ) காலத்தினால் செய்த நன்றியை
இ) பயன்தூக்கார் செய்த உதவியை ஈ) தினைத்துணை நன்றியை
**விடை : ஈ) தினைத்துணை நன்றியை**

8. எதை அன்றே மறப்பது நன்று?
அ) தினைத்துணை நன்றியை ஆ) பனைத்துணை நன்றியை
இ) நன்றல்லதை ஈ) காலத்தினால் செய்த நன்றியை
**விடை : இ) நன்றல்லதை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

9. யாருக்கு உய்வு இல்லை?
அ) எந்நன்றி கொன்றார்க்கும் ஆ) நடுவன்மை நாணுபவர்க்கு
இ) இலமென்று வெஃகுதல் செய்வாற்கு ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு
**விடை : ஈ) செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

10. நடுவன்மை நாணுபவர், ______ செய்யார்.
அ) புன்மை ஆ) வெஃகுதல் இ) பழிப்படுவ ஈ) நன்றல
**விடை : இ) பழிப்படுவ**

11. புலம்வென்ற புன்மையில் காட்சியவர், ______ செய்யார்.
அ) சினம் காத்தல் ஆ) பழிப்படுவ
இ) இலம் என்று வெஃகுதல் ஈ) புலால் உண்ணல்
**விடை : இ) இலம் என்று வெஃகுதல்**

12. வெகுளியை யார்மாட்டும் ஏன் மறத்தல் வேண்டும்?
அ) நகை கொல்லுதலால் ஆ) உவகை கொல்லுதலால்
இ) தீய பிறத்தலால் ஈ) தன்னையே கொல்லுதலால்
**விடை : இ) தீய பிறத்தலால்**

13. தன்னைத்தான் காக்கின், ______ வேண்டும்.
அ) பகை காக்க ஆ) செல்லிடத்துக் காக்க
இ) இனம் காக்க ஈ) சினம் காக்க
**விடை : ஈ) சினம் காக்க**

14. உயிர்களை எதன் பொருட்டுக் கொல்கின்றனர்?
அ) கொல்வதன் பொருட்டு ஆ) விலைப் பொருட்டு
இ) உலகின் பொருட்டு ஈ) தின்னும் பொருட்டு
**விடை : ஈ) தின்னும் பொருட்டு**

15. சினம் கொல்லுவன ______.
அ) மறத்தலையும் வெகுளியையும் ஆ) தன்னையும் பிறரையும்
இ) நகையையும் உவகையையும் ஈ) பகையையும் நட்பையும்
**விடை : இ) நகையையும் உவகையையும்**

16. சினத்தைக் காக்காவிட்டால் அது ______.
அ) நகைப்பைக் கொல்லும் ஆ) உவகையைக் கொல்லும்
இ) காவாதவனைக் கொல்லும் ஈ) சேர்ந்தாரைக் கொல்லும்
**விடை : இ) காவாதவனைக் கொல்லும்**

17. ‘ஏமப் புணை’ எனக் கூறப்பட்டது ______.
அ) சினம் ஆ) மனம் இ) இனம் ஈ) தன்னை
**விடை : இ) இனம்**

18. நுண்ணிய நூல்பல கற்பினும் மிகுவது ______.
அ) புல்லறிவு ஆ) இயற்கை அறிவு இ) தெள்ளிய அறிவு ஈ) உண்மை அறிவு
**விடை : ஈ) உண்மை அறிவு**

19. திருவும், தெள்ளியர் ஆவதும் வேறுவேறு ஆதல் ______.
அ) நுண்ணிய நூல்பல கற்றலால் ஆ) உண்மை அறிவு மிகுதலால்
இ) சினத்தைக் காத்தலால் ஈ) உலகத்து இயற்கை
**விடை : ஈ) உலகத்து இயற்கை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 4

# 4. புறநானூறு

## குறுவினா

1. **"எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" – யார்க்கு?** (PTA - 2, Mar.-23)
   ★ எத்திசைக்குச் சென்றாலும், கலைத்தொழில் வல்லார்க்கு, அத்திசையில் (சோறு) உணவு (தட்டாது) தவறாமல் கிட்டும்.

## கூடுதல் வினாக்கள்

2. **"எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்னும் புறநானூற்று அடி நினைவூட்டும் பழமொழி யாது?** (PTA - 2)
   ➤ 'கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்னும் பழமொழியை, "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்னும் புறநானூற்று அடி நினைவூட்டுகிறது.
3. **தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடைய உள்ளத்தார் யார்? முடிப்பது யாது?**
   ➤ தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடைய உள்ளத்தார், பரிசில் பெற்று வாழும் புலவர்களாவர். வள்ளல்களை அணுகி, அவர்தம் செவிகளில் அறிவார்ந்த சொற்களாகிய விதைகளைத் துணிவுடன் விதைத்துத் தாம் எண்ணியதை முடிப்பர்.
4. **"பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!" – யார், யாரிடம் கூறியது?**
   ➤ **அதியமான் நெடுமான் அஞ்சியின்** கோட்டை வாயிற்காவலனை நோக்கி, ஔவையார் கூறியது.
5. **நெடுமான்அஞ்சி எதை அறிந்திலன் என்கிறார் ஔவையார்?**
   ➤ நெடுமான்அஞ்சி, பரிசில் தரக் காலம் தாழ்த்தியதனால், 'என்னுடைய தகுதியை, தரத்தை அறிய வில்லையோ?' என, வாயிற்காவலனிடம் ஔவையார் கூறினார்.
6. **ஔவையார் தாம் புறப்பட்டதை எவ்வாறு உணர்த்தினார்?**
   ➤ வாயிற்காவலனிடம், "**காவினெம் கலனே! சுருக்கினெம் கலப்பை**" என்று கூறித் தாம் புறப்பட்டதை ஔவையார் உணர்த்தினார். அதாவது, 'எம் யாழினை எடுத்துக்கொண்டோம்! கருவிப்பையையும் சுருக்கிக் கட்டிக் கொண்டோம்' என்று கூறினார்.

## சிறுவினா

1. **"வாயிலோயே" எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.** (PTA - 3,4, Mar.- 20)
   ★ புறப்பொருளில் ஒருவனுடைய **புகழ், வலிமை, கொடை, அருள்** போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது, '**பாடாண் திணை**' என்னும் திணையுள் அடங்கும்.
   ★ "வாயிலோயே" எனத் தொடங்கும் ஔவையாரின் பாடலுள், அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளலின் புகழ், கொடை முதலான பண்புகள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.
   ★ எனவே, இப்பாடல், புறத்திணைகளுள் '**பாடாண் திணை**'**க்கு** உரியதாகும்.

## கூடுதல் வினாக்கள்

2. **பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.** (Sep.-21, May - 20, 22,23)

**திணை** : பாடாண் திணை = பாடு + ஆண் + திணை.

**திணை விளக்கம்** : பாடத்தக்க சிறப்புடைய ஒருவருடைய **புகழ், வலிமை, கொடை, அருள்** முதலான நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது, **பாடாண்திணை** எனப் புறப்பொருளில் கூறப்பெற்றுள்ளது.

**சான்று** : அதியமான் நெடுமான்அஞ்சி, பரிசில் தராமல் காலம் நீட்டித்தபோது ஔவையார், வாயில் காவலனை விளித்துப் பாடியதாக அமைந்த **புறநானூற்றுப் பாடல்**, '**பாடாண் திணை**'க்குச் சான்றாகும்.

**திணைப் பொருத்தம்** : "பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான்அஞ்சி தன்னுடைய தகுதி அறியானோ?" எனக் குறிப்பிட்டுள்ளமையே, அதியமான் பாடத்தக்க சிறப்பமைந்தவன் என்பதனைப் புலப்படுத்தும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**3. 'பரிசிலர்க்கு அடையா வாயிலோயே' – இடம்சுட்டி விளக்குக.**

**இடம் :** அதியமானின் வாயிற்காவலனிடம், தம் உள்ளக்கருத்தை வெளிப்படுத்த, ஔவையார் விளித்துப் பாடியதாக அமைந்த புறநானூற்றுப் பாடலில், இவ்வடி இடம்பெற்றுள்ளது.

**விளக்கம் :** ஔவையாருக்கு அதியமான் உடனே பரிசிலை வழங்காது காலம் நீட்டித்தான். அதனால் சற்றே வெகுண்ட ஔவையார், வாயிற்காவலனை விளித்துப் பரிசிலர் வாழ்வின் செம்மையை விளக்கியதோடு, உலகில் பரிசில் வழங்கி எம் போன்றோரை வாழச்செய்யும் வள்ளல்கள் பலர் உள்ளனர் என்று, அறிவுறுத்தியதாக இடம் பெற்றுள்ளது.

**4. "வறுந்தலை உலகமும் அன்றே" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம் :** வாயிற்காவலனிடம் ஔவையார், தம் தரமறிந்து அதியமான்அஞ்சி பரிசில் தராததால் நீங்கிச் செல்வதைக் கூறியபோது உரைத்ததாகிய இந்த அடி, புறநானூற்றுப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

**விளக்கம் :** பரிசிலர் வாழ்வின் சிறப்பை எடுத்துரைத்த ஔவையார், "நெடுமான் அஞ்சி தன் தகுதி அறியானோ? அவனை நம்பியே இவ்வுலகில் வறியோர் வாழ்கின்றனர் என நினைத்தானோ? இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்து வெற்றிடம் ஆகிவிடவில்லை! எம்போன்ற பரிசிலரை ஆதரித்துப் போற்றப் பலர் உள்ளனர். எனவே, எம் யாழினை எடுத்துக் கொண்டோம்! கருவிகள் உள்ள பையையும் சுருட்டிக் கொண்டோம்" என்று, வாயிற்காவலனிடம் கூறினார்.

## பலவுள் தெரிக

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" இத்தொடரில், 'கலன்' உணர்த்தும் பொருள் ______. **(Mar.-20)**

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

**விடை : இ) இசைக்கருவி**

## கூடுதல் வினாக்கள்

2. 'வயங்குமொழி' – இலக்கணக்குறிப்பு ______. **(PTA - 4)**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : ஆ) வினைத்தொகை**

3. "**வள்ளியோர்** செவிமுதல்" இத்தொடரில், 'வள்ளியோர்' என்பது ______.

அ) வலிமையுடையோர் ஆ) வாயிற்காவலர்
இ) பரிசிலர் ஈ) வள்ளல்கள்

**விடை : ஈ) வள்ளல்கள்**

4. பரிசிலர் வள்ளியோர் செவி முதல் விதைத்தது ______.

அ) உள்ளியது ஆ) பரிசில் வாழ்க்கை இ) வரிசை ஈ) வயங்குமொழி

**விடை : ஈ) வயங்குமொழி**

5. இவ்வுலகில் இன்னும் மாய்ந்து விடாதோர் ______.

அ) வள்ளியோர் ஆ) வாயிலோன்
இ) பரிசிலர் ஈ) அறிவும் புகழும் உடையோர்

**விடை : ஈ) அறிவும் புகழும் உடையோர்**

6. "சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் 'கலப்பை' என்பது எதனைக் குறித்தது.

அ) பரிசில் வாழ்க்கையை ஆ) உழவுக் கருவியை
இ) இசைக்கருவியை ஈ) கருவிகளை வைக்கும் பையை

**விடை : ஈ) கருவிகளை வைக்கும் பையை**

7. 'இசைநிறை அளபெடை' என்பது, ______ அளபெடை எனவும் வழங்கப்பெறும்.

அ) சொல்லிசை ஆ) ஒற்று இ) இன்னிசை ஈ) செய்யுளிசை

**விடை : ஈ) செய்யுளிசை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

8. 'மழுவுடைக் காட்டகத்து' என்னும் தொடரில் 'மழு' என்பது ______.
அ) வேல் ஆ) ஈட்டி இ) வாள் ஈ) கோடரி
**விடை : ஈ) கோடரி**

9. 'காட்டகத்து' என்னும் சொல், ______ எனப் பிரியும்.
அ) கா + டகத்து ஆ) காட் + டகத்து இ) காட்ட் + அகத்து ஈ) காடு + அகத்து
**விடை : ஈ) காடு + அகத்து**

10. 'புறநானூறு' என்பது, ______ எனப் பிரியும்.
அ) புற + நானூறு ஆ) புறநா + நூறு
இ) புறம் + நானூறு ஈ) புறம் + நான்கு + நூறு
**விடை : ஈ) புறம் + நான்கு + நூறு**

## இலக்கணக்குறிப்பு

**வயங்குமொழி, கொல்தச்சர்** – வினைத்தொகைகள்.
**அடையா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
அறி**வும்** புக**ழும்** – எண்ணும்மை.
**சிறாஅர்** – இசைநிறை (செய்யுளிசை) அளபெடை.
**வாயிலோயே** – அண்மைவிளி.
**உடையோர்** – வினையாலணையும் பெயர்.

## உறுப்பிலக்கணம்

1. **அறியலன் – அறி + ய் + அல் + அன்**
**அறி** – பகுதி; **ய்** – உடம்படுமெய் சந்தி; **அல்** – எதிர்மறை இடைநிலை;
**அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

2. **காவினெம் – காவு + இன் + எம்**
**காவு** – பகுதி; **இன்** – இறந்தகால இடைநிலை; **எம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **எத்திசை – எ + திசை**
"எகர வினா முச்சுட்டின் முன்னர் பிறவரின் அவையும் தோன்றுதல் நெறியே" என்னும் விதிப்படி (எகரவினா இடைச்சொல்லுக்கு முன்னே யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், வந்தமெய் மிகும்)
எத் + திசை – எத்திசை எனப் புணர்ந்தது.

2. **அத்திசை – அ + திசை**
"எகரவினா முச்சுட்டின் முன்னர் பிறவரின் அவையும் தோன்றுதல் நெறியே" என்னும் விதிப்படி (மூன்று சுட்டு இடைச் சொற்களுக்கும் முன்னே யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், வந்தமெய் மிகும்)
அத் + திசை – அத்திசை எனப் புணர்ந்தது.

3. **இப்பரிசில் – இ + பரிசில்**
"எகரவினா முச்சுட்டின் முன்னர் பிறவரின் அவையும் தோன்றுதல் நெறியே" என்னும் விதிப்படி
இப் + பரிசில் – இப்பரிசில் எனப் புணர்ந்தது.

4. **காட்டகத்து – காடு + அகத்து**
"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் ட ற ஒற்று இரட்டும்" என்னும் விதிப்படி – காட்டு + அகத்து
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" என்னும் விதிப்படி – காட்ட் + அகத்து
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி – காட்டகத்து எனப்புணர்ந்தது.

www.Padasalai.Net

# இயல் – 5

## கவிதைப்பேழை

# 2. தெய்வமணி மாலை

(இராமலிங்க அடிகள்)

### குறுவினா

1. "தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்தலமோங்கும் கந்தவேளே" – தொடருக்குப் பதவுரை தருக. (Sep. - 21)

தருமமிகு சென்னையில் – அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின்
கந்தகோட்டத்துள் வளர்தலமோங்கும் – கந்த கோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளி இருக்கும்
கந்தவேளே – கந்தன் என்னும் வேளே! (தலைவனே)

### கூடுதல் வினாக்கள்

2. இராமலிங்கர் எத்தகையவர் உறவு வேண்டும் என்கிறார்?
   - இராமலிங்கர், ஒரு நெறிப்படுத்தப்பட்ட மனத்துடன் கந்தனின் மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு வேண்டும் என்கிறார்.
3. இராமலிங்கர் எவர் உறவு கலவாமை வேண்டும் என்கிறார்?
   - இராமலிங்கர், உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புறத்தில் ஒன்றைப் பேசும் வஞ்சகர்களின் உறவு கலவாமை வேண்டும் என்கிறார்.
4. பிடித்தும் பிடியாதும் இருக்க வேண்டுவனவாக இராமலிங்க அடிகள் கூறுவன யாவை?
   - சிறந்த வாழ்வியல் நெறியைத் தாம் பின்பற்றி ஒழுக அருள வேண்டும் எனவும், மதமான பேய் தம்மைப் பிடியாது இருக்க வேண்டும் எனவும் இராமலிங்கஅடிகள் கூறுகிறார்.
5. எதனை மனம் மறக்கவும் எதனை மறவாதிருக்கவும் வேண்டுமென இராமலிங்கர் கந்தவேளிடம் வேண்டுகிறார்?
   - துறவுக்கு எதிரான பெண்ணாசையை மனம் மறக்கவும், கந்தவேளை மறவாது இருக்கவும் அருள வேண்டும் என, இராமலிங்கர் கந்தவேளிடம் வேண்டுகிறார்.
6. "சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே"– தொடருக்குப் பொருள் தருக.
   - "குளிர்ந்த முகத்தோற்றத்தை உடைய தூய மாணிக்க மணியே! அந்த மணிகளுள் அருள் நிறைந்த சைவ மணியே" என்பது பொருள்.
7. அடிகளார் எதனைப் பேசவும் எதனைப் பேசாதிருக்கவும் வேண்டுகிறார்?
   - கந்த கோட்டத்து அறுமுகனின் பெருமை சான்ற புகழைப் பேசவும் பொய்யைப் பேசாதிருக்கவும் அருள்புரிய அடிகளார் வேண்டுகிறார்.
8. அடிகளார் எது பிடியாதிருக்க வேண்டுமென்கிறார்?
   - மதமான பேய் தன்னை அணுகிப் பிடியாதிருக்க வேண்டுமென வேண்டுகிறார்.
9. அடிகளார் எவ்வகை வாழ்வை வேண்டுகிறார்?
   - நல்ல மதிபெற்று கந்தவேளின் கருணை நிதி பெற்று நோயற்ற வாழ்வு வாழ அருளுமாறு அடிகளார் வேண்டுகிறார்.
10. இராமலிங்க அடிகள் பேசாதிருக்கவும் பிடியாதிருக்கவும் வேண்டுவனவாகக் கந்தவேளிடம் என்னென்ன வேண்டுகிறார்?
    - கந்தவேளின் பெருமை சான்ற புகழைப் பேச விரும்பும் இராமலிங்க அடிகள், '**பொய்ம்மை பேசாதிருக்க அருள வேண்டும்**' என்கிறார். சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்ற விரும்பும் தமக்கு, 'மதமான பேய் பிடிக்காதிருக்க' அருளுமாறு வேண்டுகிறார்.
11. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எவற்றை எல்லாம் நீக்க வேண்டுகிறார்?
    - "உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புறத்தில் ஒன்றைப் பேசும் வஞ்சக மனத்தார் உறவும், பொய்ம்மையும், மதமான பேயும், துறவுக்கு எதிரான பெண் ஆசையும் தம்மை அணுகிப் பற்றாது காக்க அருள் புரிய வேண்டும்" எனக் கந்தவேளிடம் இராமலிங்க அடிகளார் வேண்டுகிறார்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## சிறுவினா

1. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்? (Mar. - 23)**

**உத்தமர் உறவு :** "ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற **உத்தமர்தம் உறவு** தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.

**வஞ்சகர் உறவு :** தம் உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புறத்தில் வேறொன்றைப் பேசும் **வஞ்சகர்களின்** உறவு தனக்கு ஏற்படாமல் காக்குமாறு கந்தவேளிடம் இராமலிங்க அடிகள் வேண்டுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

2. **வள்ளலார் கந்த கோட்டத்து இறைவனிடம் வேண்டுவதைத் தெய்வமணி மாலை பாடல்வழி விளக்குக. (May - 22)**

- "ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புறத்தில் ஒன்றைப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாது காக்க வேண்டும். பெருமை சான்ற நினது புகழை நான் பேச வேண்டும்; பொய் பேசாதிருக்க வேண்டும்.
- சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்ற வேண்டும்; மதமான பேய் என்னைப் பிடிக்காதிருக்க அருள வேண்டும். உன்னை மறவாதிருக்க வேண்டும். மதியும் நின்கருணை நிதியும் பெற்று, நான் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்" எனக் கந்த கோட்டத்து இறைவனிடம் வள்ளலார் வேண்டுகிறார்.

3. **இராமலிங்க அடிகள் எவ்வெவற்றைப் பெற விரும்பிக் கந்தவேளை வேண்டுகிறார்?**

★ "ஒரு நெறிப்பட்ட மனத்துடன் உன் மலர்போன்ற பாதங்களை நினைக்கிற உத்தமர்தம் உறவையும், பெருமை சான்ற உனது புகழைப் பேசும் நாவையும், சிறந்த வாழ்வியல் நெறிகளையும், உன்னை மறவாத உள்ளத்தையும், சிறந்த மதியையும், உன் கருணையாகிய நிதியையும், நோயற்ற வாழ்வையும் அருள வேண்டும்" எனக் கந்தவேளிடம் இராமலிங்க அடிகளார், தாம் பெற விரும்பி வேண்டுகிறார்.

4. **இராமலிங்க அடிகளார் குறித்து நீவிர் அறிவன யாவை?**

- இராமலிங்க அடிகளார், சிதம்பரத்தை அடுத்த மருதூரில் பிறந்தவர். சிறு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். **ஆன்மநேய ஒருமைப்பாடு தழைக்கவும், உண்மைநெறி ஓங்கவும்** உழைத்தவர்.
- சமய ஒருமைப்பாட்டையும் ஒளிவழிபாட்டையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் முன்வைத்து சீர்திருத்தச் சிந்தனையை உருவாக்கி வடலூர் சென்று, '**ஆன்மிக மையத்தை**' ஏற்படுத்தியவர்.
- வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளலாரின் அருள்மொழிப் பாடல்கள், ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் வல்லமையுடையவை. இவர் பாடல்களின் தொகுப்பு, '**திருவருட்பா**' என வழங்கப்பெறுகிறது; அஃது, ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- பாடமாக இடம்பெற்ற பாடல், ஐந்தாம் திருமுறையின் '**தெய்வமணிமாலை**' பகுதியில் உள்ளது. மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்பன, இவருடைய உரைநடை நூல்கள்.

## பலவுள் தெரிக

1. 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு ______.

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

**விடை : இ) முரண் பண்பு**

## கூடுதல் வினாக்கள்

2. 'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதி இடம்பெறும் சொல், (Sep.-20)

அ) ஒருமையுடன் ஆ) உள்ளொன்று இ) மறவா ஈ) வளர்தலம்

**விடை : ஆ) உள்ளொன்று**

3. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல், (Mar.-20)
அ) திருவருட்பா ஆ) திருவாசகம் இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்
**விடை : அ) திருவருட்பா**

4. 'பேசாதிருக்க' வேண்டுவது ______.
அ) உறவு ஆ) புறம் இ) புகழ் ஈ) பொய்ம்மை
**விடை : ஈ) பொய்ம்மை**

5. கலவாமை வேண்டுவது ______.
அ) உத்தமர் உறவு ஆ) புறம் பேசுவார் உறவு
இ) புகழ் பேசுவார் உறவு ஈ) பொய்மை பேசுவார் உறவு
**விடை : ஆ) புறம் பேசுவார் உறவு**

6. வள்ளலார், 'வேண்டும்' என்று மட்டும் குறிப்பிடுவன ______.
அ) மதி, நோயற்ற வாழ்வு, பெண்ணாசை ஆ) மதி, கருணை, நிதி, மதமான பேய்
இ) மதி, கருணைநிதி, நோயற்ற வாழ்வு ஈ) மதி, கருணைநிதி, பொய்மை
**விடை : இ) மதி, கருணைநிதி, நோயற்ற வாழ்வு**

7. பொருத்துக.
அ) பேச வேண்டும் – 1. மதமான பேய்
ஆ) பிடித்து ஒழுக வேண்டும் – 2. பொய்ம்மை
இ) பேசாதிருக்க வேண்டும் – 3. பெண்ணாசை
ஈ) பிடியாதிருக்க வேண்டும் – 4. பெருமை பெறும் புகழ்
– 5. பெருநெறி
அ) 4, 2, 3, 1 ஆ) 4, 5, 2, 3 இ) 4, 5, 2, 1 ஈ) 4, 5, 1, 2
**விடை : இ) 4, 5, 2, 1**

8. இராமலிங்க அடிகளார் (வள்ளலார்), ஆன்மிக மையத்தை ஏற்படுத்திய இடம் ______.
அ) சிதம்பரம் ஆ) மருதூர் இ) வடலூர் ஈ) கந்தகோட்டம்
**விடை : இ) வடலூர்**

9. வள்ளலாரின் சீர்திருத்தச் சிந்தனைகளுக்கு ஊற்றுக்கண்ணாக இருந்த இடம் ______.
அ) சென்னை ஆ) வடலூர் இ) மருதூர் ஈ) கந்தகோட்டம்
**விடை : ஈ) கந்தகோட்டம்**

10. 'கந்தகோட்டம்' அமைந்துள்ள இடம் ______.
அ) சிதம்பரம் ஆ) மருதூர் இ) சென்னை ஈ) வடலூர்
**விடை : இ) சென்னை**

11. வள்ளலார், பேசாதும் பிடியாதும் இருக்க வேண்டுமென வேண்டியன ______.
அ) பொய்ம்மையும் பெண்ணாசையும் ஆ) மதமான பேயும் புறம் பேசுவதும்
இ) பொய்ம்மையும் மதமான பேயும் ஈ) புறம்பொன்று பேசுவதும் பெண்ணாசையும்
**விடை : இ) பொய்ம்மையும் மதமான பேயும்**

12. கீழ்க்காணும் தொடர்களுள் பண்புத்தொகை ______.
அ) மலரடி ஆ) வளர்நலம் இ) மதமான பேய் ஈ) பெருநெறி
**விடை : ஈ) பெருநெறி**

13. பெருநெறி பிடித்தொழுக வேண்டும் – இத்தொடரில் அமைந்த வினையெச்சச் சொற்கள் ______.
அ) பெருநெறி வேண்டும் ஆ) பெருநெறி ஒழுக
இ) பிடித்து, ஒழுக ஈ) ஒழுக வேண்டும்
**விடை : இ) பிடித்து, ஒழுக**

www.Padasalai.Net

## இலக்கணக்குறிப்பு

**மலரடி** – உவமைத்தொகை
**வளர்நிலம், மிகுசென்னை, மருவுபெண்** – வினைத்தொகைகள்
**கருணைநிதி, மதமானபேய்** – உருவகங்கள்
**மறவா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**மறக்க** – எதிர்மறைப் பெயரெச்சம்
**பெருநெறி** – பண்புத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **நினைக்கின்ற – நினை + க் + கின்று + அ**
   **நினை** – பகுதி; **க்** – சந்தி; **கின்று** – நிகழ்கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
2. **வைத்து – வை + த் + த் + உ**
   **வை** – பகுதி; **த்** – சந்தி; **த்** – இறந்தகால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி
3. **பேசுவார் – பேசு + வ் + ஆர்**
   **பேசு** – பகுதி; **வ்** – எதிர்கால இடைநிலை; **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.
4. **இருக்க – இரு + க் + க் + அ**
   **இரு** – பகுதி; **க்** – சந்தி; **க்** – எதிர்கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
5. **ஒழுக – ஒழுகு + அ**
   **ஒழுகு** – பகுதி; **அ** – பெயரெச்ச விகுதி.
6. **பிடித்து – பிடி + த் + த் + உ**
   **பிடி** – பகுதி; **த்** – சந்தி; **த்** – இறந்தகால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி.
7. **பிடியாது – பிடி + ய் + ஆ + த் + உ**
   **பிடி** – பகுதி; **ய்** – (உடம்படுமெய்) சந்தி; **ஆ** – எதிர்மறை இடைநிலை; **த்** – எழுத்துப்பேறு; **உ** – வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதிகள்

1. **உள்ளொன்று – உள் + ஒன்று**
   “தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்” – (உள்ள் + ஒன்று)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – உள்ளொன்று
2. **ஒருமையுடன் – ஒருமை + உடன்**
   “உயிர்வரின்... இ ஈ ஐ வழி யவ்வும்” – (ஒருமை + ய் + உடன்)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – ஒருமையுடன்
3. **நோயற்ற – நோய் + அற்ற**
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – நோயற்ற
4. **பெண்ணாசை – பெண் + ஆசை**
   “தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்” – (பெண்ண் + ஆசை)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – பெண்ணாசை
5. **மறவாதிருக்க – மறவாது + இருக்க**
   “உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்” – (மறவாத் + இருக்க)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – மறவாதிருக்க
6. **பிடித்தொழுக – பிடித்து + ஒழுக**
   “உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்” – (பிடித்த் + ஒழுக)
   “உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” – பிடித்தொழுக

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# 4. அகநானூறு

## (அம்மூவனார் பாடல்)

### நம்மை அளப்போம்

### குறுவினா

1. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக. (Sep. - 20)

★ இத்தொடரில், பரதவர் வாழ்க்கைமுறை விவரிக்கப்பெற்றுள்ளது.
★ பரதவர், மீன் பிடிக்கும் கடல் பெரியது; அவர்கள் வாழும் இடமோ சிறுகுடி.
★ வாழிடமும் தொழில் செய்யுமிடமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதைச் சொற்கள் சுட்டுகின்றன.
★ தொழில் செய்யும் இடம் '**பெருங்கடல்**'; வாழிடம் '**சிறுகுடி**'. இவற்றில் முரண் நயம் புலப்படும்.

### கூடுதல் வினாக்கள்

2. உமணப் பெண்ணின் தோற்றம் பற்றிக் கூறுக. (PTA - 1)

➤ உப்பு விற்பனை செய்யும் உமணரின் மகள் (உமணப் பெண்) அழகும் இளமையும் வாய்ந்தவளாக இருந்தாள். தன் கைகளில் அணிந்த அழகிய **வளையல்கள் ஒலி எழுப்ப,** தெருவில் கைவீசி நடந்து, நெல்லைத் தந்து மாற்றாக உப்பினைப் பெற்றுக் கொள்ளுமாறு கூவினாள்.
➤ அவள் கூவல் ஓசை கேட்ட நாய்கள் குரைத்ததால், அச்சத்தால் மருண்டவளின் கண்கள் இரண்டும் **மீன்கள் ஒன்றோடொன்று** போர் செய்வனபோல் இருந்தன.

3. உப்பளம் என்றால் என்ன? (PTA - 2)

➤ கடற்கரை அருகில் மணல் திட்டுக்களில் அமைந்த உப்பங்கழிப் பகுதியை ஒட்டிய நிலப்பரப்பில் கடல்நீரைப் பாய்ச்சி, தேக்கி, **வெயிலில் உலர விட்டு,** அதில் ஆடைபோல் படியும் உப்பைத் திரட்டுவர். இதற்கு உப்பளம் என்பது பெயர்.

4. பரதவர் செய்தொழில்கள் யாவை?

➤ பெரிய கடலில் மீன் வேட்டையாடுதல், உப்பங்கழியின் விரிந்த நிலப்பரப்பில், உழாமலே உப்பை விளைவித்தல் என்னும் தொழில்களைச் சிறுகுடிவாழ் பரதவர் செய்தனர்.

5. எல்வளை தெளிர்ப்ப வீசிநடந்த மடமகள் யார்?

➤ கைகளில் அணிந்த அழகிய வளைகள் ஒலி எழுப்பக் கைகளை வீசித் தெருவில் நடந்தவள், உப்பை வண்டியில் ஏற்றி விற்கக் கொண்டுசென்ற **உமணர் ஒருவரின் மகளாவாள்.**

6. விளியறி ஞமலி குரைப்பது ஏன்?

➤ உமணர் மடமகள் வீதியில் கைவீசி நடந்து, உப்புக்கு மாற்றாக நெல்தந்து பெற்றுக் கொள்ளுமாறு கூவினாள். அவள் கூவிய ஒலி, வேற்றுக் குரல் என்பதை அறிந்த நாய் குரைத்தது.

7. பகட்டின் எவ்வம் எவ்வாறு தீர்க்கப்பட்டது?

➤ உப்பு ஏற்றிய வண்டி, கருஞ்சேற்றில் சிக்கிக்கொண்டது.
➤ அவ்வண்டியைச் சேற்றிலிருந்து மீட்க, எருது துன்பத்துடன் முயன்றது.
➤ வண்டி இழுக்கும் எருதின் துன்பத்தை, அந்தப் பெண்ணின் தந்தை உதவி செய்து நீக்கினான்.

### சிறுவினா

1. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' இத்தொடரின்வழிப் பண்டமாற்று வணிகத்தை விளக்குக. (PTA - 1)

★ பண்டைக் காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலத்தின் **இயல்புக்கு ஏற்பத் தொழில் செய்து** வந்தனர்.
★ நெய்தல் நிலத்தில் வாழ்ந்தோர், பெருங்கடலில் **மீன்பிடித்தல்,** உப்பங்கழிகளில் உப்புத் தயாரித்தல் தொழிலைச் செய்தனர். **நெல் என்பது,** மருத நிலத்தில், வயல் நிலத்தில் உற்பத்தி செய்யப்படுவது.
★ இவ்வகையில் உப்பை நெல்லுக்கு மாற்றாகக் கொடுத்தனர் என்பது, இத்தொடர்களால் தெரிகிறது.
★ இதனால் பண்டைக் காலத்தில் **மக்களிடையே பண்டமாற்று வணிகம்** நடைபெற்றமை புலப்படுகிறது.
★ நெய்தல் நிலத்தில் உற்பத்தி செய்த உப்பை, பண்டமாற்று வணிக முறையில் நெல்லைப் பெற்று வழங்கியதை, இத்தொடர் உணர்த்துகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**2. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?** (Mar. - 20)

- "உமணர் ஒருவரின் அழகும் இளமையும் வாய்ந்த மகள் ஒருத்தி, வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்து, '**உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீர்**' எனக் கூவினாள்.
- வேற்றுக் குரலொலி கேட்டுக் குரைத்த நாயின் குரைப்பு ஒலியால் அச்சமுற்ற உமணப் பெண்ணின் கண்கள் இரண்டும், **மீன்கள் அச்சத்தால் தம்முள் போர் செய்வனபோல்** மருண்டதைக் கண்டேன்.
- தினைப்புனம் அமைக்கும்போது உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் உப்பு ஏற்றிய வண்டி சிக்கிக் கொண்டபோது, அப்பெண்ணின் தந்தை வண்டியைச் சேற்றிலிருந்து மீட்க முயன்ற **எருதுகளின் துன்பம் போகுமாறு** உதவி செய்தார்.
- அந்த உமணப் பெண்ணின் கண்களால், சேற்றில் சிக்கிய அந்த எருதுகளைப்போல் நான் துன்புறுகிறேன்" என்பது தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாக அம்மூவனார் கூறும் செய்தியாகும்.

**3. அகநானூறு – குறிப்பு வரைக.** (Sep.-20)

- அகம் + நான்கு + நூறு = அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு **ஆசிரியப்பாக்களால்** ஆன பாடல்களின் தொகுப்பு இது. **எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.** இந்நூலில் உள்ள பாடல்கள் 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப் பேரெல்லையும் கொண்டவை. நீண்ட அடிகளை உடைய பாடல்களால் ஆனதால், இந்நூலுக்கு '**நெடுந்தொகை**' என்ற பெயரும் உண்டு.
- அழகான திணை வைப்பு முறையில் தொகுக்கப்பட்ட **ஒரே தொகை நூல்** அகநானூறு ஆகும். இந்நூல், மூன்று பெரும்பிரிவுகளை உடையது. களிற்றியானை நிரையில் 120 பாடல்களும், மணிமிடை பவளத்தில் 180 பாடல்களும், நித்திலக் கோவையில் 100 பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

**4. 'என்றூழ் விடர குன்றம் போகும்' – போனது யார்? ஏன்?**

- 'கோடைக்காலத்தின் சூரிய வெப்பத்தால் பிளவுபட்ட குன்றுகள் நிறைந்த பாதையைக் கடந்து, தொலைத்தூரத்தில் உள்ள ஊர்களுக்குச் சென்றனர்' என்பது இதன் பொருள்.
- உப்பு வணிகம் செய்யும் உமணர், தொலைவில் உள்ள ஊர்களுக்கு உப்பைக் கொண்டு சென்று, பண்டமாற்றாக விற்பனை செய்வர்.
- நெய்தல் நிலத்தின் உப்பங்கழிகளை அடுத்த நிலப்பரப்பின் உப்பளங்களில் உழவு செய்யாமல் விதைத்த வெண்ணிறக் கல்உப்பை விற்பனை செய்வதற்காக, எருதுகள் பூட்டிய வண்டியில் ஏற்றிய உமணர், பிளவுபட்ட குன்றுகள் நிறைந்த பாதையில் பயணம் செய்தனர்.

## பலவுள் தெரிக

1. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது? (PTA - 3)
   அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
   **விடை : இ) நாய்**

## கூடுதல் வினாக்கள்

2. பரதவர் வாழிடம் ______.
   அ) பெருங்கடல் ஆ) இருங்கழி இ) சிறுகுடி ஈ) சேரி
   **விடை : இ) சிறுகுடி**
3. உப்பு விளையும் இடம் ______.
   அ) பெருங்கடல் ஆ) உப்பங்கழி இ) விடரகுன்றம் ஈ) இருங்கழிச் செறு
   **விடை : ஈ) இருங்கழிச் செறு**
4. 'இருங்கழிச் செறு' என்பது ______.
   அ) பெருங்கடல் ஆ) உப்பங்கழி இ) உப்பு விற்குமிடம் ஈ) உப்பளம்
   **விடை : ஈ) உப்பளம்**
5. உமணர் மகள் உப்பு விலைமாறு கூறிய இடம் ______.
   அ) மனை ஆ) சிறுகுடி இ) அள்ளல் ஈ) சேரி
   **விடை : ஈ) சேரி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

6. வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி – இத்தொடரில் 'விலை' என்னும் பொருளுடைய சொல் ______.
அ) வெண்கல் ஆ) உப்பின் இ) கொள்ளை ஈ) சாற்றி
விடை : இ) கொள்ளை

7. 'கதழ்கோல்' வைத்திருந்தது ______.
அ) பரதவர் ஆ) மடமகள் இ) புனவன் ஈ) உமணர்
விடை : அ) பரதவர்

## இலக்கணக்குறிப்பு

**பெருங்கடல், சிறுகுடி, வெண்கல்** – பண்புத்தொகைகள்
**உழாஅது** – செய்யுளிசை அளபெடை
**வெரீஇய** – சொல்லிசை அளபெடை
**மடமகள்** – உரிச்சொல் தொடர்
**மதர்கயல்** – வினைத்தொகை

## உறுப்பிலக்கணம்

1. **செய்த – செய் + த் + அ**
**செய்** – பகுதி; **த்** – இறந்தகால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
2. **சாற்றி – சாற்று + இ**
**சாற்று** – பகுதி; **இ** – வினையெச்ச விகுதி
3. **தெளிர்ப்ப – தெளிர் + ப் + ப் + அ**
**தெளிர்** – பகுதி; **ப்** – சந்தி; **ப்** – எதிர்கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
4. **வீசி – வீசு + இ**
**வீசு** – பகுதி; **இ** – வினையெச்ச விகுதி.
5. **அழுந்திய – அழுந்து + இ(ன்) + ய் + அ**
**அழுந்து** – பகுதி; **இ(ன்)** – இறந்தகால இடைநிலை: 'ன்' புணர்ந்து கெட்டது;
ய் – (உடம்படுமெய்) சந்தி; அ – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சிவிதி

1. **பெருங்கடல் – பெருமை + கடல்**
"ஈறுபோதல்" – (பெரு + கடல்), 'இனம் மிகல்' – பெருங் + கடல்) – பெருங்கடல்
2. **சிறுகுடி – சிறுமை + குடி / வெண்கல் – வெண்மை + கல்**
"ஈறுபோதல்" – (சிறு + குடி) – சிறுகுடி / (வெண் + கல்) – வெண்கல்
3. **விளியறி – விளி + அறி**
"உயிர்வரின்.... இ ஈ ஐ வழி யவ்வும்" – (விளிய் + அறி)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – விளியறி
4. **எவ்வந்தீர – எவ்வம் + தீர / வாங்குந் தந்தை – வாங்கும் + தந்தை**
"மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" (எவ்வந் + தீர / வாங்குந் + தந்தை)
எவ்வந்தீர / வாங்குந்தந்தை
5. **பகட்டின் – பகடு + இன்**
"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்கள் டறஒற்று இரட்டும்" (பகட்டு + இன்)
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" – (பகட்ட் + இன்)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – பகட்டின்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 7

## உரைநடை உலகம்

# 1. இலக்கியத்தில் மேலாண்மை

(வெ. இறையன்பு இ. ஆ. ப.)

### நம்மை அளப்போம்

### குறுவினா

**1. பருவத்தே பயிர்செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.** (PTA -6)

★ பருவத்தே பயிர்செய் என்பது, காலத்தின் அருமையை உணர்ந்து, பொறுப்புடன் நிருவாக நெறியை இணைத்தால், வேளாண்மையும் மேலாண்மையும் செழிக்கும் என்பதை உணர்த்தும் தொடராகும்.

★ அதாவது, சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய காலத்தில் விதைத்தால், அவ்விதை முளைத்துப் பயனைத் தரும்.வேளாண்மையும் செழிக்கும்.

### கூடுதல் வினாக்கள்

**2. புராதன மனிதன் இடர்களைத் தாண்டி வாழவைத்தவை எவை?**

➤ புராதன மனிதனிடம் குருத்துவிட்ட தலைமைப் பண்பும், வழி நடத்தும் இயல்புகளுமே, அவனை இயற்கையோடு இயைந்தும், இடர்களைத் தாண்டி நீடித்தும் வாழவைத்தன.

**3. கடலைக் குறிக்கும் வேறு பெயர்கள் சிலவற்றைக் கூறுக.**

➤ ஆழி, ஆர்கலி, பௌவம், முந்நீர், அளக்கர், திரை, பெருநீர் முதலான பல பெயர்கள் கடலைக் குறிக்கும் வேறு பெயர்களாகும்.

**4. பண்டைய தமிழகத்தில் வணிகப் பரிமாற்றம் நிகழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகளைக் கூறுக.**

➤ பண்டைக் காலத்தில் அந்நிய நாடுகளுடன் வணிகப் பரிமாற்றம் நடந்தபோது, நம்மிடம் உயர்தரப் பொருள்கள், பண்பாடு குறித்த ஆழ்ந்த அறிவு, சிறந்த துறைமுகங்கள், இருமொழி அறிந்த மொழிபெயர்ப்பாளர்கள் எனப் பல்வேறு சாத்தியக் கூறுகள் தமிழகத்தில் இருந்தன.

**5. காவிரிப்பூம்பட்டினத்தில் பிறநாட்டுப் பொருள்கள் எவ்வாறு குவித்து வைக்கப்பட்டிருந்தன?**

➤ மாரிக்காலத்து மழைமேகம் போலப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும், வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய பொருள்களும் கணக்கிட இயலாத அளவு காவிரிப்பூம்பட்டினத்தில் குவிந்து கிடந்தன என்று, ‘பட்டினப்பாலை’ பாடுகிறது.

**6. சுங்கம் விதித்த பொருள்மீது பொறித்த சின்னம் எது?**

➤ ஏற்றுமதிக்காகவும் இறக்குமதிக்காகவும் குவித்த பொருள்களுக்கு சுங்க அதிகாரிகள் சுங்கம் வசூலித்தபின், அவற்றின்மீது புலிச்சின்னத்தைப் பொறித்து அனுப்பினர்.

**7. யவனர்களின் கப்பல்கள் எங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன?**

➤ மிகப்பெரிய துறைமுகமாக அறியப்படுகிற முசிறித் துறைமுகம், யவனர்களின் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாக இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

**8. தமிழர்க்கும் பிறநாட்டவர்க்கும் இடையே இருந்த வணிக உறவை எவ்வாறு அறியலாம்?**

➤ தமிழர்க்கும் கிரேக்க, உரோமானியர்களுக்கும் இடையே இருந்த வணிக உறவைப் புறநானூறு முதலிய இலக்கியங்களில் காணப்படும் குறிப்பால் அறியலாம்.

**9. தொடங்கிய செயலை முடிக்க முடியாதவருக்கு வள்ளுவர் கூறும் எச்சரிக்கை யாது?**

➤ தம்முடைய வலிமையின் அளவு அறியாமல், மனவெழுச்சியால் தூண்டப்பட்டுத் தொடங்கி இடையில் செயலை முடிக்க வகை தெரியாமல் அழிந்தவர் பலர் என்பதே, தொடங்கிய செயலை முடிக்க முடியாதவருக்குத் திருவள்ளுவர் கூறும் எச்சரிக்கையாகும்.

**10. போட்டியிடுபவருடன் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?**

➤ போட்டியாளர்களே நமக்குள் உந்துசக்தியை உற்பத்தி செய்கிறார்கள் என்னும் மேலாண்மை விதியை மனத்தில் கொண்டு, போட்டி இடுபவருடன் நாம் செயல்பட வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**11. ஒய்வு என்பது கனவானது யாருக்கு? ஏன்?**

➤ வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனுக்கு ஓய்வு என்பது கனவாக இருந்தது. அவனது பொழுது முழுவதும் உணவு தேடுவதிலேயே கழிந்தது என்பதே காரணமாகும்.

**12. பணியைப் பாரமாக்காமல் சாரமாக்குவோர் யார்?**

➤ இன்சொல்லாகிய விளைநிலத்தில், ஈகையை விதைத்து, வன்சொற்களாகிய களைகளைக் களைந்து, வாய்மை எருவிட்டு, அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிரை விளைவிப்போர் சிறந்த மேலாளர்களாகவும் நிருவாகிகளாகவும் இருப்பர். அத்தகையவர்களிடம் பணிபுரிவோர் பணியைப் பாரமாக்காமல் சாரமாக்குவார்கள்.

**13. நிருவாக மேலாண்மை என்றால் என்ன?**

➤ உயர் பதவியில் இருப்பவர், ஒரு வேலையை அல்லது பணியைத் தாமே செய்யாமல், மாறாக அப்பணியை எவர் சிறப்பாகச் செய்வார் எனத் தேர்ந்து முடிவு செய்து, அதனை அவர் வசம் ஒப்படைத்துச் செயல்படுத்துவதே, நிருவாக மேலாண்மையாகும்.

**14. நிருவாக மேலாண்மை குறித்து நாலடியார் நவில்வது யாது?**

➤ “படிக்காதவராகவே இருந்தாலும், படித்த பெரியோருடன் சேர்ந்து பழகினால், பண்பட்ட நல்லறிவு ஒவ்வொரு நாளும் கிடைக்கப் பெறுவர்” என்னும், நிருவாக மேலாண்மை குறித்த செய்தியை, நாலடியார் நவில்கிறது.

**15. வெ. இறையன்பு எழுதிய நூல்கள் யாவை?**

➤ வாய்க்கால் மீன்கள், ஐ. ஏ. எஸ்., வெற்றிப் படிக்கட்டுகள், ஏழாவது அறிவு, உள்ளொளிப் பயணம், மூளைக்குள் சுற்றுலா உள்ளிட்ட பல நூல்களை, வெ. இறையன்பு எழுதியுள்ளார்.

**16. திருவள்ளுவர் நேர மேலாண்மை குறித்துக் கூறுவது யாது ?** **(PTA -3)**

➤ ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து, ஒரு செயலை மேற்கொண்டால், உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும் என்று கூறி, நேர மேலாண்மையை வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்.

**17. நேர மேலாண்மையைக் குறிக்கும் குறளை எழுதுக.** **(PTA -2)**

“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்”.

## சிறுவினா

**1. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.** **(PTA-1,2,4,6, Sep.- 21)**

★ மனிதகுல நாகரிக வளர்ச்சியில் வேளாண்மை, பெரும்பங்காற்றியுள்ளது. இயற்கையோடு ஒருங்கிணைந்த மேலாண்மையே, மனித இனத்தின் வெற்றிக்குக் காரணமாகும்.

★ ஆதலால், சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய பருவத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், உரமிடுதல், பூச்சிகளிடமிருந்து பயிரைப் பாதுகாத்தல், உரிய நேரத்தில் அறுவடை விளைபொருளை செய்தல், தக்க விலை வரும்வரை இருப்பு வைத்தல் போன்ற செயல்களின் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிருவாக வழிமுறைகளும் கொண்ட மேலாண்மையால், வேளாண்மைத் தொழிலை வெற்றிபெறச் செய்யலாம் எனப் பரிந்துரைக்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

**2. உழவுத்தொழிலில் மேலாண்மை குறித்து நீவிர் அறிந்தனவற்றை எழுதுக.** **(May -22)**

➤ உழவுத் தொழிலிலும் மேலாண்மை குறித்த கூறுகள் உண்டு. பயிரிடுவதற்குச் சரியான விதையைத் தேர்ந்தெடுத்தல், உரிய காலத்தில் விதைத்தல், நீர் பாய்ச்சுதல் மேலாண்மையை நெறிப்படுத்துதல், அறுவடைக்குப்பின் விளைபொருளைப் பாதுகாத்தல், உரியவிலை கிடைக்கும்வரை இருப்பு வைத்தல் என ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் நிருவாக நெறியும் இணைந்தால்தான் வேளாண்மை என்னும் உழவுத்தொழில் செழித்து மேலாண்மை பெறும்.

➤ “இன்சொல்லை விளை நிலமாக்கி, ஈகையை விதையாகத் தூவி, கடுஞ்சொற்களாகிய களைகளை நீக்கி, வாய்மை எருவை இட்டு, அன்பு என்னும் நீரைப் பாய்ச்சி, அறமாகிய கதிரை ஈனுமாறு பசுமையான பயிரை இளமைமுதலே செய்ய வேண்டும்” என அறநெறிச்சாரம் கூறுவது, மனித மனமே ஒரு வேளாண்மைக்கு உட்பட்ட மேலாண்மையை வளர்த்துக்கொள்ள உதவுவதை வலியுறுத்துகிறது.

3. **நேர மேலாண்மையே வெற்றி தரும் என்பதை விளக்குக.**

- உரிய நேரத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை என்றால் வெற்றி கிடைக்காது. போர்களில் குறைவான படைவீரர்களைப் பெற்றவர் பல நேரங்களில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.
- இதனைத் திருவள்ளுவர், "ஏற்ற காலத்தை அறிந்து, ஏற்ற இடத்தையும் தேர்ந்து ஒரு செயல் மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அது கைகூடும்" எனத் தெளிவு படுத்துகிறார். அதாவது, "ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செயின்" என்பது பொருள்.

4. **அரசன் செயலாற்றும் முறைகுறித்துத் தமிழ் இலக்கியங்களால் பெறப்படும் செய்திகளைக் கூறுக.**

- அரசன் ஒருவன் ஒருநாளை எவ்வாறு வகைப்படுத்தி ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதை வள்ளுவர் 'மடியின்மை' அதிகாரத்தில் அட்டவணைப்படுத்தியுள்ளார். புறநானூற்றுப் பாடல் ஒன்றில் புலவர் கோவூர்கிழார் என்பார் சோழன் நலங்கிள்ளியைப் பற்றிப் பாடும்போது, அவன் இரவின் கடையாமத்திலும் உறங்காது விழித்திருந்து பணியாற்றினான் எனக் கூறி வியக்கிறார். "பலர் துஞ்சவும் தான் துஞ்சான் உலகு காக்கும் உயர் கொள்கை கேட்டோன்" என்பது பாடலாகும்.

5. **சங்க காலத்தில் தமிழகத்தில் வணிகம் சிறந்திருந்தமைக்கான அடிப்படைகள் குறித்துக் கூறுக.**

- சங்க காலத்தில் தமிழகம் செல்வ வளத்தில் மேம்பட்டிருந்தது. தமிழரின் பண்டைய வணிகப் பரிமாற்றம் குறித்த பதிவுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பிறநாடுகளுடன் வணிகம் செய்யும்போது பரிமாற ஏதுவான உயர்தரப் பொருள்கள் தமிழகத்தில் இருந்தன.
- அந்நிய நாடுகளின் பண்பாடு குறித்த ஆழ்ந்த அறிவு, பிற நாட்டவர் வருவதற்கு ஏற்ற துறைமுகங்கள், பிறமொழிகளை அறிந்து மொழிபெயர்ப்பாளர்கள் எனப் பல தயாரிப்புகள் இருந்ததனால்தான் வணிகம் சிறப்புற முடிந்தது எனலாம். மாரிக்கால மழை மேகம்போல் கடல்வழி வந்த பிறநாட்டு மரக்கலங்களின் பொருள்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இறக்குமதி செய்யப்பட்டதைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

6. **மேலாண்மையிலும் தம் வலி அறிந்து செயல்பட வேண்டும் என்பதை இறையன்பு எவ்வாறு சுட்டுகிறார்?**

- வர்த்தகம் செய்யும்போது இலாபம் கிடைக்கும் மிதப்பில் பலர் தாம் தொட்டது துலங்கும் என்னும் பிம்பத்தை உருவாக்கிக் கொண்டு, அறியாத துறையில் ஈடுபட்டுக் கைப்பொருளை இழந்து ஒருநாள் கன்னத்தில் கைவைத்துக் கலங்குவர். எனவே, வெற்றி வரும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்கிறார் இறையன்பு.
- "தன் வலிமையின் அளவை அறியாமல் மன எழுச்சியால் ஒரு செயலைத் தொடங்கி முடிக்க முடியாமல் அழிந்தவர் பலர் உண்டு" என வள்ளுவர் எச்சரித்திருப்பதை இங்குச் சுட்டிக் காட்டுகிறார்.

7. **இலக்கியங்கள் எவ்வெவ்வாறு எவற்றை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளன?**

- இலக்கியப் படைப்பாளர்கள் சமூகத்தில் பரவிடும் பன்னீர் புஷ்பங்களின் மணத்தைச் சிதைத்துக் குப்பிகளில் அடைக்க முனைவதில்லை.
- மகத்தான மனிதர்களின் வீழ்ச்சிகளைச் சித்தரிக்கும் படைப்பாளர்கள், பலவீனங்களைக் கோடிட்டுக் காட்டி எச்சரித்து நன்னெறிகளையும் அறிவுறுத்தும் வகையில் காவியங்கள், நாடகங்கள், கவிதைகள், உருவகக் கதைகள், ஊடகங்கள் வாயிலாக முயற்சி செய்கின்றனர். அவற்றுள் தலையாய வெளிப்பாடே மேலாண்மைக் கருத்துகள் ஆகும். இவ்வகையில் உலக இலக்கியங்கள் அனைத்திலும் மேலாண்மைக் கருத்துகள் மென்மையாகப் பரவிக் கிடக்கின்றன.

8. **நேர மேலாண்மை குறித்து எழுதுக.** (PTA -3)

- மனிதன் ஓய்வு நேரத்தை உருவாக்கத் தொடங்கியபோது, மனிதனுடைய மேலாண்மைப் பண்பு உருவானது. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனுக்கு ஓய்வு என்பது கனவு. அவனது பொழுது, உணவு தேடுவதிலேயே கழிந்தது.
- விரைவாக வேலை செய்யக்கூடியதும், பணியை எளிதாக்கக் கூடியதுமான கருவிகளைச் செய்த போது, மனிதனால் ஓய்வு நேரத்தை உருவாக்க முடிந்தது. மனிதனுடைய ஓய்வு நேரம், சிந்திக்கவும் வளமான வாழ்க்கைக் கூறுகளை மேலும் உண்டாக்கிக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தது.
- அதிக நேரத்தை உருவாக்க முடிந்தவர்களே, இன்றுகூட வரலாறு படைப்பவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திட்டமிடுவதை ஒவ்வொருநாளும் செய்யவேண்டும்.
- அன்றன்றைய பணிகளை மன அடுக்குகளில் வகுத்துக்கொள்ள வேண்டும். சிறந்த நிருவாகியாக இருந்தால்கூட, செயலாற்றுவதற்கு உரிய நேரத்தைத் தேர்ந்தெடுக்கவில்லையென்றால், வெற்றி கிடைக்காமல் போய்விடும்.

www.Padasalai.Net

**9. 'ஒரு வேளாண்மைக்கு உட்பட்ட மேலாண்மை உடையதே மனம்' என்பதை அறநெறிச்சாரப் பாடல்வழி விளக்குக.**

- வேளாண்மையின் பயனைப் பெற, நிலத்தில் விதைத்தல், களை நீக்குதல், எரு இடுதல், நீர் பாய்ச்சுதல், கதிர் அறுத்தல் ஆகிய நேர மேலாண்மைகள் அனைத்தையும் முறையாகச் செய்தல் வேண்டும். அதுபோல் அறம் செய்ய நினைப்பவரும் இளமைப் பருவத்திலேயே காலம் தாழ்த்தாமல் தக்க பருவத்தில் பயிர் செய்வதைப்போல, பல நல்ல நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- அதாவது இன்சொல்லை விளைநிலமாகக் கொண்டு, ஈதலை விதையாகத் தூவி, வன்சொல்களை நீக்கி, வாய்மை எரு போட்டு, அன்பாகிய நீர் பாய்ச்சி, அறமாகிய கதிர் வெளிப்படுமாறு செய்தல் வேண்டும். இவ்வாறு நல்லறத்தைக் கடைப்பிடிக்க விரும்பும் மனித மனத்திற்குரிய நேர மேலாண்மையை, அறநெறிச்சாரம் விளக்குகிறது.

**10. மேலான மேலாண்மைக்கு வெ. இறையன்பு தரும் விளக்கங்களைத் தருக.**

- மேலாண்மை என்பது, புத்தக அறிவுடன் முடிவது அன்று. நொடிக்கு நொடி மாறிவரும் சூழல்களை எதிர்கொள்ளும் திறமையே சிறந்த மேலாண்மை ஆகும்.
- நிறுவனத்திற்கு முன்அனுபவம் மிக்க அனுபவசாலிகள் தேவையில்லை. நெருக்கடியை நேர்கொள்ள ஜல்லிக்கட்டுக் காளைகள் தேவை என்கிறார்.
- எவ்வளவு எழுதுகிறோம் என்பது முக்கியமல்ல; எவ்வளவு அடர்த்தியாக எழுதுகிறோம் என்பதே முக்கியம் என, மேலான மேலாண்மைக்கு வெ. இறையன்பு விளக்கம் தருகிறார்.

**11. வரவைத் தாண்டி செலவு செய்பவர் நிலை யாதாகும்?**

- நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி அதிகமாகச் செலவு செய்தால் அடுத்தவனிடம் கை, ஏந்த வேண்டிய அவலநிலை உருவாகும்.
- உறவுகளையும் நட்பையும் வெறுக்கும் சூழல் உருவாகும். இதனை ஔவையார், "ஆனமுதலில் அதிகம் செலவு செய்பவன் மானம் அழிந்து, அறிவு கெட்டு, போன இடத்தில் எல்லார்க்கும் பொல்லாதவனாகி, நல்லவர்க்கும் பொல்லாதவனாகி விடுவான்" எனக் கூறுவதை நினைவில் கொள்ள இறையன்பு அறிவுறுத்துகிறார்.

## நெடுவினா

**நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**மனித இனமும் மேலாண்மையும் :** **(PTA - 3,5,6, Dept., Sep.- 21)**

மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் தொடங்கிவிட்டது. இயற்கையோடு இயையவும், இடர்களைத் தாண்டவும், சூழ்நிலையை எதிர்கொள்ளவும் மேலாண்மை அவசியம் தேவை. மனிதனுடைய மேலாண்மைப் பண்பு, எச்செயலையும் திட்டமிட்டுச் செய்வதில்தான் உள்ளது. ஏற்ற காலத்தை அறிந்து செயல்பட்டால், உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும். எது எந்த நேரத்தில் முக்கியம் என்று, சரியான முடிவெடுப்பதில்தான், வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது.

**நிருவாக மேலாண்மை :**

உயர் பதவியில் இருப்பவர் நிபுணத்துவம் பெற்றவராக இருப்பது சாத்தியமில்லை. ஆனால், இச்செயலைச் செய்து முடிக்கும் திறமைசாலி யார் என்று அறிந்து முடிவு எடுப்பதே, சிறந்த நிருவாக மேலாண்மை ஆகும். நாலடியார் கூறுவதுபோலக் கல்லாதவராக இருந்தாலும், கற்ற சான்றோருடன் சேர்ந்து பழகினால், நற்பண்புகள் நாளும் வளரும்; நிருவாக மேலாண்மையும் சிறப்படையும்.

**நிதி மேலாண்மை :**

நிருவாகத்தில் வரவே, செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி அதிகம் செலவு செய்பவர், அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுவர். ஷேக்ஸ்பியர் எழுதிய 'டைமன்' நாடகத்தில், வரவைவிடச் செலவு அதிகம் செய்ததால், முடிவில் மனித இனத்தையே வெறுத்து ஒதுங்க வேண்டிய இழிநிலையை அடைய நேரிடும் என்பது விளக்கப்பட்டது. ஔவையாரும், "ஆனமுதலில் அதிகம் செலவானால், மானம் அழிந்து மதிகெட்டு, எல்லார்க்கும் கள்ளனாய், தீயனாய், பொல்லனாய் அழிந்துபோவான்" என்று கூறியுள்ளார்.

**மேலான மேலாண்மை :**

மேலாண்மை என்பது, புத்தக அறிவுடன் முடிவதில்லை. உலகின் சூழல், நொடிக்குநொடி மாறிக் கொண்டே இருக்கிறது. பழமையான அனுபவம் கொண்டு, புதிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது. செயலை முடிக்கச் செக்கு மாடுகளாகிவிடும் அனுபவசாலிகளைவிடச் சீறிச் செயல்படும் ஜல்லிக்கட்டுக் காளைகளே தேவைப்படும். ஒவ்வொரு நாளும் புதியது என எண்ணிச் செயல்படும் தன்மையே, மேலான மேலாண்மையாகும்.

## பலவுள் தெரிக

1. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் **(Sep. - 21)**
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
**விடை : ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**

## கூடுதல் வினாக்கள்

2. 'இலக்கியத்தில் மேலாண்மை' என்னும் நூலின் ஆசிரியர் : **(May -22)**
அ) பக்தவத்சல பாரதி ஆ) வெ. இறையன்பு
இ) தி. சு. நடராசன் ஈ) அய்யப்ப மாதவன்
**விடை : ஆ) வெ. இறையன்பு**

3. 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்' – என்னும் குறள் குறிப்பது ______. **(PTA -5)**
அ) வேளாண் மேலாண்மை ஆ) நேர மேலாண்மை
இ) நிருவான மேலாண்மை ஈ) வணிக மேலாண்மை
**விடை : ஆ) நேர மேலாண்மை**

4. மனித இனம் தோன்றியபோதே துளிர்க்கத் தொடங்கியது ______.
அ) வரலாறு ஆ) பண்பாடு இ) மேலாண்மை ஈ) நாகரிகம்
**விடை : இ) மேலாண்மை**

5. இன்று ______ உருவாக்க முடிந்தவர்களே வரலாறு படைப்பவர்கள் ஆவர்.
அ) அதிக பணத்தை ஆ) அதிக நேரத்தை
இ) அதிக அதிகாரத்தை ஈ) அதிக படையை
**விடை : ஆ) அதிக நேரத்தை**

6. அரசன், எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு வள்ளுவர் வகுத்துள்ள அதிகாரம் ______.
அ) தெரிந்து தெளிதல் ஆ) செங்கோன்மை
இ) வினைசெயல்வகை ஈ) மடியின்மை
**விடை : ஈ) மடியின்மை**

7. கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்து பாடிய பாடல் இடம்பெற்ற நூல் ______.
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) பட்டினப்பாலை
**விடை : ஆ) புறநானூறு**

8. விடை தேர்க.
**செய்தி 1 :** மேலாண்மைத் துறையில் தமிழர் பழங் காலந்தொட்டுச் சிறந்து விளங்குகின்றனர்.
**செய்தி 2 :** நாட்டின் நிருவாகத் திறனுக்கு ஒரு சான்று சோழர் காலக் குடைவோலை முறை தேர்தல், உத்திரமேரூர் கல்வெட்டு
அ) செய்திகள் தவறு ஆ) செய்தி 1 சரி, 2 தவறு
இ) செய்தி 1 தவறு, 2 சரி ஈ) செய்திகள் சரி
**விடை : ஈ) செய்திகள் சரி**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


9. விடை தேர்க.

**செய்தி 1 :** இன்றுகூட அதிக நேரத்தை உருவாக்க முடிந்தவர்களே வரலாறு படைப்பவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**செய்தி 2 :** உரிய நேரத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை என்றால் சிறந்த நிருவாகியாக இருந்தால்கூட வெற்றி கிடைக்காமல் போய்விடுகிறது.

அ) செய்தி 1, 2 தவறு ஆ) செய்தி 1 தவறு, 2 சரி
இ) இரு செய்திகளும் சரி ஈ) செய்தி 1 சரி, 2 தவறு

**விடை : இ) இரு செய்திகளும் சரி**

10. **செய்தி 1 :** குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்ட செய்தி பட்டினப்பாலையிலும் பாண்டியப் போர்ப்படையில் உரோமாபுரிச் சிப்பாய்கள் பணியாற்றியது சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**செய்தி 2 :** தமிழர்களுக்குக் கடல் ஏரிபோல் இருந்ததால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் திகழ்ந்தது.

அ) செய்தி 1 சரி, 2 தவறு ஆ) செய்தி 1 தவறு, 2 சரி
இ) இரு செய்திகளும் சரி ஈ) இரு செய்திகளும் தவறு

**விடை : இ) இரு செய்திகளும் சரி**

11. தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்குச் சுங்கம் வசூலித்து புலிச்சின்னம் பொறித்ததை ______ குறிப்பிடுகிறது.

அ) சிலப்பதிகாரம் ஆ) சிந்தாமணி இ) பட்டினப்பாலை ஈ) மதுரைக்காஞ்சி

**விடை : இ) பட்டினப்பாலை**

12. ஒற்றை வரிகளில் எழுதிய ‘துளிகள்’ மூலம் உலகப்புகழ் பெற்றவர் ______, ______.

அ) ஹிராக்ளிடஸ் ஆ) ஸ்ட்ரேபோ இ) அகஸ்டஸ் சீசர் ஈ) டைமன்

**விடை : அ) ஹிராக்ளிடஸ்**

13. ஆணையிடும் அரசனும், அடக்கத்துடன் கேட்கும் பணியாளரும் பற்றிய சுவரோவியம் இடம்பெற்ற கோவில் ______.

அ) திருநெல்வேலி – நாறும்பூநாதர் கோவில்
ஆ) திருவொற்றியூர் – படம்பக்கநாதர் கோவில்
இ) தஞ்சை – பெருவுடையார் கோவில் ஈ) சிதம்பரம் – நடராசர் கோவில்

**விடை : அ) திருநெல்வேலி – நாறும்பூநாதர் கோவில்**

14. சீனத்துப் பழங்கதை, ______ பற்றிக் கூறுகிறது.

அ) நேர மேலாண்மை ஆ) வேளாண் மேலாண்மை
இ) வணிக மேலாண்மை ஈ) நிருவாக மேலாண்மை

**விடை : அ) நேர மேலாண்மை**

15. ஷேக்ஸ்பியரின் ‘டைமன்’ பற்றிய நாடகம், ______ பற்றிய சிறந்த வாழ்வியல் விளக்கமாகும்.

அ) நேர மேலாண்மை ஆ) நிருவாக மேலாண்மை
இ) வணிக மேலாண்மை ஈ) நிதி மேலாண்மை

**விடை : ஆ) நிருவாக மேலாண்மை**

16. வெளிநாட்டுக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டதைப் பாடும் நூல் ______.

அ) பதிற்றுப்பத்து ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) பட்டினப்பாலை

**விடை : ஈ) பட்டினப்பாலை**

17. யவனர்களின் கப்பல்கள், ______ துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்படும்.

அ) கொற்கை ஆ) முசிறி இ) தொண்டி ஈ) காயல் பட்டினம்

**விடை : ஆ) முசிறி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# இயல் – 8

# 3. இரட்சணிய யாத்திரிகம்

## (எச். ஏ. கிருட்டிணனார்)

### நம்மை அளப்போம்

### குறுவினா

**1. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்? (PTA - 4, Sep. - 21, May - 22)**

★ "இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இந்த உலகம் பிளந்து வெடிக்காதது ஏனோ?

★ வானம் இடிந்து விழாதது ஏனோ? கடல்நீர் வற்றிப் போகாததும் ஏனோ?

★ இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ?" என்று, இறைமகனாரின் இன்னலைக் கண்ட மக்கள் பலவிதமாகப் புலம்பினர்.

### கூடுதல் வினாக்கள்

**2. ஏச். ஏ. கிருட்டிணனார் எழுதிய பிற நூல்கள் யாவை?**

➤ எச். ஏ. கிருட்டிணனார், போற்றித் திருஅகவல், இரட்சணிய மனோகரம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

**3. இறைமகனைப் பிணித்ததை எவ்வாறு கருதக்கூடாது?**

➤ இறைமகனைப் பிறர் கயிற்றால் பிணித்தபோது, அவர் உடன்பட்டு நின்றார்.

➤ அச்செயலை இயல்பாக மனிதர்களிடம் காணப்படும் சாதாரண அன்புச்செயல் என்று கருதமுடியாது.

➤ இறைமகனைப் பகைத்தவர் செயலாகவே கருதவேண்டும்.

**4. கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்றியது எது?**

➤ ஒன்றுகூடிய கொடியவர்கள் கூறிய இகழ்ச்சி மொழி என்னும் கொடுமையான தீக்கொள்ளி,

➤ அருள் நிறைந்த இறைமகனாகிய பெம்மானின் இதயத்தில் அழுந்தி ஊன்றியது.

**5. இறைமகன் எவ்வாறு நின்றார்? ஏன் அமைதி காத்தார்?**

➤ தம்மைத் துன்புறுத்துகிறவர்கள்மீது சினந்து வருந்தத்தக்க மறுசொல் கூறாது நின்றார்.

➤ தாம் கருதி வந்த வேலை நிறைவேறுவதற்காக அமைதி காத்தார்.

**6. பகை கொண்டவர் தன்னைக் கட்டியபோது எக்காரணத்திற்காக இறைமகன் கட்டுண்டு நின்றார்?**

➤ இம் மனிதர்கள் தாங்கள் வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் இருப்பார்களே என எண்ணி இரக்கப்பட்ட தன்மை காரணமாக இறைமகன் தன்னைப் பகைவர் கட்டியபோது கட்டுண்டு நின்றார்.

**7. அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை யாது? அதன் இயல்புகள் யாவை?**

➤ அனைத்துச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை என்பது மனிதம். நிறைய அன்பு, குறையாத ஆர்வம், தொடரும் நெகிழ்ச்சி, தொண்டில் மகிழ்ச்சி என்பன மனிதத்தின் இயல்புகளாகும்.

**8. முன்னுடை களைந்த பகைவர் எதைப் போர்த்தினர்?**

➤ இறைமகன் முன்னர் உடுத்தியிருந்த வெள்ளாடையைப் பகைவர் களைந்தனர்; முருக்க மலர்போல் சிவந்த ஓர் அங்கியை அவருக்குப் போர்த்தினர்.

**9. ஈசன் எவற்றை எல்லாம் பொறுத்திருந்தார்?**

➤ தன்னைப் புறக்கணித்து வாயில் வந்தபடி பேசிய தகாத பழிமொழிகளையும் தனக்குச் செய்த பொல்லாங்குகளையும், இறைமகனாகிய ஈசன் பொறுத்திருந்தார்.

**10. மனிதத்தின் இயல்புகள் எவை?**

➤ நிறைவான அன்பு, குறையாத ஆர்வம், மனநெகிழ்ச்சி, தொண்டு செய்வதில் காணும் மகிழ்ச்சி என்பன, மனிதத்தின் இயல்புகளாகும்.

**11. இயேசு பெருமான் தம் கொள்கையை எவ்வாறு வெளிப்படுத்தினார்?**

➤ அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படையான மனிதம் என்னும் கொள்கையை இயேசு பெருமான், தம் பேச்சாலும் வாழ்வாலும் வதைபல பட்டும் வெளிப்படுத்தினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## சிறுவினா

1. **'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : இறைமகன் இயேசுவைப் பொல்லாதவர்கள் **கயிற்றால் கட்டியபோது,** உடன்பட்டு நின்றதை விளக்கும் இடத்தைச் சுட்டும்போது, ஆசிரியர் கூறியது இது.

**விளக்கம்** : "பகை கொண்டவர்கள், இத்தகைய இழிசெயலைச் செய்கிறார்களே, இதற்காக வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் வருந்துவார்களே" என எண்ணி **இரக்கப்பட்டார் இயேசு.** அப்போதும் மனித குலத்தின்மீது கொண்ட உறுதியான அன்பின் காரணமாகத் தம்மை விடுவித்துக் கொள்ளாமல் உடன்பட்டு நின்றார். அப்போது ஈசன்மகன் நின்ற அமைதியான நிலையானது, எந்த உதவியும் பெற இயலாத, ஓர் ஏழையைப்போல் இருந்தது என, ஆசிரியர் கூறுகிறார்.

## கூடுதல் வினாக்கள்

2. **தனக்கு இன்னல் இழைத்தோர்க்கும் இறைமகன் இரக்கம் காட்டிய பாங்கினை விளக்குக.**

- நீச மக்கள் தன்னைப் பிணித்தபோது, 'தனக்கு இழிவான செயல்களைச் செய்யும் இம்மனிதர்கள், தாங்கள் **வாழும் காலம் முழுவதும்** துன்பத்தில் இருப்பார்களே' என்று எண்ணி, அவர்களுக்காக **இரக்கப்பட்டார்.** சொல்லத் தகாத பழிமொழிகளைக் கூறிச் செய்த **பொல்லாங்குகளை** எல்லாம், அவர்களுக்காகப் பொறுத்திருந்தார்.

3. **இறைமகன் வேதனை உழந்தது ஏன்? சினந்து நோதக நுவலாதது ஏன்?**

- இறைமகனுக்கு இழிவு செய்த கொடியவர்கள் ஒன்றுகூடி, இகழ்ச்சி உரைகள் பல கூறினர்.
- அக்கொடிய சொற்கள் தீக்கொள்ளியாகி, **மாசு இல்லாத அருள் நிறைந்த** இறைமகனின் இதயத்துள் அழுந்திப் புண்படுத்தி, வேதனைப்படச் செய்தது.
- எனினும், தம்மைத் துன்புறுத்தியவர்கள்மீது சினம் கொண்டு, அவர்கள் வருந்துமாறு ஒரு சொல்லும் கூறவில்லை. **மனுக்குலத்தைக் காக்க வந்ததை** மனத்துள் கொண்டு, தாம் வந்த வேலை நிறைவேறுவதற்காக அமைதி காத்தார்.

4. **"வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க ஒண்ணுமோ" – இடஞ்சுட்டி விளக்குக.**

**இடம்** : இறைமகனுக்குக் கொடியவர்கள் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என முயன்ற செயலை விளக்கும்போது, இரட்சணிய யாத்திரிக ஆசிரியர், "வற்றிய சிறுகிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா?" என, வினா எழுப்புகிறார்.

**விளக்கம்** : இறைமகனுக்குத் தண்டனை பெற்றுத் தந்து அழிக்க எண்ணிய கொடியவர்கள், அவரைப் '**போந்தியு பிலாத்து**' என்கிற **ஆளுநரின்முன்** குற்றவாளியாகக் கொண்டுபோய் நிறுத்தினர். அவருக்கு மரணத்தைத் தண்டனையாகப் பெற்றுத் தருவதில் உறுதியாகவும் இருந்தனர். **பெருங்கருணைக் கடலாகிய இறைமகனை** இவர்கள் தங்கள் செயலால் தண்டிக்க இயலாது என்பதை விளக்க, இரட்சணிய யாத்திரிக ஆசிரியர், **"வற்றிய சிறிய கிணறு, பெருங்கடலைத் தனக்குள் அடக்கிக்கொள்ள முயல்வதுபோல் உள்ளது"** என்று கூறுகிறார்.

5. **இறைமகனுக்குப் பொல்லாத யூதர்களும், போர்ச் சேவகர்களும் இழைத்த கொடுமைகள் யாவை?**

- ஆளுநர் போந்தியு பிலாத்து, இறைமகனுக்கு விதித்த கொலைத் தண்டனையை நிறைவேற்றக் கொடியவர்கள் விரைந்தனர். **பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர்களும்** இறைமகன் அணிந்திருந்த வெள்ளாடையைக் களைந்து, முருக்க மலர்போன்ற சிவந்த அங்கியைப் போர்த்தினர்.
- கூர்மையான முள்செடியால் பின்னப்பட்ட முடியைத் தலைமேல் வைத்து, **இரத்தம் பீறிட** அழுத்தினர். கொடுமன முரடர்கள், இறைமகனின் கையிலிருந்த கோலைப் பிடுங்கினர்.
- தலைமேல் சூட்டிய முள்முடிமேல் வன்மையாக அடித்து வேதனை செய்தனர். **திட்டியும் பழித்தும் கேலி** வார்த்தைகளைப் பேசியோர், அவர் திருமுகத்தில் எச்சிலைத் துப்பிக் கொடுமைகள் பல செய்தனர்.

**6. இரட்சணிய யாத்திரிகம் குறித்து எழுதுக.**

- ஆங்கிலக் கவிஞர் '**ஜான் பன்யன்**' எழுதிய '**பில்கிரிம்ஸ் புரோகிரஸ்**' என்னும் நூலைத் தழுவித் தமிழில், 'இரட்சணிய யாத்திரிகம்' உருவாக்கப்பட்டது.
- இதனை எச். ஏ. கிருட்டிணனார், திருநெல்வேலியிலிருந்து வெளிவந்த '**நற்போதகம்**' என்னும் ஆன்மிக மாத இதழில் தொடர்ந்து, **பதின்மூன்று ஆண்டுகள்** எழுதினார்.
- நூல்வடிவில் முதல் பதிப்பாக 1894ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூல், ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் **ஐந்து பருவங்களையும், 3766 பாடல்களையும்** கொண்டது.

**7. இறைமகனின் எளிய நிலையாக எச். ஏ. கிருட்டிணனார் கூறுவன யாவை?** (PTA - 3)

- இழிவான மக்கள் தம்மைப் பிணித்தபோது, இறைமகன் கட்டுண்டுநின்ற எளிய நிலையான செயலை, சாதாரண அன்புச் செயலாகக் கருதமுடியாது. '**பகை கொண்டு இழிசெயல்புரியும் இவர்கள், வாழும் காலம்முழுவதும் துன்பத்தில் வருந்துவார்களே**' என இரக்கப்பட்டதே காரணமாகும்.
- இரக்கம் காரணமாகக் கொண்ட அன்பினால், அக்கட்டிலிருந்து விடுபடமுடியாத ஏழையைப்போல் அமைதியுடன் நின்றார்.
- கொடியவர்கள் **இகழ்ச்சிமொழி என்னும் தீக்கொள்ளியால் சுட்டபோதும்** அவர் வேதனையால் மனம்வெந்து புண்பட்டாரே அல்லாமல், தம்மைத் துன்புறுத்தியவர்கள் வருந்துமாறு சினங்கொண்டு மறுமொழி ஏதும் கூறாமல், தாம் கருதி வந்த செயல் நிறைவேற வேண்டும் என்பதற்காக அமைதி காத்தார்.

**8. "மேதினி கீண்டு வெடித்திலது என்கொல்?"
வானம் இடிந்து விழுந்திலது என்கொல்?"
வாரி நீர் சுவறாததும் என்கொல்?"
"முடிவு இத்துணை தாழ்த்ததும் என்கொல்?" – இடம்சுட்டி விளக்குக.**

**இடம்** : ஆளுநர் பொந்தியு பிலாத்து விதித்த கொலைத் தண்டனையை நிறைவேற்ற இறைமகனை இழுத்துச் சென்ற கொடியவர்கள் இழைத்த தீங்கைக் கண்ட மக்கள் சினந்து புலம்பிக் கூறிய மொழிகளாக இது இடம்பெற்றுள்ளது.

**விளக்கம்** : இறைமகன் முன்பு அணிந்த ஆடையைக் களைந்து சிவந்த அங்கியைப் போர்த்தி, கூர்மையான முள் செடியால் பின்னப்பட்ட முடியைத் தலையில் இரத்தம் மீறிட அழுத்தியும், இறைமகன் ஊன்றிச் சென்ற கோலினைப் பிடுங்கியும் எச்சில் உமிழ்ந்தும் துன்புறுத்தியதைக் கண்ட மக்கள், "இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்க வில்லையே! வானம் இடிந்து விழவில்லையே! கடல்நீர் வற்றிப் போகவில்லையே! இவ்வுலகம் இன்னும் அழியாமல் இருப்பது ஏனோ?" என்றெல்லாம் புலம்பி வருந்தினார்கள்.

## நெடுவினா

**1. எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதிவழி நிறுவுக.** (Mar. - 20)

**முன்னுரை :**

தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் எச். ஏ. கிருட்டிணனார். இவர்தம் தந்தை கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றுவார். இதுவே இவருக்குக் கம்பராமாயணம் போலத் தாமும் காப்பியம் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொடுத்தது.

**இரட்சணிய யாத்திரிகம் :**

இவர் **தமிழாசிரியராகப் பணியாற்றிய** காலத்தில், இவர் ஆற்றிய **சமயப் பணியும், தமிழ்ப் பணியும்** மிகச் சிறப்பானவையாகும். கம்பரைப்போலத் தாமும் ஒரு காப்பியம் படைக்க வேண்டும் என்று ஆர்வப்பட்டு எழுதியதே இரட்சணிய யாத்திரிகம். இது கம்பரின் இராமாயணத்தைப் போன்று சந்த நயங்களுடன் எழுதப்பட்டுள்ளது. கம்பர் தம் கருத்தைத் தெளிவாகச் சொல்வதுபோல், இவரும் தம்முடைய இரட்சணிய யாத்திரிகம் நூலில் **இறைமகன் பற்றித் தெளிவாகக்** குறிப்பிடுகிறார்.

www.Padasalai.Net www.CBSEtips.in


**காப்பிய அமைப்பு :**

கம்பரைப்போல் இவரும் தாம் இயற்றியுள்ள இரட்சணிய யாத்திரிகப் பாடல்களில், உரிய தொடை நயங்களைப் பயன்படுத்தியுள்ளார். கம்பராமாயணத்தில் காண்டம் அமைந்திருப்பதைப் போலவே, இதுவும் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்று அமைந்துள்ளது. கம்பரைப் போலவே எச். ஏ. கிருட்டிணனாரும் **உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.** கம்பரைப் போலவே அந்தந்தச் சூழலுக்கு ஏற்பச் **சந்தநயமுடைய பாடல்களை** இயற்றியுள்ளார். **'மக்கள் புலம்பல்'** என்ற தலைப்பில் அமைந்துள்ள பாடலில், 'என் கொல்' என்ற சொல்லை ஒவ்வோர் அடியின் முதல் சீரிலும் அமைத்துள்ள கவிநயம், கிருட்டிணனாரின் **தமிழ்த் திறமைக்குச்** சான்றாகும்.

கம்பர், வடமொழிக் காப்பியமான இராமாயணத்தைத் தமிழ் மரபுக்கு ஏற்பத் தமிழில் பாடிப் பெருமைப் படுத்தினார். எச். ஏ. கிருட்டிணனார், **ஆங்கில நூலைத் தழுவி**, இயேசு பெருமானின் வாழ்வைத் தமிழில், 'இரட்சணிய யாத்திரிகம்' எனப் படைத்தார். கம்பர் பாடல்கள்போலக் கிருட்டிணனாரின் பாடல்களும் எளிதில் கற்கும் வகையில் பாடப்பட்டுள்ளமையால், எச். ஏ. கிருட்டிணனாரைக் **'கிறித்தவக் கம்பர்'** எனக் கூறல் பொருத்தமானதே.

**முடிவுரை :**

கம்பரின் பாடல்கள் மரபுக் கவிதையாக இருந்தாலும், அவற்றைச் சாதாரணமாகத் தமிழறிந்தோர் அனைவரும் புரிந்துகொள்ள முடியும். அதுபோலவே கிருட்டிணனாரின் இரட்சணிய யாத்திரிகமும் அமைந்துள்ளது. கம்பனைக் கற்கக் கற்க இனிமை அதிகமாவதுபோலக் கிருட்டிணனாரின் இரட்சணிய யாத்திரிகமும் அமைந்துள்ளது.

## கூடுதல் வினா

**2. தமக்கு இழைத்த இன்னல்களை இறைமகன் இயேசு பொறுத்த பாங்கினை விவரி.**

தம்மீது பகை கொண்டவர் இழைத்த துன்பங்களை, 'இவர்கள் தாங்கள் இழைக்கும் கொடுமைகளுக்காக வாழும் காலம் முழுவதும் துன்புறுவார்களே' என, இறைமகன் இரக்கப்பட்டாரே அன்றி, தம்மை விடுவித்துக்கொள்ள முயலவில்லை.

கொடியவர்கள் ஒன்றுகூடிப் பேசிய இழிமொழிகள், கொடிய தீக்கொள்ளிபோல் அவர் இதயத்தில் அழுந்தின. எனினும், தம்மைத் துன்புறுத்துவோர்மீது வருத்தம் கொள்ளாமல், தாம் கருதிவந்த பணியை நிறைவேற்றவே காத்திருந்தார். இறைமகனைக் கொல்லவேண்டும் என்கிற எண்ணம் கொண்டோர், ஆளுநர் போந்தியு பிலாத்துமுன் கொண்டு நிறுத்தினர். வற்றிய கிணறு பெருங்கடலைத் தனக்குள் அடக்க முயல்வதுபோல், அவர்கள் தண்டனை பெற்றுத் தருவதில் உறுதியாக இருந்தார்கள்.

தண்டனையை நிறைவேற்ற இழுத்துச் சென்ற கொடியவர்கள், இறைமகன் உடுத்தியிருந்த வெள்ளாடையைக் களைந்து, செவ்வாடையால் போர்த்தினார்கள். துன்பம்தரும் கூர்மையான முள்செடி கொண்டு ஒரு முடியைச் செய்து, அவர் தலைமேல் அழுத்தி, இரத்தம் சிந்தச் செய்தார்கள். கொடுமனம் படைத்த முரடர்கள், இறைமகனின் கையிலிருந்த கோலினைப் பிடுங்கினார்கள். முள்முடி சூட்டப்பட்ட தலைமேல் வன்மையாக அடித்தார்கள்; இழித்தும் பழித்தும் பேசியதோடு, அவர் திருமுகத்தில் எச்சில் துப்பிக் கேலி செய்தார்கள்.

நகரில் திரண்டிருந்த மக்கள், "இக்கொடுமைகள் நிகழ்ந்த பிறகும், இவ்வுலகம் வெடித்துப் பிளக்கவில்லையே! வானம் இடிந்து விழவில்லையே! கடல்நீர் வற்றிப் போகவில்லையே! இவ்வுலகம் இன்னும் அழியாமல் இருப்பதன் காரணம் என்னவோ?" என்றெல்லாம் வருந்தி உரைத்தார்கள்.

பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர்களும் எல்லா வல்லமையும் படைத்த இறைமகனை இழித்தும் பழித்தும் புறக்கணித்தும் வாயால் கூறத் தகாத மொழிகளைக் கூறிப் பழித்துரைத்தார்கள். என்றாலும், இறைமகன் இயேசு, அவர்கள் செய்த எல்லாப் பொல்லாங்குகளையும் பொறுத்துக் கொண்டிருந்தார்.

## கூடுதல் பலவுள் தெரிக

1. 'கிறித்துவக் கம்பர்' என்று போற்றப்படுபவர் ______. (PTA - 6)

அ) வீரமாமுனிவர் ஆ) சீனி. வேங்கடசாமி

இ) ஜான் பன்யன் ஈ) எச். ஏ. கிருட்டிணனார்

**விடை : ஈ) எச். ஏ. கிருட்டிணனார்**

2. 'இரட்சணிய யாத்திரிகம்', எத்தனை பருவங்களைக் கொண்டது ? (PTA - 5)

அ) ஐந்து ஆ) ஆறு இ) ஒன்பது ஈ) பன்னிரண்டு

**விடை : அ) ஐந்து**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. பாசம் என உன்னலிர் – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ______. (Sep.-20)
அ) முன்னிலைப் பன்மை வினைமுற்று ஆ) ஏவல் பன்மை வினைமுற்று
இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற் பெயர்

**விடை : அ) முன்னிலைப் பன்மை வினைமுற்று**

4. 'இரட்சணிய யாத்திரிகம்', என்ற நூலின் ஆசிரியர் யார்? (Sep.- 21)
அ) பாரதியார் ஆ) எச். ஏ. கிருட்டிணனார்
இ) நத்தத்தனார் ஈ) பெருந்தேவனார்

**விடை : ஆ) எச். ஏ. கிருட்டிணனார்**

5. 'கிறித்தவக் கம்பர்' என்றழைக்கப்படுபவர் எழுதிய நூல் ______.
அ) தேம்பாவணி ஆ) சத்தியவேத கீர்த்தனை
இ) இரட்சணிய யாத்திரிகம் ஈ) பெத்லகேம் குறவஞ்சி

**விடை : இ) இரட்சணிய யாத்திரிகம்**

6. 'பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி' – இத்தொடரில் 'கொள்ளி' எனச் சுட்டப்பட்டுள்ளது ______.
அ) பாதகர் ஆ) குழுமி இ) சொற்ற ஈ) பழிப்புரை

**விடை : ஈ) பழிப்புரை**

7. 'முள்முடி சிரத்துப் பெய்தனர்' – இதில் 'பெய்தனர்' என்பதன் பொருள் ______.
அ) ஊற்றினர் ஆ) ஊன்றினர்
இ) சொட்டினர் ஈ) வைத்து அழுத்தினர்

**விடை : ஈ) வைத்து அழுத்தினர்**

8. "கைதுறுங் கோலினைக் கவர்ந்த கண்டகர்". இதில் 'கண்டகர்' என்பது ______ எனப் பொருள்படும்.
அ) பார்த்தவர் ஆ) இழுத்தவர்
இ) கொடியவர் ஈ) கண்டு நீங்கியவர்

**விடை : இ) கொடியவர்**

9. 'ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க' – இத்தொடரில், 'உததி' எனக் குறிப்பிட்டதன் பொருள் ______.
அ) தலைவன் ஆ) தண்டனை இ) கிணறு ஈ) கடல்

**விடை : ஈ) கடல்**

10. 'எண்ண மிட்டவர் பொருந்தியு பிலாத்தெனும் இறைமுன்' – இத்தொடரில் 'இறை' என்பதன் விளக்கம் ______.
அ) பெருந்தகை ஆ) கடவுள் இ) ஆளுநர் ஈ) இயேசு

**விடை : இ) ஆளுநர்**

11. 'முடிவு இத்துணை தாழ்த்ததும் என்கொலோ' எனக் கூறியவர் ______.
அ) பொல்லாத யூதர்கள் ஆ) போர்ச் சேவகர்கள்
இ) இறைமகன் ஈ) நீசர் செயல்கண்ட மக்கள்

**விடை : ஈ) நீசர் செயல்கண்ட மக்கள்**

12. இரட்சணிய யாத்திரிகம், ______ பருவங்களாக அமைக்கப்பட்டுள்ளது.
அ) ஏழு ஆ) ஆறு இ) எட்டு ஈ) ஐந்து

**விடை : ஈ) ஐந்து**

13. இரட்சணிய யாத்திரிகம், ______ முதல் நூலைத் தழுவி எழுதப்பட்டது.
அ) வடமொழி ஆ) இலத்தீன் இ) கிரேக்கம் ஈ) ஆங்கில

**விடை : ஈ) ஆங்கில**

## இலக்கணக்குறிப்பு

கருந்தடம், வெங்குருதி, செந்நிறம் – பண்புத்தொகைகள்
வெந்து, சினந்து, போந்து, நினைந்து, நீக்க – வினையெச்சங்கள்
உன்னலிர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று
ஓர்மின் – ஏவல் பன்மை வினைமுற்று
சொற்ற, திருந்திய, பொல்லாத – பெயரெச்சங்கள்
பாதகர் – வினையாலணையும் பெயர்
ஊன்ற ஊன்ற – அடுக்குத்தொடர்
நின்றனர் – படர்க்கைப் பலர்பால் இறந்தகால வினைமுற்று.

## உறுப்பிலக்கணம்

1. பகைத்த – பகை + த் + த் + அ
   **பகை** – பகுதி; **த்** – சந்தி; **த்** – இறந்தகால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.
2. களைந்து – களை + த் (ந்) + த் + உ
   **களை** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
   **உ** – வினையெச்ச விகுதி.
3. பழித்தனர் – பழி + த் + த் + அன் + அர்
   **பழி** – பகுதி; **த்** – சந்தி; **த்** – இறந்தகால இடைநிலை; **அன்** – சாரியை;
   **அர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.
4. இடிந்து – இடி + த் (ந்) + த் + உ
   **இடி** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை;
   **உ** – வினையெச்ச விகுதி.
5. உன்னலிர் – உன் + ன் + அல் + இர்
   **உன்** – பகுதி; **ன்** – சந்தி; **அல்** – எதிர்மறை இடைநிலை;
   **இர்** – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.
6. ஓர்மின் – ஓர் + மின்
   **ஓர்** – பகுதி; **மின்** – ஏவல் பன்மை வினைமுற்று விகுதி.
7. நின்றனர் – நில் (ன்) + ற் + அன் + அர்
   **நில்** – பகுதி, 'ல்', 'ன்' ஆனது விகாரம்; **ற்** – இறந்தகால இடைநிலை; **அன்** – சாரியை;
   **அர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.
8. பொல்லாத – பொல் + ல் + ஆ + த் + அ
   **பொல்** – பகுதி; **ல்** – சந்தி; **ஆ** – எதிர்மறை இடைநிலை; **த்** – எழுத்துப்பேறு;
   **அ** – பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சிவிதி

1. முன்னுடை – முன் + உடை
   "தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" – (முன்ன் + உடை)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – முன்னுடை
2. ஏழையென – ஏழை + என **(Sep.-21)**
   "உயிர்வரின்... இ ஈ ஐ வழி யவ்வும்" – (ஏழைய் + என)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – ஏழையென
3. நுவன்றிலர் – நுவன்று + இலர்
   "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" – (நுவன்ற் + இலர்)
   "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – நுவன்றிலர்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொதுத்தேர்வு வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி – I தமிழ்

## மார்ச் – 2023

கால அளவு : 3 மணிநேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கறுப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** $14 \times 1 = 14$

1. தண்டியலங்காரம், ______ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.
அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம் இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம்

2. சுரதா நடத்திய கவிதை இதழ் ______ :
அ) ஊர்வலம் ஆ) இலக்கியம் இ) விண்மீன் ஈ) காவியம்

3. இந்தியாவின் முதல் பொது நூலகம் :
அ) கீழ்திசைச் சுவடிகள் நூலகம் ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
இ) மறைமலையடிகள் நூலகம் ஈ) கன்னிமரா நூலகம்

4. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
அ) மெய்ப்படிமம் ஆ) வினைப்படிமம் இ) உருப்படிமம் ஈ) பயன்படிமம்

5. சாப்ளினின் சாதனைப் படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' வெளியான ஆண்டு :
அ) 1930 ஆ) 1950 இ) 1960 ஈ) 1940

6. 'வெங்கதிர்' என்பதன் இலக்கணக்குறிப்பு :
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

7. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது :
அ) தாய் வழிச் சமூகமுறை ஆ) தனிக்குடும்ப முறை
இ) தந்தை வழிச் சமூகமுறை ஈ) விரிந்த குடும்ப முறை

8. ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு :
அ) 1816 ஆ) 1812 இ) 1815 ஈ) 1824

9. மகரயாழ் எத்தனை நரம்புகளைக் கொண்டது?
அ) 16 ஆ) 21 இ) 7 ஈ) 17

10. எளியது, அரியது என்பன :
அ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு
ஆ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை
இ) மெய்ப்பொருள் காண்பது – உருவு கண்டு எள்ளாதது
ஈ) சொல்வது – சொல்லியபடி செய்வது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. ‘பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப’ என்பது ______ பாவிகம்
அ) மணிமேகலையின் ஆ) கம்பராமாயணத்தின்
இ) வளையாபதியின் ஈ) சிலப்பதிகாரத்தின்

12. வெண்பாவின் ஓசை :
அ) துள்ளல் ஆ) அகவல் இ) தூங்கல் ஈ) செப்பல்

13. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் :
அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116

14. ‘தம்மனை’ என்பது ______ இல்லம்.
அ) தந்தையின் ஆ) மனைவியின் இ) உடன்பிறந்தானின் ஈ) கணவனின்

## பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 2 = 6$

15. ‘நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது’ – விளக்கம் தருக.
16. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
17. தொன்மம் – விளக்கம் தருக.
18. ‘எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்’ – யாருக்கு?

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

19. இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. எழுத்தாணியின் வகைகள் யாவை?
21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** $7 \times 2 = 14$


22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தலை, தளை, தழை

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) ஈந்த ஆ) பேசுவார்

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) தனியாழி ஆ) அருங்கானம்

25. கலைச் சொல்லாக்கம் தருக.
அ) Passport ஆ) Folder
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
பின்வரும் மரபுச் சொல்லைத் தொடரில் அமைத்து எழுதுக.
ஆற அமர

26. படத்திற்குப் பொருத்தமான பின்வரும் திருக்குறளின் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.



உருவுகண்டு ______ வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
______ அன்னார் உடைத்து.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

27. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமை யினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
ரவைக்கு சித்தப்பன காவலுக்கப் போவ சொல்.

29. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) வெங்காயம்
ஆ) தலைமை

30. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

## பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

31. 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** $2 \times 4 = 8$

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
37. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
38. தாய்வழிக் குடும்பம் குறித்து பக்தவத்சல பாரதி கூறும் கருத்துகளை விவரிக்கவும்.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** $3 \times 4 = 12$

39. அ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.
– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

வெட்டி யடிக்குது மின்னல் – கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது!
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று!
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்!
எட்டுத் திசையும் இடிய – மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) குன்றின் மேலிட்ட விளக்குபோல

(அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

42. அ) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

(அல்லது)

ஆ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

43. தமிழாக்கம் தருக.
I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone who is physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நகரங்கள், சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் 'சென்னை' இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்தகொள்ள வேண்டிய ஒன்று.

வினாக்கள் :

1. பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?
2. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என அழைக்கப்படும் நகரம் எது?
3. நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன ?
4. நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. $3 \times 6 = 18$

44. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) மயிலையார் ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. அ) 'கோடை மழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

(அல்லது)

ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்கவும்.

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. $4 + 2 = 6$

அ) "தெய்வமணிமாலை" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள 'ஒருமையுடன்' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'சினம்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# முதல் இடைப்பருவத் தேர்வு

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 45

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (பலவுள் தெரிக)** $5 \times 1 = 5$

1. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

2. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______.

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

3. 'நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது' என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

5. 'முதல்கல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) பாரதியார் ஆ) பூமணி இ) சுரதா ஈ) உத்தம சோழன்

### பகுதி – II

#### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.** $3 \times 2 = 6$

6. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?
7. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
8. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
9. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

#### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** $2 \times 2 = 4$

10. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
11. பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?
12. புக்கில், தன்மனை, சிறுகுறிப்பு எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பிரிவு – 3

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** $7 \times 1 = 7$

13. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
உள்ளங்கை நெல்லிக்கனிபோல.
14. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அலை, அளை, அழை
15. தமிழாக்கம் தருக.
அ) Biography ஆ) Lobby
16. உறுப்பிலக்கணம் தருக.
விம்முகின்ற
17. புணர்ச்சி விதி தருக.
வெங்கதிர்
18. இலக்கணக்குறிப்பு தருக.
அ) பொய்யா ஆ) மாதவம்
19. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

பகுதி – III

பிரிவு – I

**கீழ்க்காணும் சிறுவினாக்களுக்கு விடை தருக.** $2 \times 4 = 8$

20. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

(அல்லது)

பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

21. ‘ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்’ – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

(அல்லது)

சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை விளக்குக.

பிரிவு – II

**அணியைச் சான்றுடன் விளக்குக.** $1 \times 4 = 4$

22. பொருள் வேற்றுமையணி (அல்லது) நிரல் நிறைஅணி.

பகுதி – IV

**கீழ்க்காணும் நெடுவினாவிற்கு விடை தருக.** $1 \times 5 = 5$

23. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(அல்லது)

நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

(அல்லது)

பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** $4 + 2 = 6$

26. “ஓங்கலிடை.....” எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை எழுதுக.
“நன்று” என முடியும் குறள்.

வாழ்க! வளர்க! வெல்க!

Kindly send me your study materials to padasalai.net@gmail.com